வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu
வார மலர்




Email : news@eelanadu.lk | மலர் : 04 | 15.01.2023 ஞாயிற்றுக்கிழமை | இதழ் : 37 | பக்கங்கள் : 20


08 இலங்கை அரசியலில் புதிய அணி சேருகைகள்!


09 கொள்கை வழியாக இணைய முடியாதவர்கள் தமிழ்த் தேசியத்தை எவ்வாறு காப்பாற்றுவர்?


10 தமிழர் திருநாளான பொங்கல் இந்துக்களின் மதப் பண்டிகையா?


11 தமிழ் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?

# தீர்வுக்காக அனைத்து தமிழ் கட்சிகளும் வேற்றுமை மறந்து செயற்படவேண்டும்!

## பொங்கல் வாழ்த்து செய்தியில் யாழ். ஆயர் அழைப்பு



யாழ்ப்பாணம், ஜன. 15

“பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில் நிரந்தரத் தீர்வை ஏற்படுத்த தமிழ்க் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்படவேண்டுமெனத் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன் வேண்டுகிறோம்.”

-இவ்வாறு யாழ். மறைமாவட்ட ஆயர் மேதகு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை தனது பொங்கல் தின வாழ்த்துச் செய்தியின் அழைப்பு விடுத்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

19

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக போட்டியிட 5 கட்சிகள் உடன்பாடு!

## குத்துவிளக்கு சின்னத்தில் போட்டியிட முடிவு



யாழ்ப்பாணம், ஜனவரி 15

தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ), ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி (புளொட்), ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), தமிழ்த் தேசியக் கட்சி மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகிய 5 தமிழ்க் கட்சிகளும் இணைந்து புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் நேற்று கைச்சாத்திட்டுள்ளன.

19




# ஜனாதிபதி தலைமையில் இன்று தேசிய பொங்கல் விழா யாழில்!

யாழ்ப்பாணம், ஜன. 15

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் தேசிய பொங்கல் விழா இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறுகிறது.

தேசிய பொங்கல் விழா இன்று ஞாயிற்றுக்

19

# வாக்கு கேட்டு வருபவர்களுக்கு செருப்பைக் கழற்றி அடிப்போம்!

## வலி. வடக்கு மக்கள் ஆக்ரோஷம்

யாழ்ப்பாணம், ஜன. 15

அரசியல்வாதிகள் யாராவது வாக்கு கேட்டு வந்தால் செருப்பு கழற்றி அடிப்போம் என வலி. வடக்கு மக்கள் ஆக்ரோஷமாக எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, அங்கஜன் இராமநாதன் வழங்கிய வாக்குறுதிக்கு என்ன நடந்தது எனவும் மீள்குடியேற்றப்படாத பலாலி வடக்கு மக்கள் கேள்வியெழுப்

19

# சர்வதேசத்தின் நம்பிக்கையை பெறும் தலைமைத்துவமே நாட்டுக்கு தேவை!

## எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்து

கொழும்பு, ஜன. 15

”நாட்டை மீட்பதற்கு பணத்தை அச்சடித்தல் மட்டும் போதாது. சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறக் கூடிய தலைமைத்துவம் தேவை.”

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார்.

‘பிரபஞ்சம்’ வேலைத்திட்டத்தின் கீழ் 70 ஆவது கட்டமாக ஐம்பது இலட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை பஸ் ஒன்று தமனல்வில

19

# அரச வைத்தியசாலைகளில் பெரும் மருந்துத் தட்டுப்பாடு

## மருத்துவர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜன.15

நாடளாவிய ரீதியில் உள்ள அரச வைத்தியசாலைகளில் மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மருந்துப் பொருட்கள் தட்டுப்பாடு காரண

19

# 30 ஆண்டுகளுக்கு மேல் வழிபாடின்றி இருக்கும் ஆலயங்களை ஜனாதிபதி விடுவிக்கவேண்டும்!

## அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை



யாழ்ப்பாணம், ஜன. 15

பொங்கல் வழிபாட்டுக்கு வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக்கள் வழிபாடு செய்ய முடியாமல் இருக்கும் ஆலயங்களை இந்நாளிலேயே விடுவிக்க உத்தரவு இடவேண்டும் என அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

சைவத் தமிழர்களின் முக்கிய வழிபாட்டு நாளாகிய பொங்கல் திருநாளை மதித்து யாழ்ப்

19

# கொழும்பு மேயர் வேட்பாளராக முஜிபூரை களமிறக்க தீர்மானம்

கொழும்பு, ஜன.15

கொழும்பு மாநகர சபைக்கான மேயர் வேட்பாளராக பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மானை களமிறக்குவதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழுக் கூட்டம் கட்சி தலைவர் சஜித்

19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

## இப்படியும் நடக்கிறது...!

நண்பர் ஒருவர் லண்டனிலிருந்து போன் பண்ணினார். எடுத்த எடுப்பிலேயே சொன்னார்:

'புலிகளுடன் பேச்சுவார்த்தை என்று தொடங்கிய ரணில், கருணாவைப் பிரித்து புலிகளை இல்லாமல் செய்தார். அதே போல, இப்போது தமிழ்த் தரப்புடன் பேச்சுவார்த்தை என்று கூட்டமைப்பைப் பிரித்து அதனையும் இல்லாமல் பண்ணிவிட்டார் கவனித்தீர்களோ?' என்று.

அவரை இடைமறித்து நான் சொன்னேன், 'ஒரு திருத்தம், புலிகளிலிருந்து கருணாவைப் பிரித்தது ரணில் இல்லை. அவர் பிரிந்து சென்ற பின்னர் அவருக்கு பாதுகாப்பு வழங்கியது மாத்திரம்தான் ரணில் செய்தது. அதேபோலத்தான் இப்போது தமிழரசு கூட்டமைப்பிலிந்து போனதற்கும் ரணிலுக்கும் எந்தச் சம்பந்தமும் இருப்பதாக தெரியவில்லையே' என்று.

'இருக்கலாம். ஆனால் ரணிலோடு பேச்சுக்குப் போனால் இப்படித்தான் நடக்கும் என்பதைத்தான் சொல்ல வந்தேன்' என்றார் நண்பர்.

புலிகளிலிருந்து கருணா பிரிந்தது எப்படி தனிப்பட்ட நலன் சார்ந்த விவகாரமோ அதேபோலத்தான் கூட்டமைப்பிலிருந்து தமிழரசு வெளியேறியதும்.

இப்படியொரு சம்பவம் நடக்கும் என்பது - சம்பந்தனுக்கு பிந்திய காலத்தில் நடக்கும் என்பது பலரும் எதிர்பார்த்ததுதான். ஆனால் அவர் இருக்கும்போதே தாம் நினைத்ததை செய்து முடித்திருக்கிறார்கள்.

அதுவல்ல இன்று நாம் இங்கே சொல்ல வருவது, நண்பர் ரணிலின் பேச்சுவார்த்தை பற்றி பிரஸ்தாபித்தபோதுதான் அந்த விடயத்தைச் சொல்ல மறந்துபோனது ஞாபகத்ததிற்கு வந்தது.

கடந்த டிசெம்பர் மாதம் தமிழர் பிரச்னைக்கு தீர்வு காணும் முயற்சியாக அனைத்து கட்சி மாநாடு நடந்து முடிந்திருந்தது.

அந்த மாநாட்டில் உடனடியாகச் செய்யவேண்டிய சில விடயங்கள் பற்றி முக்கியமாக பேசப்பட்டது.

நீண்ட காலமாக சிறையில் இருக்கும் அரசியல் கைதிகளின் விடுதலை, இராணுவத்தினர் வசம் இருக்கும் தனியார் காணிகளை விடுவிப்பது, காணாமல்போனோர் விவகாரம் போன்றவற்றையே உடனடி பிரச்னையாக பேசப்பட்டது.

அதேவேளை, அரசியலமைப்புச் சட்டத்தில் தற்போது இருக்கின்ற சட்டங்களை முழுமையாக அமுல்படுத்துவது என்றும் ஒரு கோரிக்கை தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்டது.

அது என்ன தற்போது இருக்கும் சட்டங்கள் என்று நம்மில் சிலர் விழி பிதுங்கி நின்றிருப்பர். வேறு ஒன்றுமல்ல, பதின்மூன்றாம் அரசியலமைப்புச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதுதான் அந்தக் கோரிக்கை. அதனை நேரடியாகச் சொல்லும் 'தில்' நமது தலைவர்களிடத்தில் இருக்கவில்லை. அதனை வலியுறுத்தினால், எங்கே, பதின்மூன்றுடன் தமிழர் தரப்பு நின்றுவிட்டது என்று தமிழர் தரப்பிலிருந்தே கத்தத் தொடங்குவார்கள் என்ற பயம் அதற்கு காரணமாக இருக்கலாம். ஆனால் இருப்பதை செய்யச் சொல்லிக் கேட்பது ஒன்றும் தவறான விடயமல்லவே.

சரி அதனை விடுவோம். ஆனால் மேலே சொன்ன அனைத்துக் கட்சிக் கூட்டத்துக்கு பின்னர், தமிழரசுக் கட்சியின் கோரிக்கையின் பேரில் டிசெம்பர் 21 ஆம் திகதி ரணில் தமிழரசின் சம்பந்தனையும், சுமந்திரனையும் சந்தித்தார். அது உத்தியோகப்பற்றற்ற பேச்சு என்று ஜனாதிபதி தரப்பில் விளக்கமும் அளிக்கப்பட்டது.

ஆனால், அந்தப் பேச்சின் பின்னர் ஜனாதிபதி தரப்பில் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில், தற்போதைய சட்டத்தில் அமுல்படுத்தப்படாத விடயங்களை தனக்கு பட்டியலிட்டுத் தருமாறு கேட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் கோரிக்கை விடுத்த தமிழர் தரப்பு பதின்மூன்றை முழுமையாக அமுல்படுத்தவேண்டும் என்று கோரிக்கை விடுத்து வருவது இன்று நேற்றல்ல. இந்த விடயம் குறித்து பல ஆண்டுகளாகவே கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது.

ஆனால், அப்படி எந்த எந்த விடயங்கள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பதை ஜனாதிபதி கேட்டபோது அதனை உடனடியாகவே அவர் முகத்தில் எறிந்ததுபோல போடுவதற்கு நம்மவர்களிடம் இன்று வரை ஓர் ஆவணம் இல்லை.

ஐந்து வருடங்கள் ஆட்சியில் இருந்தவர்கள். அதிலும் சட்டம் தெரிந்தவர், நீதிவான் என்று வலுக்கட்டாயமாக அரசியலுக்கு அழைத்து வரப்பட்ட சி.வி.விக்கினேஸ்வரனிடம்கூட அப்படியொரு ஆவணம் இல்லை.

ஆனால் அந்த ஐந்து ஆண்டுகளும் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த சி. தவராசா ஒருவரிடமே இதுபோன்ற ஒரு ஆவணம் தயாராக இருந்தது - இருக்கின்றது.

அதனால்தான் அந்த ஆவணத்தை அவர் சார்ந்த ஈ.பி.டி.பி தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார்.

உடனே ஒரு தமிழரசு 'அல்லக்கை' அதனை கேள்விக்குட்படுத்தியிருந்தமை ஈழநாடுவில் செய்தியாக வந்திருந்தது.

ஜனாதிபதி தரப்பிலிருந்து விடுக்கப்பட்ட கோரிக்கையை கண்டுகொள்ளாத தமிழர் தரப்பு, கடைசியாக கடந்த பத்தாம் திகதி நடந்த கூட்டத்தில் மீண்டும் அதே கோரிக்கை விடுத்துள்ள அதேவேளையில், அதற்கு ஜனாதிபதிக்கு காலக்கெடு கொடுத்திருக்கின்றது.

பல தடவைகள் இந்தப் பத்தியில் குறிப்பிட்டதுபோல பாவம் தமிழ் மக்கள் என்று அனுதாபப்படத்தான் முடிகின்றது.

**- ஊர்க்குருவி.**

# ஈஸ்டர் தாக்குதல் தீர்ப்பை வரவேற்கின்றார் கர்தினால்

கொழும்பு, ஜன. 15

260இற்கும் மேற்பட்டவர்களைக் கொன்ற ஈஸ்டர் ஞாயிறு குண்டுவெடிப்புக்கு இழப்பீடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதி மற்றும் நான்கு அதிகாரிகளுக்கு உத்தரவிட்ட உயர்நீதிமன்றத் தீர்ப்பை கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை வரவேற்றுள்ளார்.

மூன்று தேவாலயங்கள் மற்றும் மூன்று சொகுசு ஹோட்டல்களை குறிவைத்து தாக்குதல் நடத்துவதற்கு குறைவான பாதுகாப்பே வழிவகுத்தது எனத் தெரிவித்து பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தாக்கல் செய்த வழக்கில் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இலங்கை வரலாற்றில் மிக மோசமான தாக்குதல்களை முன்னாள் ஜனாதிபதியும் அவரது அதிகாரிகளும் தடுக்கத் தவறிவிட்டனர் என நீதிமன்றம் அறிவித்துள்ள நிலையில், சிறிசேனவும் வழக்கில் சம்பந்தப்பட்டவர்களும் தீர்ப்பு குறித்து பகிரங்கக் கருத்து எதுவும் தெரிவிக்கவில்லை.

இத்தீர்ப்பின் அடிப்படையில் இந்த வழக்கு தொடர்ந்தும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாகவும் முழு உண்மை வெளிவரும்போதுதான் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கும் என தான் நம்புவதாகவும் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மேலும் கூறினார். (அ)

# அதிக எரிசக்தி உற்பத்தி செய்ய இலங்கையில் தொடர்ந்து முதலீடு செய்ய இந்தியா விருப்பம்!

கொழும்பு, ஜன. 15

நிலையான சக்தி மூலங்களிலிருந்து அதிக எரிசக்தியை உற்பத்தி செய்ய இலங்கையில் தொடர்ந்து முதலீடு செய்ய இந்தியா விருப்பம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான இந்திய தூதுவர் கோபால் பாக்லே இந்த விடயத்தைத் தெரிவித்தார்.

பிரதமர் நரேந்திர மோடியை மேற்கோள் காட்டி, மறு பயன்பாடு, மறுசுழற்சி, மறு வடிவமைப்பு, மறு உருவாக்கம் போன்ற நிலைத்தன்மையை நோக்கிய முக்கியமான படிகள் இந்தியாவின் கலாசார நெறிமுறைகளின் ஒரு பகுதியாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் அபரிமிதமான புதுப்பிக்கத்தக்க சக்தி உள்ளது என்பதை எடுத்துக் காட்டிய பாக்லே, நிலையான சக்தி மூலங்களிலிருந்து அதிக சக்தியை உற்பத்தி செய்வதற்காக இலங்கையில் இந்தியா தொடர்ந்து முதலீடு செய்யும் எனவும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான ஒத்துழைப்பின் முக்கிய துறையாக கல்வி விளங்குவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மெட்ராஸ், இலங்கை தொழில்நுட்ப வளாகத்தில் முதுகலைப் படிப்புகளை விரிவுபடுத்தத் தொடங்கியுள்ள து.

மேலும், இலங்கை மாணவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் இளங்கலை முதல் முனைவர் பட்டப்படிப்பு வரை நூற்றுக்கணக்கான முழு நிதியுதவியுடன் கூடிய புலமைப்பரிசில்கள் வழங்கப்படுகின்றன.

இலங்கையில் கல்வியைத் தொடரும் பொருளாதாரத்தில் பின்தங்கிய பிரிவைச் சேர்ந்த மாணவர்களுக்கு நிதி உதவித் திட்டங்கள் தனித்தனியாக வழங்கப்படுவதாக கோபால் பாக்லே மேலும் கூறினார். (அ)

# வெளிநாடுகளில் பணி புரிந்து வரும் இலங்கையருக்கு நிவாரணத் திட்டம்

கொழும்பு, ஜன. 15

வெளிநாடுகளில் பணி புரிந்து வரும் இலங்கையர்களின் குடும்பங்களுக்கு நிவாரணத் திட்டத்தை ஆரம்பிக்க இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய ஜப்பான், கொரியா மற்றும் அவுஸ்திரேலியா தவிர்ந்த ஏனைய நாடுகளில் உள்ள புலம்பெயர் தொழிலாளர் குடும்பங்களுக்கு இந்த நிவாரணத் திட்டம் பயன்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த திட்டம்மானது புலம்பெயர் தொழிலாளர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை உபகரணங்கள் மற்றும் சுயதொழில் உதவிகளை வழங்கும் வேலைத் திட்டமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 5 வருடங்களுக்கு மிகைப்படாமல் வெளிநாட்டில் இருந்து இலங்கைக்கு வந்துள்ள தொழிலாளர்களின் பிள்ளைகளும் பாடசாலை உபகரணங்களைப் பெற்றுக்கொள்ளும் திட்டத்துக்கு விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் வெளிநாடுகளில் இருந்து 5 வருடங்கள் பூர்த்தியாகாத புலம்பெயர்ந்த தொழிலாளர்களுக்கு 50,000 ரூபா பெறுமதியான சுயதொழில் உதவி வழங்கும் வேலைத்திட்டத்தையும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

# ஆசிரிய கலாசாலையில் பொங்கல் விழா நாளை

யாழ்ப்பாணம், ஜன. 15

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பொங்கல் விழா நாளை காலை 8.30 மணிக்கு கலாசாலை முற்றத்தில் கலாசாலை நுண்கலை மற்ற ஏற்பாட்டில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வாழ்நாள் பேராசிரியரும் யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கப் பெருந்தலைவருமாகிய பேராசிரியர் அ. சண்முகதாஸ் மற்றும் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் ஆகியோர் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வர்.

பொங்கல் செயற்பாடும் அதற்கான விளக்கங்களும் என்ற பொருளில் முனைவர் மனோன்மணி சண்முகதாஸ் செயன்முறை ரீதியாக ஆசிரிய மாணவர்களுக்கு விளக்கவுரை வழங்குவார்.

இதேவேளை, கலாசாலையில் அமைந்துள்ள யோகலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று காலை 11 மணிக்கு (ஞாயிற்றுக்கிழமை) பொங்கல் வழிபாடு நடைபெறும் என்றும் அதிபர் அறிவித்துள்ளார்.(அ)

# புதிய மின் கட்டணத் திருத்தம் கருத்து கணிப்பு பெப். 7 முதல்

கொழும்பு, ஜன. 15

புதிய மின் கட்டண திருத்தம் தொடர்பில் மக்களின் கருத்துகளை கேட்டறிவதற்கு பொது பயன்பாடுகள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளது.

அதன்படி எதிர்வரும் 7ஆம் திகதி வரை மக்கள் கருத்துக் கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் முதல் கட்டமாக மக்கள் தமது கருத்துகளை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவிக்க முடியும் என்பதோடு, அதன் பின்னர் மக்களிடம் நேரடியாக கருத்துகள் கேட்டறியப்படவுள்ளதாகவும் பொது பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (அ)



## திருநெல்வேலி சந்தை பகுதியில் பொங்கல் வியாபாரம் மும்முரம்!

யாழ்ப்பாணம், ஜன. 15

தைப்பொங்கல் பண்டிகை இன்று ஞாயிற்றுக்கிழமை கொண்டாடப்படும் நிலையில் யாழ்ப்பாணம், திருநெல்வேலிச் சந்தையில் பொங்கல் வியாபாரம் சூடு பிடித்தது.

பொதுமக்கள் தைப்பொங்கலுக்கு தேவையான பானை, அகப்பை, கரும்பு, பட்டாசு, பழவகை என்பவற்றை வாங்குவதில் ஆர்வம் காட்டினர்.

யாழ்ப்பாணத்தில் பல பாகங்களிலும் தைப்பொங்கல் வியாபாரங்கள் இடம்பெற்றதை அவதானிக்க முடிந்தது. (அ)

# ஐ.எம்.எப். உதவி தாமதம் நெருக்கடிகள் அதிகரிப்பு!

## கூறுகிறார் செஹான் சேமசிங்க



கொழும்பு, ஜன. 15

சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை தாமதப்படுத்திய இரு தரப்பு கடனாளர்களிடமிருந்து கடன் உத்தரவாதங்களைப் பெற முடியாமல்போனமை மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

இருதரப்பு கடன் வழங்குநர்களுடன் விரைவாக உடன்படிக்கைகளை எட்டுவதில் தாமதம் ஏற்பட்டதால், சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுச் சபையின் அனுமதி மற்றும் நிதி உதவி கிடைப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கடனுதவியை பெற்றுக் கொள்வதற்கான பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தாலும் தொழில்நுட்ப விடயங்களில் காணப்படும் நிச்சயமற்ற தன்மையும், அனுமதி கிடைப்பதில் ஏற்படும் தாமதமும் மக்களுக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாக செஹான் சேமசிங்க குறிப்பிட்டார்.

சர்வதேச நாணயநிதியத்துடனான பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் பரஸ்பர புரிதல் மூலம், இந்த செயல்முறையின் இறுதிக் கட்டம் விரைவில் நடைபெறும் என தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர் கூறினார்.

இலங்கை போன்ற ஒரு சிறிய நாட்டுக்கு சர்வதேச நாணய நிதியம் மற்றும் பல தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்களின் கணிசமான தலையீடு அவசியம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (அ)

# தேசிய பொங்கல் எனக் கூறி ரணில் தாயகத்தில் காலடி வைக்கக்கூடாது

## அருட்தந்தை மா.சக்திவேல் கூறுகிறார்

கொழும்பு, ஜன. 15

தை பொங்கல் எனக் கூறிக்கொண்டு ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதோ அவரின் வருகையை வரவேற்பதையோ ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது என அருட்தந்தை மா.சக்திவேல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

தைப்பொங்கல் என்பது பானையும், அரிசியும், அடுப்பும் சம்பந்தப்பட்ட விடயம் மட்டுமல்ல உழைப்பாளரின் வியர்வை. அதனால் விளைந்த விளைச்சல் உழைப்பு, உழைப்புக்கு அடிப்படை காரணமான மண் அதனுடைய உரிமை கலந்த விடயமாகும். இதிலே வாழ்வும் வளமும் தங்கி இருக்கின்றது.

கலாசார சிறப்போடு தேச உணர்வும் அதன் பாதுகாப்பும் அதற்கான உறுதியும் மேலோங்கி இருக்கின்றது. இவற்றையெல்லாம் சிதைத்தழித்து தொடர் அழிவுகளுக்கும் திட்டமிட்டு கொண்டு தேசிய பொங்கல் என்று ஜனாதிபதி தமிழர் தாயகத்தில் காலடி வைப்பதோ அவரின் வருகையை வரவேற்பதையோ நாம் எந்த வகையிலும் அங்கீகரிக்க முடியாது.

தேசிய தைப் பொங்கல் என அரசியல் நாடகம். இதனை ஏற்க தமிழர்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை போலி தேசியவாதிகள் உணர வேண்டும். தமிழர்களின் கலாசாரத்தை முற்றாக அழிப்பதற்கு போதைப் பொருட்களின் பாவனையும் எங்கும் வியாபித்துள்ளது.

இதற்குப் பின்னால் அரச படைகள் உள்ளதாகவும் மக்கள் சந்தேகிக்கின்றனர். நாட்டில் வேறெந்த பிரதேசத்திலும் இல்லாத அளவுக்கு முப்படையினரும் காவல்துறையினரும் அவர்களுக்கு உதவியாக இரகசிய காவல்துறையும் அவர்களின் புலனாய்வாளர்களும் அவர்களோடு சேர்ந்து இயங்கும் ஒட்டுக் குழுக்களும் பலமாக இருக்கும்போது போதைப் பொருட்கள் வடக்கு - கிழக்கில் அதிகரித்துள்ளதென்றால் அதற்கு பொறுப்பு கூறவேண்டியது பாதுகாப்பு அமைச்சும் பாதுகாப்புக்கு பொறுப்பான ஜனாதிபதியுமே.

இத்தகைய கலாசார அழிவை தமிழர் தாயகத்தில் விதைத்து அதன் அறுவடையில் மகிழ்ந்தா ஜனாதிபதி தேசிய தைப் பொங்கல் என தமிழர் தாயகத்தில் காலடி வைக்கின்றார் என்றே கேட்கின்றோம் - என்றார். (அ)

# ரீயூனியன் தீவில் இருந்து நேற்று 46 இலங்கையர்கள் நாடு கடத்தல்

கொழும்பு, ஜன. 15

கடல் மார்க்கமாக ரீயூனியன் தீவுக்குள் சட்டவிரோதமாக பிரவேசிக்க முயற்சித்த 46 இலங்கை பிரஜைகளை அந்த நாட்டு அதிகாரிகள் விமானம் மூலம் திருப்பி அனுப்பியுள்ளனர்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 2 ஆம் திகதி நீர்கொழும்பில் இருந்து பல நாள் மீன்பிடிப் படகில் குறித்த நபர்கள் புறப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

தனிநபர்கள் குழுவில் பல நாள் மீன்பிடிக் கப்பலின் பணியாளர்கள், இரண்டு பெண்கள் மற்றும் ஒரு குழந்தை உட்பட 43 ஆண்கள் இருந்தனர்.

2022 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 24 ஆம் திகதி பிரான்சின் ரீயூனியன் தீவுக்குள் சட்டவிரோதமாக நுழைய முற்பட்டபோது அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், மட்டக்களப்பு, சிலாபம் மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் வசிப்பவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதேவேளை, இவர்கள் அனைவரும் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் ஒப்படைக்கப்படவுள்ளனர்.

இந்த நடவடிக்கைக்கு தலைமை தாங்கிய தெஹிவளையைச் சேர்ந்த ஆட்கடத்தல்காரர்கள், ஒவ்வொரு நபரிடமிருந்தும் 200,000 ரூபா தொடக்கம் 4.5 மில்லியன் ரூபா வரை அறவீடு செய்துள்ளதாக தெரியவந்துள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# யாழ்ப்பாணத்தில் கைவிரல் வெட்டி மோதிரம் கொள்ளை

யாழ்ப்பாணம், ஜன. 15

வீட்டில் நுழைந்த கொள்ளையர்கள், வீட்டிலிருந்த ஒருவரின் மோதிரத்தை கொள்ளையடிக்க முற்பட்டு, அது முடியாமல்போனதும், அவரது விரலை வெட்டி மோதிரத்தை கொள்ளையிட்டனர்.

பருத்தித்துறை, தம்பசிட்டி, பூவக்கரைப் பகுதியில் இந்த சம்பவம் நடந்தது.

கடந்த வியாழக்கிழமை இந்த சம்பவம் நடந்தது. மட்டக்களப்பைச் சேர்ந்த பழனியாண்டி என்பவர், தனது சகோதரர் வீட்டில் தங்கியிருந்த போதே இந்த சம்பவம் நடைபெற்றது.

வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்த கொள்ளையர்கள் அவரது விரலில் இருந்த மோதிரத்தை கொள்ளையிட முயன்றனர். ஆயினும் அதனை கழற்ற முடியவில்லை. இதையடுத்து, கைவிரலை வெட்டி, மோதிரத்தை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

காயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார். (அ)

# பாடசாலை மாணவர்களுக்கு சீனாவிலிருந்து சீருடை துணி

கொழும்பு, ஜன. 15

பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் தேவையில் 70 வீதத்தை நிவர்த்தி செய்யும் வகையில் சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள பாடசாலை சீருடைத்துணிகள் நேற்று நாட்டுக்கு கிடைத்துள்ளன. சீன பதில் தூதுவர் ஹூ வெய் கல்வியமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அதனை கையளித்தார்.

மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான 70 வீத சீருடைத் துணியாக 88,62,990 மீற்றர் சீருடைத் துணி கிடைத்துள்ளதாக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

சீனாவினால் நன்கொடையாக வழங்கப்பட்டுள்ள பாடசாலை மாணவர்களுக்கான சீருடைத் துணி நேற்று இலங்கையிலுள்ள பதில் சீனத் தூதுவர் ஹூ வெய்யினால் கல்விஅமைச்சர் சுசில் பிரேமஜயந்தவிடம் கொழும்பு துறைமுகத்தில் வைத்து கையளிக்கப்பட்டது.

மாணவர்களுக்கு வழங்குவதற்கு வசதியாக சீருடைத் துணிகள் யாவும் வெட்டப்பட்டு பொதியிடப்பட்டுள்ளது.

சீருடைத்துணிகளின் எஞ்சிய 30 வீதமானவை விரைவில் கிடைக்குமென்றும் கல்விய மைச்சர் தெரிவித்தார். (அ)

# மார்ச் 20 ஆம் திகதிக்கு முன் மாணவர்களுக்கு சீருடைகள்



கொழும்பு, ஜன. 15

2023ஆம் ஆண்டுக் கான சீருடைகள் மார்ச் 20ஆம் திகதிக்கு முன் னர் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் என கல்வி அமைச் சர் சுசில் பிரேம் ஜயந்த தெரிவித்தார்.

முதலாவது தொகை சீருடை தொகையை சீன அரசாங்கம் நேற்று முன் தினம் வெள்ளிக் கிழமை கல்வி அமைச்சி டம் கையளித்தபோதே அவர் இதனை கூறினார். (அ)

ஈழநாடு



# கூட்டுத் தலைமையாகவும் சுழற்சி முறையிலும் தமிழ் கூட்டமைப்பின் தலைமைத்துவம் அமையும்

## நேற்று கைச்சாத்திடப்பட்டது 5 கட்சிகளின் உடன்பாடு



"தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சி முறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான முழுமையான யாப்பு உருவாகின்ற போது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும்."

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் நேற்று காலையில் ஏற்படுத்திக் கொண்ட புதிய கூட்டணி புரிந்துணர்வு உடன்படிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயரில் செயலாற்றி வந்திருக்கும் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் மற்றும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி ஆகிய கட்சிகளும் மற்றும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி, தமிழ்த் தேசியக் கட்சி, ஜனநாயகப் போராளிகள் கட்சி ஆகியவற்றிற்கிடையிலான புரிந்துணர்வு உடன்படிக்கையின் முழு விவரம் வருமாறு:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றாக இருந்த இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பரந்துபட்ட ஐக்கிய முன்னணியாக, எமது இனத்திற்கான பலம் பொருந்திய கட்டமைப்பாக தோற்றம் பெறவேண்டும் என்ற கோரிக்கையை மறுதலித்தும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சியாக உருவாக்குவதற்கு மறுப்புத் தெரிவித்தும் தானாகவே அதிலிருந்து வெளியேறியதால் மேற்கண்ட கட்சிகள் தமிழ் மக்களின் நலன்களையும் நம்பிக்கையையும் காப்பாற்றும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக எம்மைப் பிரகடனப்படுத்திக் கொண்டுள்ளோம்.

இந்திய-இலங்கை ஒப்பந்தத்தில் இரு தரப்பு அரசாங்கங்களும் ஏற்றுக் கொண்ட தமிழ் மக்களின் வரலாற்று பூர்வ வாழ்விடமான இணைந்த வடக்கு-கிழக்குப் பிராந்தியத்தில் தமிழ் மக்களின் இறையாண்மையின் அடிப்படையிலும் சுயநிர்ணய உரிமையின் அடிப்படையிலும் இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவமாக வாழ்வதை உறுதி செய்யும் வகையில், ஒற்றையாட்சி முறையை நிராகரித்து சமஷ்டி அடிப்படையிலான பூரண பொறுப்பு வாய்ந்த சுயாட்சியை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டு பல்வேறுபட்ட அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டுவரும் மேற்கண்ட அரசியல் அமைப்புகள் தமது நோக்கங்களை வெற்றி கொள்ளும் பொருட்டு, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வலுப்படுத்தி இயங்குவது என்று தீர்மானித்துள்ளன. மேலும் இலங்கைத் தீவில் எமது மரபுவழித் தாயகத்திற்கு வெளியே வாழ்ந்து கொண்டிருக்கும் தமிழ் பேசும் மக்களின் சட்ட பூர்வமானதும், ஜனநாயக ரீதியிலானதுமான சகல உரிமைகளை நிலை நாட்டுவதையும் பேணிப் பாதுகாப்பதையும் நோக்கமாகக் கொண்டு இக்கூட்டமைப்பு செயல்படும்.

தமிழ்த் தேசியப் பரப்பில் இயங்கி வரும் பல்வேறு கட்சிகள் 2001ஆம் ஆண்டிலிருந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்பட்டு வருகின்ற போதிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒரு கட்டமைக்கப்பட்ட அரசியல் நிறுவனமாக இல்லாமையினால், மேற்கூறிய கட்சிகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கட்டமைக்கப்பட்ட வலுவான அரசியல் சக்தியாக உருவாக்குவதற்குத் தீர்மானித்துள்ளன.

மேற்கூறிய அரசியல் கட்சிகளுக்கிடையில் எட்டப்பட்டிருக்கும் கருத்தொற்றுமையின் பிரகாரம், பின்வரும் விடயங்கள் இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ளடக்கப்படுகின்றன.

1. மேற்கூறிய அரசியல் கட்சிகள் தொடர்ந்தும் ஒற்றுமையாகவும் கூட்டாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக செயற்படும்.

2. மேற்கண்ட கட்சிகளின் தலைவர்கள், பிரதிநிதிகளை உள்ளடக்கிய தேசிய செயற்குழு ஒன்று அமைக்கப்படும்.

3. இத்தேசியச் செயற்குழு, வடக்கு-கிழக்கு தமிழ் மக்களுக்கான முழுமையான அரசியல் தீர்வை நோக்கமாகக் கொண்டு, அதனை அடைவதற்கான அனைத்து வழிகாட்டல்களையும் நெறிமுறைகளையும் வகுத்து செயற்படும்.

4. செயற்குழுவிலும் செயற்குழுவால் அமைக்கப்படும் ஏனைய குழுக்களிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளுக்கு சம உரிமைகளும் சம அளவான பிரதிநிதித்துவமும் வழங்கப்படும்.

5. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயற்குழுவின் ஏகமனதான முடிவுகளுக்கும் தவறும் பட்சத்தில் அதன் பெரும்பான்மை முடிவுகளுக்கும் அங்கத்துவக் கட்சிகள் கட்டுப்படும்.

6. மேற்கண்ட கட்சிகளையும் தேவையேற்படின் ஏனைய கட்சிகளையும் உள்ளடக்கி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை பரந்துபட்ட வலுவான கட்டமைப்பாக உருவாக்க சகல நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும்.

7. தேர்தல் விடயங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி என்ற பெயரிலும் அதன் சின்னமான குத்துவிளக்கையும் கொண்டு செயற்படும்.

8. இதற்கான நிரந்தர ஒரு கட்டமைப்பை சாத்தியமான விரைவில் உருவாக்கும்வரை இதில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஒவ்வொன்றிலிருந்தும் கட்சித் தலைவர்கள் உட்பட தலா மூவரைக்கொண்ட தேசிய செயற்குழு ஒன்று நிறுவப்படும்.

9. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி மன்ற நடவடிக்கைகளையும் இந்த செயற்குழுவே வழிநடத்தும்.

10. தமிழ்த் தேசிய இனப்பிரச்னை தொடர்பான பேச்சுவார்த்தைகளைக் கையாள்வதற்கும், ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏனைய பிற பிரச்னைகளைக் கையாள்வதற்கும் தேவையான நிபுணர் குழுக்களையும் ஏனைய உப செயற்குழுக்களையும் தேவை கருதி தேசிய செயற்குழு நியமித்துக்கொள்ளும்.

11. அங்கத்துவக் கட்சிகள் கூட்டமைப்பில் இணைந்து செயற்பட்டாலும் தத்தமது சுயாதீனத் தன்மையையும் தனித்துவத்தையும் பேணிக்கொள்ள உரித்துடையவை.

12. ஒவ்வொரு கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை தலைமை அமைப்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதுடன், அங்கத்துவக் கட்சிகளையோ அல்லது கூட்டமைப்பின் கொள்கை, வேலைத்திட்டங்களை ஊடகங்களிலோ பொதுமேடைகளிலோ அல்லது சம்பந்தமில்லா தரப்பினரிடமோ அல்லது சமூக வலைத்தளங்களிலோ கருத்திடுவது தவிர்க்கப்பட வேண்டும். இவை தொடர்பிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மக்கள் பிரதிநிதிகளின் செயற்பாடுகளையும் கண்காணிக்க ஒழுக்காற்றுக் குழு நிறுவப்படும்.

13. ஒரு கட்சியின் பாராளுமன்ற, மாகாணசபை மற்றும் உள்ளூராட்சி, உறுப்பினர்கள் மற்றொரு கட்சிக்குத் தாவினால் அதனை அங்கத்துவக் கட்சிகள் ஏற்கக்கூடாது.

14. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைத்துவமானது கூட்டுத் தலைமைத்துவமாகவும் சுழற்சிமுறையிலான தலைமைத்துவமாகவும் அமையும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கான முழுமையான யாப்பு உருவாகின்றபோது, இந்த விடயங்கள் ஆழமாகப் பரிசீலிக்கப்பட்டு உள்ளடக்கப்படும்.

இந்த புரிந்துணர்வு உடன்படிக்கையில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஸ் பிரேமச்சந்திரன், தமிழ்த் தேசியக் கட்சி தலைவர் என். சிறிகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சி தலைவர் வேந்தன் ஆகியோர் கையெழுத்திட்டனர். (அ)



ஈழநாடு
Eelanadu
15.01.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், தை 01

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# ரணிலுக்கான காலக்கெடு?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஏழு நாட்கள் காலக்கெடு வழங்கியிருக்கின்றது. இந்தக் காலக்கெடுவின் மத்தியில்தான் ரணிலின் யாழ். விஜயம் இடம்பெறவுள்ளது. ஆனால், ரணில் விக்கிரமசிங்கவுக்கு காலக்கெடு வழங்கிய சந்திப்பின்போது, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவும், தமிழ் மக்கள் கூட்டணியாகவும் இருந்தவர்கள் ரணிலின் யாழ்.விஜயத்தின்போது, மூன்று அணிகளாக இருக்கின்றனர். தைத்திருநாளில் ரணில் என்ன கூறுவார்? காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுதலை, அரசியலமைப்பில் இருக்கின்ற ஏற்பாடுகளை முழுமையாக அமுல்படுத்துவது – இவைகள் தொடர்பில் என்ன கூறுவார்?

வரலாற்றில் இதற்கு முன்னரும் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன. அவ்வாறான பேச்சுவார்த்தைகள் தோல்வியில் முடிந்திருக்கின்றன. ஒவ்வொரு தோல்வியின்போதும் சிங்களவர்கள் ஏமாற்றிவிட்டார்களென்னும் – சர்வதேசம் அழுத்தங்களை வழங்கவேண்டுமென்னும் கோசங்களுடன், தமிழ்த் தேசியம் சாதாரணமாக அதன் நாட்களை நகர்த்தியிருக்கின்றது.

ஆனால் இப்போது வழக்கத்திற்கு மாறாக, பேச்சுவார்த்தைக்கான பேச்சுவார்த்தையென்னும் வகையில் ரணில் விக்கிரமசிங்கவுடனான தொடர்புகள் பேணப்பட்டு வருகின்றன. குறித்த காலக்கெடுவுக்குள், ரணில் விக்கிரமசிங்க வாக்குறுதியை நிறைவேற்றாவிட்டால், பேச்சுவார்த்தையிலிருந்து வெளியேறுவதாகவும் கூட்டமைப்பினர் கூறியிருந்தனர். இவ்வாறானதொரு சூழலில்தான் தேர்தல் போட்டிக்குள் பேச்சுவார்த்தையில் பங்குகொண்டவர்கள் மூன்று அணிகளாக பிளவுற்றிருக்கின்றனர்.

தமிழ்த் தேசியக் கட்சிகள் என்போரின் பலவீனங்களை புரிந்துகொள்வதற்கு ரணில் விக்கிரமசிங்க பிரத்தியேகமான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியதில்லை. ரணிலின் யாழ். விஜயத்தின்போதே, கட்சிகள் தங்களின் பலவீனத்தை காட்சிப்படுத்தியிருக்கின்றனர். எனவே காலக்கெடுவிற்குள் விடயங்களை அழுத்தக்கூடிய பலமான நிலையிலும் தமிழ்த் தேசியக் கட்சிகள் இல்லை. அதேவேளை, ரணில் விக்கிரமசிங்கவுடனான பேச்சுவார்த்தையை முன்னெடுப்பதில் கட்சிகள் எவ்வாறு ஓரணியாக பயணிக்கும் என்பதிலும் தெளிவில்லை. இதுவரையில் ஒன்றாக செயற்பட்ட, சி.வி.விக்கினேஸ்வரன், கட்சியின் சின்னம், பதவி ஆகியவற்றை முன்னிலைப்படுத்தி, வெளியியேறியிருக்கும் நிலையில், அவரது செயற்பாடுகள் எதிர்நிலையிலும் இருக்கலாம்.

இந்த பின்புலத்தில் நோக்கினால், தென்னிலங்கையை எதிர்கொள்வதில், தமிழ்த் தேசியக் கட்சிகளிடம் தெளிவான வேலைத்திட்டம் எதுவுமில்லை. ஈழநாடு தொடர்ந்தும் ஒரு விடயத்தை வலியுறுத்தி வந்திருக்கின்றது. அதாவது, தமிழ் மக்களின் உரிமை சார்ந்த விடயங்களில், உடனடி, இடைக்கால, நீண்டகாலமென்னும் அடிப்படையிலான, அரசியல் தந்திரோபாயம் கட்டாயமானது. ஆனால் தமிழ்த் தேசியக் கட்சிகள் எவற்றிடமும் அவ்வாறானதொரு அரசியல் உபாயமில்லை. ஒன்றில் அனைத்தையும் சாதாரணமாக எதிர்த்துக் கொண்டிருப்பது. அடுத்தது, உடனடி மற்றும் இடைக்கால உபாயங்கள் தொடர்பில் சிந்திக்காமல், சுலோகங்களை உச்சரித்துக் கொண்டிருப்பது. இதற்கு மாறான அணுகுமுறையே மக்களுக்கு தேவையானது. எனவே ஆட்சியாளர்களுக்கு காலக்கெடுவை வழங்குவதுடன் விடயங்கள் முடிந்துவிடவில்லை. மாறாக, அதற்கேற்றவாறு பேரம் பேசுவதற்கான பலத்தை திரட்டிக்கொள்வது எல்லாவற்றைவிடவும் முக்கியமானது.

# இலங்கைக்கு ஐ.எம்.எவ். நிதி கிடைப்பதில் சிக்கல்: இந்தியா, சீனா உதவாவிட்டால் என்னவாகும்?



*சீனாவும் இந்தியாவும் தங்களிடம் இலங்கை வாங்கிய கடன் தொகையை மறுசீரமைக்க ஒப்புக்கொள்ளுமாறு இலங்கையின் மத்திய வங்கி வலியுறுத்தியுள்ளது.*

*பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை பிற நாடுகளிடம் வாங்கிய கடனை திருப்பி செலுத்தவும் முடியாமல் தவித்து வருகிறது. இதையடுத்து, சர்வதேச நாணய நிதியம், இலங்கைக்கு 2.9 பில்லியன் அமெரிக்க டாலரை கடனை வழங்க ஒப்புக் கொண்டது.*

*எனினும், இதன் கடன் வழங்கப்பட வேண்டும் என்றால், இலங்கைக்கு கடன் கொடுத்த நாடுகள் தாங்கள் வழங்கிய கடனை மறுசீரமைக்க இணக்கம் தெரிவிக்க வேண்டும். இதனால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் இலங்கைக்கு கிடைப்பதில் கால தாமதம் நிலவுகிறது.*

*இலங்கையின் மத்திய வங்கியின் ஆளுநர், அனைத்துத் தரப்பினரும் விரைவாகச் செயல்பட வேண்டும் என்பது தங்களின் விருப்பம் எனத் தெரிவித்துள்ளார்.*

*“அவர்கள் எங்களுக்கு எந்தளவுக்கு விரைவாக நிதி உத்தரவாதம் வழங்குகின்றனரோ அந்த அளவுக்கு கடன் கொடுத்தவர், கடன் வாங்கியவர் என இரு தரப்புக்குமே நல்லது” என்று மத்திய வங்கியின் ஆளுநர் பி.நந்தலால் வீரசிங்க தெரிவித்தார்.*

*“அது அவர்களின் கடன்களைத் திருப்பிச் செலுத்தத் தொடங்க எங்களுக்கு உதவும். கடமைகளை நிறைவேற்றாமல், நீண்ட காலத்திற்கு இவ்வாறான நிலையில் இருக்க நாங்கள் விரும்பவில்லை. அது நாட்டுக்கும் எமக்கும் நல்லதல்ல. இது இலங்கை மீதான முதலீட்டாளர்களின் நம்பிக்கைக்கு நல்லதல்ல” என்றும் அவர் கூறினார்.*

*கடந்த வருடத்தில் இருந்து நாட்டில் பணவீக்கம் சற்று குறைந்துள்ள போதிலும், கடந்த மாதம் இலங்கையில் உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டை விட 65 வீதம் அதிகமாக இருந்தது.*

*ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு பிரிவான உலக உணவுத் திட்டம், இலங்கையின் 80 லட்சம் மக்கள் உணவு பாதுகாப்பு இல்லாமல் பட்டினியில் உள்ளனர் என்றும் குறிப்பாக கிராம பகுதியில் அதிகம் என்றும் கூறியுள்ளது. 80 லட்சம் என்ற எண்ணிக்கை அந்நாட்டின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கை விட அதிகமானது ஆகும்.*

*பொருளாதார சூழல் அந்நாட்டில் கடந்த ஆண்டு மாபெரும் போராட்டத்திற்கு வித்திட்டது. இதன் காரணமாக அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ கடந்த ஜூலையில் நாட்டைவிட்டே வெளியேறினார்.*

*2022 ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் 9.2 வீதமாக சுருங்கியது என்றும் இந்த ஆண்டு மேலும் 4.2 வீதம் சுருங்கும் என்றும் உலக வங்கி மதிப்பிட்டுள்ளது.*

*இலங்கைக்கான சீனாவின் கடன் என்பது 7 பில்லியன் அமெரிக்க டாலராகவும் இந்தியாவின் கடன் என்பது ஏறக்குறைய 1 பில்லியன் அமெரிக்க டாலராகவும் உள்ளது.*

*2022 ஆம் ஆண்டின் இறுதிக்குள் சீனா மற்றும் இந்தியாவுடன் ஒரு புதிய கட்டணத் திட்டத்தை ஏற்றுக்கொள்ள இலங்கை அரசாங்கம் ஆரம்பத்தில் எதிர்பார்த்திருந்தது.*

*ஜனவரியின் பிற்பகுதியில் இது தொடர்பாக ஒப்பந்தங்கள் வர வாய்ப்புகள் உள்ளதாக தெரிவித்த வீரசிங்க, “இது அனைத்துமே மற்ற தரப்பை சார்ந்து உள்ளது, எங்களுக்கு கடன் கொடுத்தவர்கள்தான் முடிவுகளை எடுக்க வேண்டும்” எனவும் கூறினார்.*

*மேலும், அவர்களுக்கு தேவையான நாட்டின் கடன்கள் தொடர்பான அனைத்து தகவல்களையும் இலங்கை தற்போது வழங்கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.*

*பெல்ட் அண்ட் ரோட் திட்டத்தின் கீழ் (சாலைகள், ரயில்வே, துறைமுகங்கள், சுரங்கம் மற்றும் எரிசக்தி துறை சார்ந்தவை) வளர்ந்துவரும் நாடுகளுக்கு சீனா கடன்களை வழங்கிவரும் சூழலில் இலங்கைக்கான கடனை மறுசீரமைப்பு செய்வது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பது குறித்து சீனா கவலை கொள்வதாக சுதந்திர ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.*

*இதற்கிடையில், இந்தியா தனது பிராந்திய போட்டியாளரான சீனாவிடம் கடன் மறுசீரமைப்பு தொடர்பான தாழ்ந்த விதிமுறைகளைப் பெறுவதில் எச்சரிக்கையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.*

*கடன் கொடுத்த நாடுகளில் மிகப்பெரிய நாடான சீனாவுக்குதான் இதில் மிகப்பெரிய பொறுப்பு உள்ளது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங் தெரிவிக்கிறார்.*

*“சீனா தாமதம் செய்யக்கூடாது என்று நாங்கள் நம்புகிறோம், ஏனினில் இலங்கைக்கு தாமதம் செய்வதற்கான நேரம் இல்லை. அவர்களுக்கு உடனடியாக இந்த உத்தரவாதங்கள் தேவை” என்றும் அவர் கூறினார்.*


*“இலங்கை மக்களின் நலனுக்காக, இந்த சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை இலங்கை அடையத் தொடரும் போது, சீனா எந்த பாதகத்தையும் ஏற்படுத்தாது என்று நாங்கள் நிச்சயமாக நம்புகிறோம்” எனவும் ஜூலி சுங் குறிப்பிட்டார்.*

*ஆனால், இலங்கையுடனான கடனை மறுசீரமைக்க இந்தியாவும் சீனாவும் ஒப்பு கொண்டாலும், நாட்டின் வெளிநாட்டுக் கடன் பங்குகளில் 40மூ பங்கு வகிக்கும் தனியார் கடனாளிகள் வழியாக மற்றொரு சாத்தியமான சிக்கலும் உள்ளது.*

*2001 ஆம் ஆண்டில் அர்ஜென்டினா பொருளாதார நெருக்கடியில் மூழ்கிய பின்னர், சில அமெரிக்க நிதியங்கள், திறந்த சந்தையில் தாங்கள் வாங்கிய கடன் பத்திரங்களை மறுசீரமைப்பதை ஏற்றுக்கொள்வதற்குப் பதிலாக, முழுத் திருப்பிச் செலுத்துமாறு*

*(18ஆம் பக்கம் பார்க்க)*

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



பகிர்வு -64

# லெனின் எம். சிவம் அவர்களின் படைப்புகள் பற்றிய...

**கணபதி சர்வானந்தா**

கடந்த 12 ஆம் திகதி வியாழக் கிழமை, யாழ். பல்கலைக் கழக ஊடகக் கற்க நெறி மாணவர்களை உலகத் திரைப்பட இயக்குனரான லெலின் எம்.சிவம் அவர்கள் தனது படைப்புகள் இரண்டோடு சந்தித்து உரையாடியிருந்தார். அந் நிகழ்வில் கலந்துகொள்ளும் வாய்ப்புக் கிட்டியவன் என்ற வகையில் அந்த அனுபவத்தை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

இயக்குனர் லெனின் எம் சிவம் அவர்கள் எமது மண்ணின் மைந்தர் என்று சொல்வதில் தாம் பெருமைப்படுவதாக யாழ்.பல்கலைக் கழகத் துணைவேந்தர் அவர்கள் குறிப்பிட்டதை ஞாபகப்படுத்திக் கொண்டு... "இந்தப் பயணத்தில் நான் உன்னதத்தை அனுபவித்தேன். எனது தாய் மண் என்னைப் பாராட்டி மகிழ்ந்த தருணங்கள் என்னை மேன்மேலும் உற்சாகப்படுத்துகிறது. இனி வருங்காலத்தே எனது படைப்புக ளாக வெளிவர இருக்கும் அனைத்தும் எனது மண்ணை இன்னும் பெருமைப்படுத்துவதாக இருக்கும்" என்று லெனின் அவர்கள் குறிப்பிட்டதையும் மனதில் கொண்டு.... முன் செல்கிறேன்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணச் சர்வதேச திரைப்பட விழாவின் .இறுதி நாளான 08.01.2023 ஆம் திகதி, தி புறோரெக்ரர் (The Protector) என்னும் ஆங்கிலத் திரைப்படம் திரையிடப்பட்டது. அதன் நெறியாளரான லெனின் எம். சிவம் கனடாவிலிருந்து வந்து அத் திரைப்பட விழாவில் கலந்துகொண்டார். திரைத்துறை சார்ந்த பயிலரங்கிலும் பங்களித்தார். '1999', ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்', 'றூபா' ஆகிய முழு நீளத் திரைப்படங்களை ஏற்கெனவே உருவாக்கியுள்ளவர். சர்வதேசத்தில் மிகவும் முககியமானவர் எனப் பாராட்டப்படுகின்ற திரைப்பட நெறியாளர். அவர் ஒரு ஈழத்தமிழர். இது பெருமைக்குரிய விடயம்.

மேற் குறிப்பிட்ட நிகழ்வில் கலந்து கொண்ட திரை விமர்சகர் திரு. அத்தனாஸ் யேசுராசா தனது முகநூலில், கீழ் கண்டவாறு...

கடந்த 12 ஆம் திகதி காலை 9. 30 மணிக்கு, யாழ்ப் பாணப் பல்கலைக்கழக புதிய கலைப்பீடக் கலையரங்கில் ஊடகக் கற்கைநெறி மாணவருடன் – ஒரு துவக்கும் ஒரு மோதிரமும், தி புறோரெக்ரர; (The Protector) ஆகிய திரைப்படங்கள் திரையிடப்பட்டு, கலந்துரையாடலும் இடம்பெற்றது. அந் நிகழ்ச்சிக்கு நானும் அழைக்கப்பட்டிருந்தேன். ஊடகக் கற்கைநெறித் துறைத் தலைவர் பேராசிரியர் சி. ரகுராமின் அறிமுகவுரையுடன் நிகழ்ச்சி தொடங்கியது. முதலில், 'ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்' திரையிடப்பட்டபின், மாணவர்கள் பலரும் தமது கருத்துகளைச் சுருக்கமாகத் தெரிவித்தனர். பிறகு அவர்களின் வினாக்களுக்கு நெறியாளர் விளக்கமளித்தார். ஊடகவியலாளரான கணபதி சர்வானந்தாவும் நானும் எமது கருத்துகளைத் தெரிவித்தோம். நான்காவது தடவையாகப் பார்க்கையிலும் அத்திரைப்படம், பிரமிப்பையும் பரவசத்தையும் பெருமிதத்தையும் தந்தது. 1931 ஆம் ஆண்டிலிருந்து உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ்த் திரைப்படங்கள் எல்லாவற்றிலும், இக்கலைப்படைப்பே மேலோங்கி நிற்பதான உணர்வும் தோன்றியது. அதனைத் தயக்கமின்றி வெளிப்படுத்தினேன்!

வுாநீசழவநஉவழச, லெனின் எம். சிவத்தின் முதலாவது ஆங்கிலத் திரைப்படம். அண்மையில் நடைபெற்ற யாழ்ப் பாணச் சர்வதேச திரைப்பட விழாவில் காட்டப்பட்டபோது, ஆங்கிலத் துணைத் தலைப்புகள் இன்மையால் முழுமையாக என்னால் அதை விளங்கிக்கொள்ள இயலவில்லை. அதனால் முறையாக இரசிக்கவுமில்லை! ஆங்கிலத் துணைத் தலைப்புகள் இருந்தால் பெரும்பாலான பார்வையாளருக்கு உதவியாக இருக்குமென நான் தெரிவித்தேன். உடனே அதற்குரிய தொழில் நுட்பத்தைப் பிரயோகித்தனர்., துணைத் தலைப்புகளுடனேயே பார்க்கக் கூடியதாக இருந்தது. அப்போது அதனை முழுமையாக விளங்கி இரசித்துப் பார்த்தேன். அவருக்கு அல்ஃவிரட் ஹிச்கொக்கின் திகில் படங்களிலும் ஈடுபாடுள்ளதால், இதனையும் திகில் நிறைந்த ஒரு படைப்பாக – ஈழத்தவர் வழிபாட்டில் முக்கியமாகக் கருதப்படும் வைரவர் தொன்மத்தையும் இணைத்து, கனடியச் சூழலில் அது நிகழ்வதாக உருவாக்கியுள்ளார். திகில் வகையறாப் படைப்பிலும் அவரது படைப்பாளுமை சிறப்புறவே வெளிப்பட்டுள்ளது. நாம் பெருமைப்படும்படியான திரைப்பட நெறியாளராக, ஆங்கிலத்தின் மூலம் உலக அரங்கிலும் அவர் நுழைந்துவிட்டார் எதிர்காலத்தில் அவரது மேன்மை மேலும் சுடருமென்பதில் ஐயமில்லை! அவருக்கு வாழ்த்துகள்! – என்றவாறு திரு. யேசுராசாவின் முகநூல் குறிப்பைக் கண்டேன். மேலும் லெனின் அவர்களின் திரைப்படமான "ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" பற்றிய தனது முந்தைய கட்டுரையை தான் தனது முகநூலில் பதிவேற்றப்போவதாக அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

அத்திரைப்படம் போரின் வடுக்களைச் சூட்சுமமாக எடுத்திரைப்பதால் நாம் அனைவரும் பார்க்க வேண்டிய ஒரு திரைக்காவியம் என்பது எனது கருத்து. அந்தத் திரைப்படத்தில் வரும் அத்தனை கதைகளுக்கூடாகவும் – நிஜ வாழ்க்கையில் – பயணித்த ஒருவன் என்ற வகையில் எமது வரலாற்றில் அது ஒரு முக்கிய படைப்பாகப் பார்க்க வேண்டியதொன்று என்ற கருத்தையும் இங்கு பதிவிடுகிறேன். உள் நாட்டில் நடைபெற்ற யுத்தமும் அது ஏற்படுதியருக்கும் தாக்கங்களும் என்ற வகையில் பல பதிவுகள் அத் திரைப்படத்தில் காணப்படுகின்றன. அதனால் அதனை ஒரு ஆவணமாகவும் பார்க்கத் தோன்றுகிறது.

"ஒரு துவக்கும் ஒரு மோதிரமும்" என்ற அத் திரைப்படத்துக்குரிய பெருமைகள் பின்வருமாறு..

சங்காய் சர்வதேச திரைப்பட விழா விருது –2013, மொன்ரியல் உலக திரைப்பட விழாவில் தெரிவு – 2013, லொயிஸிவில்லி சர்வதேச விழாவில் தெரிவு – 2013, அமெரிக்கன் சினிரோக்கம் சர்வதேச திரைப்பட விழா – 2013, ஹமில்ரன் திரைப்பட விழா – 2013 சிறந்த திரைப்படத்துக்கான தெரிவு, சிறந்த திரைப்படத்துக்கான விருது – நோர்வே தமிழ் திரைப்பட விழா – 2014, சென்னை மகளிர் சர்வதேச திரைப்பட விழா – 2014, கொழும்பு சர்வதேசத் திரைப்பட விழாத் தெரிவாக – 2014, சென்னை கலகம் விருது விழாவில் விருது – 2014, கனடியத் தமிழ் சர்வதேத் திரைப்பட விழாவில் விருது – 2015.

# இந்தவார ராசிபலன் 15.01.2023 - 21.01.2023

ஜனவரி 15 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - தை 01

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 04.30 - 06.00 திதி : அஷ்டமி

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

சூரியன் நன்மை வழங்குவார். சூரிய வழிபாடு நன்மை அளிக்கும். வாரத்தின் முதல் இரண்டு நாளும் சிந்தித்து செயல்பட்டு லாபம் காண்பீர். ஞாயிறு,திங்களில் உங்கள் எண்ணம் நிறைவேறும். செவ்வாய்,புதனில் சில சங்கடத்தை எதிர்கொள்வீர். வெள்ளி, சனிகிழமைகளில் உங்கள் முயற்சிக்கு ஏற்ப லாபம் உண்டாகும். பகைவர்களின் தொல்லையில் இருந்து விடுபடுவீர். ஞாயிறு, திங்களில் சுறு சுறுப்பாக செயல்படுவீர்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

புதன், சுக்கிரன், சனி, குரு நன்மைகளை வழங்குவர். மகாலட்சுமி வழிபாடு வளம் தரும்.வெள்ளி,சனி கிழமைகளில் உங்கள் செயல்களில் அதிக உழைப்பு தேவைப்படும். குடும்ப நலனில் அக்கறை அதிகரிக்கும். ஞாயிறு முதல் வருமானம் அதிகரிக்கும். நீங்கள் எடுக்கும் முயற்சி வெற்றியாகும். உங்கள் முயற்சி எளிதாக நிறைவேறும் வாரம் இது. அரசு வழியில் இழுபறியாக இருந்து வந்த வேலைகளை முடிப்பீர்கள். எதிர்ப்பு விலகும். குடும்பத்தினரின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

நன்மைகளை வழங்குவர். விஷ்ணு வழிபாடு நன்மை தரும். பெரும்பாலான கிரகங்கள் சாதகமாக இல்லை என்றாலும் லாப ராகுவும், மனக்காரகன் சந்திரனும் உங்களை வெற்றிநடை போட வைப்பார்கள். உங்கள் முயற்சி ஆதாயமாகும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வருமானம் கூடும். பண வரவில் இருந்து வந்த தடை அகலும். சிந்தித்து செயல்படுவதால் எதிர்பார்த்தவற்றில் நன்மைகளைக் காண முடியும். உங்கள் எண்ணங்களில் ஒன்று இந்த வாரம் எளிதாக நிறைவேறும்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

புதன், குரு, செவ்வாய் நன்மைகளை வழங்குவர். நவகிரகங்ளை வழிபட சங்கடம் விலகும். லாபஸ்தான செவ்வாயால் முயற்சி வெற்றியாகும். குருவின் பார்வையால் செல்வாக்கு அதிகரிக்கும். வெள்ளி, சனிகிழமையில் உங்கள் திறமை வெளிப்படும். ஞாயிறு, திங்களில் செயல்களில் கவனம் தேவை. செவ்வாய் முதல் முயற்சி லாபமாகும். பூசம் : வெள்ளி, சனி கிழமைகளில் குடும்பத்தினர் ஒத்துழைப்புடன் முயற்சியில் வெற்றி பெறுவீர்கள்.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

கேது, சனி, சூரியன் நன்மைகளை வழங்குவர். திருச்செந்தூர் முருகனை மனதில் எண்ணி செயல்பட நன்மை அதிகரிக்கும். வெள்ளி, சனி கிழமைகளில் வரவு செலவில் கவனம் தேவை. ஞாயிறு, திங்களில் முயற்சி வெற்றியாகும். செவ்வாய் முதல் உங்கள் செயல்கள் தெளிவாகும். வருமானம் அதிகரிக்கும். அரசு வழியிலான முயற்சிகளில் லாபம் காண்பீர். உங்கள் எண்ணம் எளிதாக நிறைவேறும்.

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

புதன், சுக்கிரன், குரு நன்மைகளை வழங்குவர். ரங்கநாதரை மனதில் எண்ணி வழிபடுங்கள். எதிர்பார்ப்பு நிறைவேறும். அரசு வழியில் மேற்கொண்ட முயற்சி பயனளிக்கும். ஞாயிறு, திங்களில் குடும்ப நலனில் அக்கறை செலுத்துவீர். நினைத்ததை செய்வீர்கள். புதிய முயற்சி பலிதமாகும். வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் அலைச்சல் அதிகரிக்கும். ஞாயிறு, திங்களில் பண வரவு உண்டாகும் செவ்வாய் முதல் உங்கள் செயல்களில் மாற்றம் ஏற்படும். நீங்கள் எதிர்பார்த்தவற்றை அடைவீர்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

சுக்கிரன், சந்திரன் நன்மையை வழங்குவார். விநாயகரை வழிபட வளமும் நலமும் அதிகரிக்கும். பிரதான கிரகங்கள் உங்களுக்கு சாதகமற்ற நிலையில் சஞ்சரிப்பதால் தொடர்ந்து நெருக்கடிகளை சந்தித்து வருவீர்கள். வெள்ளி, சனிக்கிழமைகளில் எதிர்பாராத செலவு ஏற்படும். ஞாயிறு முதல் உங்கள் முயற்சிக்கு ஏற்ப லாபம் உண்டாகும். கற்றுக்கொள்வீர்கள். வேலைக்காக மேற்கொள்ளும் முயற்சி இழுபறியாகும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

சூரியன், சனி சுக்கிரன், குரு, ராகு நன்மைகளை வழங்குவர். வராகியை வழிபட சங்கடம் தீரும். வெள்ளி சனி கிழமைகளில் உங்கள் செயல் லாபத்தை உண்டாக்கும். ஞாயிறு திங்களில் செலவு அதிகரிக்கும். செவ்வாய்முதல் தடை விலகும். வரவேண்டிய பணம் வரும். குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர். நினைத்ததை அடையும் வாரம் இது. உங்கள் முயற்சிகளில் இருந்து வந்த தடை விலகும். பண விஷயத்தில் கவனம் தேவை.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

கேது, சுக்கிரன் நன்மையை வழங்குவர். ஆலங்குடி குரு பகவானை மனதில் எண்ணி வழிபட நன்மை உண்டாகும் வெள்ளி முதல் திங்களுக்குள் உங்கள் எண்ணம் நிறைவேறும். தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் ஏற்பட்ட பிரச்னை விலகும். எதிர்பார்த்த நன்மை உண்டாகும். வரவேண்டிய பணம் வரும். செவ்வாய் முதல் செயல்களில் கவனம் தேவை. உங்கள் முயற்சி வெற்றி அடையும் வாரம்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

சந்திரன், சுக்கிரன் நன்மையை வழங்குவர். சனீஸ்வரரை வழிபட சங்கடம் விலகும். முயற்சிகளால் வெற்றிபெற வேண்டிய வாரம் இது. உங்கள் செயல்கள் லாபத்தில் முடியும். குடும்பத்தில் இருந்து வந்த பிரச்னை விலகும். பண வரவு அதிகரிக்கும். விலகிச் சென்றவர் மீண்டும் உங்களைத் தேடி வருவர். வியாழன் மதியம் முதல் திடீர் செலவு தோன்றும்.ராசி நாதன் ஆட்சியாக சஞ்சரிப்பதால் உங்கள் நிலை உயரும்.


### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

குரு, ராகு, புதன் நன்மைகளை வழங்குவர். சிவனை வழிபட சங்கடம் தீரும். வெள்ளி சனிகிழமைகளில் உங்கள் முயற்சியில் தடைகளை சந்திப்பீர். எதிர்பார்ப்பு நிறைவேறாமல் போகும். ஞாயிறு முதல் மாற்றம் உண்டாகும். சுறு சுறுப்பாக செயல்பட்டு லாபம் காண்பீர்கள். நினைத்ததை செயல்படுத்துவீர்கள். மூன்றாமிட ராகுவால் உங்கள் விருப்பம் நிறைவேறும். எதிர்ப்பு மறையும். வழக்கு சாதகமாகும். பயணத்திலும் பணத்திலும் எச்சரிக்கைத் தேவை.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

சனி, சூரியன், சுக்கிரன், புதன், செவ்வாய் நன்மையை வழங்குவர். தட்சிணாமூர்த்தியை வழிபடுங்கள். வாரத்தின் முதல் இரண்டு நாட்களும் உங்கள் செயல்பாடு மகிழ்ச்சி அளிக்கும். நினைத்ததை சாதிப்பீர்கள் என்றாலும் ஞாயிறு, திங்களில் குடும்பத்தில் குழப்பம் அதிகரிக்கும். ஆரோக்யத்தில் சங்கடம் ஏற்படும். திங்கள் முதல் நிலைமை சீராகும். லாப சனியின் பார்வை உங்கள் ராசியில் பதிவதால் ஆரோக்யத்தில் கூடுதல் அக்கறை செலுத்துங்கள். எதிர்ப்புகளை சமாளிப்பீர். ஞாயிறு, திங்களில் நெருக்கடிகளுக்கு ஆளாவீர்கள்.

# ‘நான்’ என்பது, ‘நாம்’ என்று மாறுவது எப்போது?



சென்னை மடல்
-பகவான் சிங்-

## தமிழகத்தில் ஆளுநர் - முதல்வர் ‘ஜல்லிக்கட்டு’!

உங்களிடம் இனிய பொங்கல் நல்வாழ்த்துகளைப் பகிர்ந்துகொள்வதற்கு இங்கு நான் என் மடிக்கணினியுடன் அமரும் முன்பு என்னுடைய இனிய நண்பர் - அல்ல, அல்ல, அன்பு சகோதரர் ஒருவருடன் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். பெருமையில் நிரம்பிய புன்னகையுடன் யாழ்ப்பாணத்தில் தன் வயலில் நின்றுகொண்டு தான் எடுத்துக்கொண்ட புகைப்படத்தோடு எனக்கனுப்பிய புத்தாண்டு வாழ்த்துகளைக் கண்டு பொறாமையில் எரிந்து போனேன் என்று நகைச்சுவையாகக் கூறினேன். என்ன சார், நான் உண்மையாகவே மிக சந்தோஷமாக உள்ளேன் என்பதைப் பார்த்து நீங்கள் மகிழ்ச்சியடைவீர்களென்று எனக்குத் தெரியும். பெருமையும் படுவீர்களென்றும் தெரியும் என்று கூறிச் சிரித்தார் என் யாழ் சகோதரர்.

அண்மைக்காலம் வரை, மக்களால் அதிகம் வாசிக்கப்படும், கொழும்பில் வெளியாகும் ஒரு முக்கியமான தமிழ் நாளிதழுக்காகப் பரபரப்பாக உழைத்துக்கொண்டிருந்த பத்திரிக்கையாளர் அவர். சில மாதங்களுக்கு முன், அவர் தனது வாழ்க்கையின் மிக புத்திசாலித்தனமான முடிவை எடுத்தார். சித்தம் கலங்கவைக்கும் இந்தப் பத்திரிகைத் துறையை விட்டுவிட்டுத் தனது சொந்த ஊரில், முழு நேர விவசாயத்தில் ஈடுபட்டுள்ளார். இப்போது, ஜனவரி 16, திங்களன்று மாபெரும் பட்டிப் பொங்கல் பெருவிழாக் கொண்டாட்டங்களுக்காகத் தயாராகிக்கொண்டிருப்பதாகக் கூறினார்.

யாழ்ப்பாணத்தில் அரசியல் ரீதியான ஒரு புது விதமான பொங்கல் பண்டிகை உருவெடுத்து வருவது உங்களுக்குத் தெரியும். கடந்த காலக் காயங்களுக்கு மருந்திடுவது, எதிர்காலத்தில் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த சமூக-பொருளாதாரத் திட்டங்களை முன்னெடுப்பது போன்ற மக்கள் நலப் பணிகளுக்காக உழைக்கக்கூடிய ஒருங்கிணைந்த முன்னணியை உருவாக்கத் தமிழ்க் கட்சிகள் முயலவேண்டிய தருணமிது. இந்த அரசியல் தலைவர்கள் தன்னிச்சையாகவும் தன்னலப் போக்குடனும் செயல்படுவதை விடுத்து, ஒற்றுமையை நோக்கிச் செல்ல அழுத்தம் கொடுக்குமாறு, மக்களை, என் வாசகர்களை, ‘ஈழநாடு’ கட்டுரைகளின் மூலமாக நான் தொடர்ந்து வேண்டி வருகிறேன். முன்னாள் விடுதலைப் புலிகள் இயக்கத் தொண்டர் வேலுப்பிள்ளை மாதவமேஜர், பல முக்கிய தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் எழுத்துபூர்வமான உறுதிமொழியில் கையெழுத்திட்டதையடுத்துத் தனது நான்கு நாள் போராட்டத்தை வியாழனன்று புதுக்குடியிருப்பில் நிறைவுசெய்த நிகழ்வு மனதுக்கு ஆறுதலளிக்கிறது. அதேநேரத்தில், ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈபிஆர்எல்எப் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரன் உள்ளிட்ட தமிழ்த் தேசியக் கூட்டணியின் தலைவர்கள் மற்றும் தமிழ் மக்கள் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டு கையெழுத்திட்ட அந்த உறுதிமொழியில் கையெழுத்திடாமல் நழுவிச்சென்ற இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதனின் செயல் மனதுக்கு ஏமாற்றமளிக்கிறது. அங்கு சார்ள்ஸ் பேசிய விஷயமும் சுவாரஸ்யமானது. “நாம் பிரிந்து செயல்படவில்லை. வாக்குகள் சிதறி சிங்களக் கட்சிகளுக்குச் சாதகமான நிலைமை உருவாக்கக்கூடாது என்பதற்காகத் தந்திரோபாயமாகச் செயல்படுகிறோம். உள்ளாட்சித் தேர்தல்கள் முடிவடைந்த பின்னர் நாம் ஒன்றாகப் பயணிப்போம்” என்றார் அவர். சூப்பர் ஸ்டார் ரஜினி பாணியில் சொன்னால், ‘ஹா ஹா ஹா, இது எப்படி இருக்கு?’

13ஆவது சட்ட திருத்தம் குறித்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதைப்பற்றி முன்கூட்டியே பேச தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளான சம்பந்தன் மற்றும் சுமந்திரனை மட்டும் அழைத்தபோது, மற்ற தமிழ்த் தலைவர்களையும் அழைக்கவேண்டும் என்று வலியுறுத்துவதற்கு மாறாக, தமக்கு மட்டும் வந்த அழைப்பை அவர்கள் ஏற்றனர். தங்களை மட்டும் அழைத்தது அவர்களுக்கு மகிழ்ச்சியளித்தது. ஆனால், அது ரணிலின் தமிழர் பிரிவினை உத்திக்குச் சான்று என்பதை அவர்கள் கண்டுகொள்ளவில்லை. இவர்களின் செயல் சிங்களத் தலைமைக்குச் சாதகமான சூழலை உருவாக்கும் என்பதையும் அவர்கள் பொருள்படுத்தவில்லை. சம்பந்தர் ஐயா வரும் பெப்ரவரி 5ஆம் தேதி 90 வயதை நிறைவு செய்கிறார். ஆனாலும் அவர் இன்னும் ஓய்வைப் பற்றிச் சிந்திக்காமல், தனது தமிழ் மக்களின் நன்மைக்காகத் தொடர்ந்து உழைக்க விரும்புகிறார்! தமிழரசுக் கட்சி மற்றும் தமிழர் ஒற்றுமைக்கு எதிராகச் செயல்பட்டுத் தமிழர் வாக்குகளைப் பிரித்துப் பலவீனப்படுத்தும் எந்த ஒரு பிரிவினரையும் தமிழர்கள் புறக்கணிக்கவேண்டிய நேரம் இது. இந்தத் தன்னலத் தலைவர்களுக்குப் பாடம் புகட்டி, அவர்களை மக்கள் நலனுக்காக உழைக்க வைக்க, தமிழர்கள் ஒரு பெரிய போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்று நான் முன்னரே பலமுறை எழுதியுள்ளேன். ராஜபக்ஷவினருக்கு எதிரான காலிமுக போராட்டம் போன்றதொரு போராட்டம், ஆனால் வன்முறையில்லாமல் முன்னெடுக்கப்படவேண்டும்.

தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகள் தவிர்த்த மற்ற தமிழ்த் தேசியக் கூட்டணிக் கட்சிகளின் தலைவர்கள், வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் சந்தித்து, எதிர்வரும் தேர்தலை ஒற்றுமையாக எதிர்கொள்ள முடிவு செய்திருப்பது என் ஈழநாடு வாசகர்களுக்குத் தெரிந்திருக்கும். இந்தக் கூட்டணி, தனது கட்சிச் சின்னத்தில்தான் போட்டியிட வேண்டும் என்று கூறியுள்ளதன் மூலம், காலத்தின் கட்டாயமான இந்த முன்முயற்சியில் முதல் விரிசலை ஏற்படுத்தியிருப்பவர் விக்னேஸ்வரன் என்பதையும் நீங்கள் அறிந்திருக்கவேண்டும். இவர்கள் ‘நான்’ என்பதை விடுத்து, ‘நாம்’ என்று பேசும் காலம் எப்போது என்று தெரியவில்லை.

வெள்ளியன்று யாழ்ப்பாணத்தில் நடந்த கூட்டத்தையடுத்து, ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதனை நான் தொலைபேசியில் தொடர்புகொண்டேன். குத்துவிளக்கைப் பொதுச் சின்னமாக வைத்துத் தேர்தலை எதிர்கொள்ள நாங்கள் அனைவரும் இணைந்து முடிவெடுத்துள்ளோம் என்று கூறிய அவர், இந்தப் பொதுச் சின்னம் விவகாரத்தில் அதிருப்தியடைந்த விக்னேஸ்வரன், கூட்டணியிலிருந்து விலகியதால் தான் அடைந்துள்ள வருத்தத்தையும் வெளியிட்டார். ஆனால், வரும் நாட்களில் தானும் மற்ற தலைவர்களும் அவரைக் கூட்டணிக்குள் மீண்டும் கொண்டுவர முடியும் என்ற நம்பிக்கையையும் அவர் தெரிவித்தார்.

“உங்கள் விளக்கு மக்கள் பாதையை ஒளிமயமாக்கட்டும், செல்வம்” என்று என் வாழ்த்துகளைச் சொல்லி உரையாடலை நிறைவு செய்தேன்.

உங்கள் பகுதிகளின் வயல்வெளிகளில் பட்டிப்பொங்கல் பெருவிழாக் கொண்டாட்டங்களுக்கு எனது ‘ஈழநாடு’ வாசகர்கள் தயாராகிகொண்டிருக்கும் அதேநேரத்தில், தமிழக மக்களும் கோவில்களிலும் மற்ற பொது இடங்களிலும் தங்கள் இல்லங்களிலும் நெய்ப் பொங்கல் பொங்கி, இனிய கரும்பைச் சுவைத்து, அத்துடன் பல இடங்களிலும் நடைபெறவுள்ள ஜல்லிக்கட்டுப் போட்டிகளுக்கும் தயாராகிக்கொண்டிருக்கிறார்கள். பாரம்பரியமான இந்தக் காளை அடக்கும் போட்டி, மதுரையின் வரலாற்று முக்கியத்துவம்வாய்ந்த பல இடங்களில், குறிப்பாக உலகெங்கிலும் இருந்து வெளிநாட்டினர் உள்ளிட்ட பார்வையாளர்களை ஈர்க்கும் அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டு ஜனவரி 17 அன்று நடைபெறுகிறது. இன்று (ஞாயிறு) அவனியாபுரத்திலும், திங்களன்று பாலமேட்டிலும் ஜல்லிக்கட்டுப் போட்டிகள் நடைபெறவுள்ளன.

நமது ‘இனிய பொங்கல் மற்றும் தமிழ்ப் புத்தாண்டு’ விழாக்களுடன் தொடர்பில்லாத இன்னொரு வகை ஜல்லிக்கட்டும் தமிழகத்தில் தொடந்து நடந்துகொண்டிருக்கிறது. மாநில ஆளுநர் ஆர். என். ரவிக்கும் முதல்வர் மு. க. ஸ்டாலினுக்கும் இடையிலான தீவிர மோதல், தமிழ்நாடு மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் தலைப்புச் செய்தியாகிவருகிறது.

ரவி தமிழக ஆளுநராகப் பொறுப்பேற்ற முதல் இரண்டு மாதங்கள்வரை திமுக அரசுடனான உறவு சுமுகமாக இருந்தது. அதன் பிறகு இரு தரப்புக்கும் இடையே பிணக்கு ஏற்பட்டு, அது நாளுக்கு நாள் வலுத்து வருகிறது. மாநில நிர்வாகத்தில் ஆளுநருக்கும் பங்குண்டு என்ற வாதத்தை முன்வைக்கும் அவர், ஸ்டாலினின்அமைச்சரவை எடுத்த முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்குவதைத் தாமதப்படுத்திவருகிறார். அமைச்சரவை மற்றும் சட்ட மன்றத்தின் முடிவுகளுக்கு ஒப்புதல் வழங்கவேண்டிய அரசமைப்புச் சட்ட விதிகளை ஆளுநர் மீறுவதாகத் தனது கடுமையான விமர்சனத்தை ஸ்டாலினும் முன்வைக்கிறார்.

மத்தியில் குடியரசுத் தலைவரும் மாநிலங்களில் ஆளுநர்களும் அமைச்சரவை அல்லது நாடாளுமன்ற/சட்டமன்றத்தின் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் எடுத்த முடிவுகளுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றுதான் அரசமைப்பு குறிப்பிடுகிறது. ஒருவேளை, குடியரசுத் தலைவரோ ஆளுநரோ அந்த முடிவுகளுடன் ஒத்துப் போகவில்லை என்ற பட்சத்தில், அரசின் முடிவை மறுபரிசீலனை செய்யுமாறும் அந்த விஷயத்தில் தனது கருத்துகளைக் கருத்தில் கொள்ளுமாறும் கோரலாம். ஆனால், அமைச்சரவை மீண்டும் அந்தக் கோப்பை அப்படியே ஆளுநரின் ஒப்புதலுக்கு அனுப்பினால், அவர் கையெழுத்திட்டே ஆகவேண்டும். ரவி, தனது ஒப்புதலைத் தாமதப்படுத்துவதை ஓர் உத்தியாகவே கடைப்பிடித்துவருகிறார். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை அனுபவித்துவந்த அறுவர் விடுதலை விவகாரத்திலும் ஆன்லைன் ரம்மி தடை விவகாரத்திலும் அவர் அதைத்தான் செய்தார்.

ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகள் விவகாரத்தில் மாநில சட்டமன்றம் மற்றும் அமைச்சரவையின் பரிந்துரைகளுக்கான ஒப்புதலை ஆளுநர் தாமதப்படுத்தி வந்தாலும், கடந்த ஆண்டு நவம்பரில் உச்ச நீதிமன்றம் தலையிட்டு விடுதலைக்கு உத்தரவிட்டது. ஆன்லைன் ரம்மியால் ஏமாந்து, இழப்பைச் சந்தித்து, அதனால் பலர் தற்கொலை செய்துகொண்ட பல சம்பவங்கள் நடந்ததையடுத்து ஆன்லைன் ரம்மியைத் தடைசெய்ய முடிவுசெய்து அதை ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைத்தது ஸ்டாலின் அரசு. இதில் உள்ள பொது நலன் அம்சத்தையும் மீறி, ஆளுநர் இதையும் தாமதப்படுத்தி வருகிறார். மேலும், அவர் திராவிட அரசியலின் அடி நாதத்திலேயே கைவைத்துவிட்டார். திராவிட அரசியல் ஹிந்தியை எதிர்த்துவரும் நேரத்தில், இவர் தமிழ் மக்கள் ஹிந்தியைக் கற்றுக்கொள்வது அவர்களுக்கு நன்மை பயக்கும் என்று கூறியிருந்தார். மிகச் சமீபமாக, நாடு என்ற வார்த்தை தனி நாடு என்ற பிரிவினைவாதத்தைக் குறிப்பதாக இருப்பதால், தமிழ் நாடு என்பதைவிடத் தமிழகம் என்று கூறுவது பொருத்தமாக இருக்கும் என்று ஒரு சர்ச்சையைக் கிளப்பிவிட்டிருக்கிறார். இதற்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல், கடந்த வியாழனன்று, இந்த ஆண்டின் முதல் சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது ஆளுநர் உரையை வாசித்த அவர், சில பகுதிகளை விட்டுவிட்டும் சில பகுதிகளைச் சேர்த்தும் வாசித்துள்ளார்.

நாடாளுமன்றத்தின் ஆண்டின் முதல் கூட்டம் குடியரசுத் தலைவர் உரையுடனும் சட்டமன்றத்தின் ஆண்டின் முதல் கூட்டம் ஆளுநர் உரையுடனும் தொடங்க வேண்டும் என்பது அரசமைப்பு ஏற்படுத்தி வைத்த ஒரு மரபு. இந்த உரைகள், கடந்த காலத்தில் அரசு செய்த நல்ல விஷயங்களையும் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களையும் பட்டியலிட்டு, அரசு தயார்செய்து கொடுக்கும் உரைகளாகும்.

ஆனால், தன் உரையில், சில சிறந்த செயல்பாடுகள் குறித்து மட்டுமல்ல, திராவிட அரசியலின் மூத்த தலைவர்களின் பெயர்களைக்கூடப் படிக்காமல் விட்டுவிட்டார் ஆளுநர். தமிழகத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த தனது சொந்த விமர்சனங்களையும் அவர் சேர்த்துக்கொண்டார். அவர் தனது உரையை முடித்தவுடன், முதல்வர் ஸ்டாலின் எழுந்து, ஆளுநர் உரையின் மூலத்தை மட்டும் அவைக் குறிப்பில் ஏற்றி, ஆளுநரால் மாற்றப்பட்ட மற்றவற்றை அவைக்குறிப்பிலிருந்து அகற்றக் கோரும் தீர்மானம் ஒன்றை சபாநாகருக்கு முன்வைத்தார்.

ஸ்டாலின் தனது தீர்மானத்தைப் படித்துக்கொண்டிருக்கும்போதே ஆளுநர் கோபமாக அவையை விட்டு வெளியேறினார். இது மிகவும் தவறு. தேசிய கீதம் பாடப்படுவதற்கு முன்னரே அவர் வெளியேறிவிட்டார். திமுகவும் பாஜகவை எதிர்க்கும் மற்ற கட்சிகளும் உடனடியாக ஆளுநரின் செயல்பாட்டைக் கண்டித்து அறிக்கை வெளியிட்டு, தேசிய கீதத்தை அவமதித்ததாகவும் குற்றம் சாட்டினர். அரசமைப்பு விதிகளுக்கு உட்பட்டு நடந்துகொள்ளுமாறு ஆளுநருக்கு அறிவுறுத்த வேண்டி, குடியரசுத் தலைவருக்கும் முதல்வர் ஒரு கடிதம் அனுப்பியுள்ளார். சில காலம் முன்னர்தான், ஆளுநர் ரவியைத் திரும்பப் பெறுமாறு திமுக கோரியிருந்தது.

தமிழகத்தில் தனது அரசியல் நகர்வுகளை மிகவும் எச்சரிக்கையுடன் மேற்கொண்டு வருகிறது பாஜக. தமிழ் மொழி, தமிழர் அடையாளம் இவற்றின் சிறப்பைப் போற்றிப் பேசிவருகிறது. முன்னாள் காவல்துறை அதிகாரி அண்ணாமலை மாநில பாஜக தலைமைப் பொறுப்பை ஏற்றதிலிருந்து , காவிக் கட்சியின் ஹிந்தி - ஹிந்துத்வா சித்தாந்தத்துக்குக் கொடி பிடிக்காமல், திராவிட அடையாளத்தையே முன்னெடுத்து வருகிறார். அண்மையில் நடந்த காசி தமிழ்ச் சங்கமத்தில் பிரதமர் நரேந்திர மோடி

தமிழில் பேசியதும், தமிழ் இலக்கியத்தின் வளமையைப் பாராட்டியதும் 2024 நாடாளுமன்றத் தேர்தலிலும் 2026 சட்டமன்றத் தேர்தலிலும் திராவிட வாக்குகளை வெல்வதற்கே. ஆனால், இப்போது ஆளுநர் ரவியின் சொற்களும் செயல்களும் பாஜகவுக்குத் தர்ம சங்கடத்தையே ஏற்படுத்தி வருகின்றன.

எனது உரையாடலை இத்துடன் முடித்துக்கொண்டு, உங்கள் பொங்கல் கொண்டாட்டங்களுக்கு வழிவிடுகிறேன். மீண்டும் சந்திப்போம். வணக்கம்.



# இலங்கை அரசியலில் புதிய அணிசேருகைகள்!



♦ வீரகத்தி தனபாலசிங்கம்

இலங்கை சுதந்திரம் பெற்ற பிறகு பல தசாப்தங்களாக மாறிமாறி ஆட்சிசெய்துவந்த இரு பிரதான அரசியல் கட்சிகளான ஐக்கிய தேசிய கட்சியும் சிறிலங்கா சுதந்திர கட்சியும் இன்று முன்னரைப் போன்று மக்கள் செல்வாக்குடன் இல்லை. பழைய கட்சிகளாக இருந்தாலும் அவை பிரதான கட்சிகள் என்ற தகுதியைக் கொண்டவையாக இல்லை.

தனியான பெரிய கட்சியாக நீண்டகாலமாக இயங்கிவந்த ஐக்கிய தேசிய கட்சி கடந்த பொதுத்தேர்தலில் ஒரு ஆசனத்தைக்கூட வென்றெடுக்கவில்லை. அதற்கு கிடைத்த ஒரேயொரு தேசியப்பட்டியல் ஆசனத்தைப் பயன்படுத்தி பத்து மாதங்களுக்கு பிறகு பாராளுமன்றம் வந்த கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மக்கள் கிளர்ச்சியை அடுத்து மாற்றமடைந்த அரசியல் கோலங்களுக்கு மத்தியில் கடந்த வருடம் ஜூலையில் நாட்டின் ஜனாதிபதியாகவும் கூட தெரிவான "அதிசயம்" நடந்தது.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் சுதந்திர கட்சி ராஜபக்சாக்களின் சிறிலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து போட்டியிட்டதால் பாராளுமன்றத்தில் 14 ஆசனங்களைப் பெறக்கூடியதாக இருந்தது. தனியாக போட்டியிட்டிருந்தால் அதன் மக்கள் செல்வாக்கின் இலட்சணம் தெரியவந்திருக்கும்.

சுதந்திர கட்சியை 2005 தொடக்கம் பத்து வருடங்கள் தங்கள் ஆதிக்கத்தில் வைத்திருந்த ராஜபக்சாக்கள் 2016 பிற்பகுதியில் தங்களுக்கென்று பொதுஜன பெரமுனவை தொடங்கியதை அடுத்து சுதந்திர கட்சியின் வாக்கு வங்கி அவர்களுடன் சென்றது. ராஜபக்சாக்கள் பொதுஜன பெரமுனவை ஒரு குறுகிய காலத்திற்குள் மக்கள் செல்வாக்கை கூடுதலாகக் கொண்ட கட்சியாக கட்டியெழுப்பி ஆட்சியதிகாரத்தை மீண்டும் கைப்பற்றினார்கள்.

ஆனால், எந்தளவு விரைவாக தங்கள் கட்சியை அவர்கள் நாட்டின் முதன்மையான அரசியல் சக்தியாக கட்டியெழுப்பினார்களோ அந்தளவு விரைவாக தவறான ஆட்சி காரணமாக இன்று மக்கள் செல்வாக்கை இழந்து நிற்கிறார்கள்.

ஐக்கிய தேசிய கட்சிக்குள் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்துக்கு எதிராக பல வருடங்களாக கிளர்ச்சி செய்த சஜித் பிரேமதாச அதில் தோல்விகண்டு இறுதியில் ஐக்கிய மக்கள் சக்தியை உருவாக்கினார். ஐக்கிய தேசிய கட்சியின் வாக்கு வங்கி புதிய கட்சியுடன் சென்றுவிட்டதை கடந்த பாராளுமன்றத் தேர்தல் நிரூபித்தது.

ஐக்கிய தேசிய கட்சியும் சுதந்திர கட்சியும் பல தசாப்தங்களாக பாரம்பரியமான பிரதான அரசியல் கட்சிகளாக விளங்கிய நிலை மாறி பொதுஜன பெரமுனவும் ஐக்கிய மக்கள் சக்தியும் புதிய பிரதான அரசியல் கட்சிகளாக விளங்கும் நிலை தோன்றலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், மாற்றமடைந்துவரும் அரசியல் நிலைவரங்கள் அவ்வாறான ஒரு தோற்றப்பாட்டுக்கு இடமளிப்பதாக இல்லை எனலாம். தற்போது எம்மால் காணக்கூடியதாக இருக்கும் புதிய அணிசேருகைகள் இலங்கையின் அரசியல் பரப்பை பெருமளவுக்கு மாற்றிவிடக்கூடிய சாத்தியம் இருக்கிறது.

தனிக்கட்சிகள் ஆதிக்கம் செலுத்தக்கூடிய நிலை இப்போது இல்லை. அவ்வாறு இருந்த நிலை நீண்ட காலத்துக்கு முன்னரே மாறி கூட்டணி அரசியல் யுகம் தொடங்கியது.

ஐக்கிய தேசிய கட்சி தனியொரு பெரிய கட்சியாக விளங்கிய காலத்தில் எப்போதும் தேர்தல்களில் தனித்தே போட்டியிட்டது. சுதந்திர கட்சி அதன் வரலாற்றால் ஒருபோதும் தனித்துப் போட்டியிட்டதில்லை. விக்கிரமசிங்கவின் தலைமையின் கீழ் வந்த பிறகுதான் ஐக்கிய தேசிய கட்சி தேர்தல் கூட்டணியை அமைக்கத்தொடங்கியது. ஐக்கிய தேசிய முன்னணி என்ற கூட்டு எல்லாம் அவர் காலத்தில் வந்ததே.

கடந்த நூற்றாண்டில் சுதந்திர கட்சி தலைமையிலான கூட்டணிகள் தேர்தல்களில் வெற்றிபெற்று ஆட்சியமைத்த சில தடவைகளில் கூட தேசிய ரீதியில் கூடுதல் வாக்குகளை பெற்ற கட்சியாக ஐக்கிய தேசிய கட்சியே விளங்கியது. அதன் காரணத்தினால்தான் முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்தன விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையை அறிமுகப்படுத்தினார். தனது கட்சி நெடுகவும் பாராளுமன்ற தேர்தல்களில் கூடுதல் ஆசனங்களைக் கைப்பற்றும் என்பது அவரது நம்பிக்கையாக இருந்திருக்கக்கூடும்.

ஆனால், தனது மருமகனின் தலைமையில் ஐக்கிய தேசிய கட்சி ஒரு நாள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் ஓர் ஆசனத்தைக் கூட வென்றெடுக்கமுடியாத அளவுக்கு மக்கள் செல்வாக்கை இழந்துபோகும் என்று ஜெயவர்தன கனவிலும் நினைத்துப் பார்த்திருக்கமாட்டார்.

**கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகள் தேர்தலில் தனித்தனியாக போட்டியிட்டுவிட்டு பிறகு உள்ளூராட்சி சபைகளின் நிருவாகத்தை சேர்ந்து அமைக்கலாம் என்பதே தனிவழி போவதற்கு எடுத்த முடிவுக்கு தமிழரசு கட்சி கற்பிக்கின்ற நியாயமாகும். ஆனால், ரெலோவும் சித்தார்த்தனின் புளொட்டும் தற்போது முன்னெடுக்கின்ற நடவடிக்கைளை பார்க்கும்போது மீண்டும் ஒன்றிணைந்து அவர்கள் செயற்படுவதற்கான வாய்ப்புக்கள் தோன்றும் என்று நம்புவதற்கில்லை.**

இது இவ்வாறிருக்க, உள்ளூராட்சி தேர்தல்களுக்கான நியமனங்கள் தற்போது கோரப்பட்டுவரும் நிலையில் தென்னிலங்கை அரசியல் பரப்பிலும் வடக்கு, கிழக்கில் தமிழர் அரசியல் பரப்பிலும் புதிய அணிசேருகைகள் இடம்பெறத்தொடங்கியிருப்பதை காணக்கூடியதாக இருக்கிறது.

எந்தவிதமான கொள்கை இணக்கப்பாடும் இல்லாத போதிலும் வெறுமனே அரசியல் அனுகூலத்துக்காக "சகவாழ்வை" நடத்திவரும் பொதுஜன பெரமுனவும் ஐக்கிய தேசிய கட்சியும் கூட்டுச் சேர்ந்து உள்ளூராட்சி தேர்தல்களில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றன. சில உள்ளூராட்சி சபைகளில் ஐக்கிய தேசிய கட்சி யானை சின்னத்தில் தனியாகவும் வேறு சில உள்ளூராட்சி சபைகளில் பொதுஜன பெரமுன தாமரை மொட்டு சின்னத்தில் தனியாகவும் ஏனைய உள்ளூராட்சி சபைகளில் இரு கட்சிகளும் இணைந்து பொதுச் சின்னத்திலும் போட்டியிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

தங்களது கட்சியை மீளக்கட்டியெழுப்பி "ஒன்றாக எழுவது" குறித்து சில மாதங்களுக்கு முன்னர் பேசிய ராஜபக்சாக்கள் சில கூட்டங்களை நடத்திப் பார்த்துவிட்டு தங்களைப் பற்றிய மக்களின் மனநிலையை புரிந்து கொண்டவர்களாக இறுதியில் ஐக்கிய தேசிய கட்சியுடன் தேர்தல் கூட்டணியை அமைக்கிறார்கள். உண்மையில் ராஜபக்சாக்களை விட்டால் கணக்கில் எடுக்கக்கூடிய வேறு எந்த கட்சியும் ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச் சேர முன்வந்திருக்காது.

இதனிடையே, உள்ளூராட்சி தேர்தல்களில் தனது கட்சி போட்டியிடுவதாக இருந்தாலும், பிரசாரங்களில் தான் பங்கேற்கப்போவதில்லை என்று ஜனாதிபதி விக்கிரமசிங்க அறிவித்திருக்கிறார். இலங்கை அதன் வரலாற்றில் முன்னென்றுமே கண்டிராத மோசமான பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் ஜனாதிபதியாக பதவியேற்ற தனக்குரிய ஆணை பொருளாதாரத்தை மீட்டெடுப்பதே தவிர தேர்தல்களுக்கு செல்வதல்ல என்று அவர் தனது முடிவுக்கு காரணத்தையும் கூறியிருக்கிறார்.

ஆனால், உண்மையில் உள்ளூராட்சி தேர்தல்களில் தனது கட்சியின் மிகக் குறைவான வெற்றி வாய்ப்புகள் பற்றிய ஜனாதிபதியின் மதிப்பீடே அவரை பிரசாரங்களில் இருந்து ஒதுங்கியிருக்கும் முடிவை எடுக்க வைத்திருக்கலாம் என்பதே அவதானிகள் பலரினதும் அபிப்பிராயமாக இருக்கிறது.

அதேவேளை, ஆளும் பொதுஜன பெரமுன கூட்டணியில் இருந்து வெளியேறி பாராளுமன்றத்தில் சுயாதீனமான குழுக்களாக இயங்கும் நான்கு தரப்பினர் - சுதந்திர கட்சி, விமல் வீரவன்ச, உதய கம்மன்பில தலைமயிலான உத்தர லங்கா சபாவ, டலஸ் அழகப்பெரும தலைமையிலான நிதஹாஸ் லங்கா சபாவ, அநுரா பிரியதர்சன யாப்பா தலைமையிலான குழு - சுதந்திர மக்கள் இயக்கம் என்ற பெயரில் புதிய கூட்டணியை அமைத்து ஹெலிகொப்டர் சின்னத்தில் போட்டியிடத் தீரமானித்துள்ளன.

ஜனதா விமுக்தி பெரமுன (ஜே.வி.பி.) ஏற்கெனவே பல அமைப்புக்கள் குழுக்களுடன் சேர்ந்து ஐக்கிய மக்கள் சக்தி என்ற கூட்டணியாக இயங்கிக்கொண்டிருக்கிறது. சஜித் பிரேமதாச மாத்திரமே கூட்டணி பற்றி பெரிதாக பேசாமல் இருக்கிறார்.

**தமிழர் அரசியலில் புதிய கூட்டுக்கள்**

தமிழர் அரசியல் பரப்பிலும் புதிய கூட்டணிகள் உருவாகின்றன. தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதான அங்கத்துவக் கட்சியான இலங்கை தமிழரசு கட்சி உள்ளூ ராட்சி தேர்தலில் தனித்துப் போட்டியிட தீர்மானித்ததை அடுத்து இறுதியாக எஞ்சியிருந்த ஏனைய அங்கத்துவக் கட்சிகளான தமிழீழ விடுதலை இயக்கமும் (ரெலோ) தமிழீழ மக்கள் விடுதலை கழகமும் (புளொட் ) கூட்டமைப்பில் முன்னர் அங்கத்துவம் வகித்த கட்சிகளையும் வேறு சில குழுக்களையும் இணைத்துக்கொண்டு தேர்தலில் போட்டியிடுவதற்கு தீர்மானித்திருக்கின்றன.

தமிழரசு கட்சி தனித்துப் போட்டியிடுவதற்கு தீர்மானித்தாலும், கூட்டமைப்பு அப்படியே இருக்கிறது. விலகிச்சென்றவர்கள் மீண்டும் இணைவதால் அது பலமடைகிறது என்று ரெலோவின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் கடந்தவாரம் வவுனியாவில் செய்தியாளர்கள் மகாநாட்டில் கூறினார்.

வட மாகாண முன்னாள் முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனின் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி (ஈ.பி.ஆர்.எல்.எவ்.), சிறிகாந்தா - சிவாஜிலிங்கத்தின் தமிழ் தேசிய கட்சி ஆகியவையே புதிதாக இணையவிருப்பவை என்றும் சுழற்சி முறையிலான தலைமைத்துவத்துடன் இயங்கவிருக்கும் கூட்டமைப்பு பொதுச் சின்னத்தில் போட்டியிடும் என்றும் அடைக்கலநாதன் தெரிவித்தார். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் மக்கள் தேசிய முன்னணியையும் இணைந்து கொள்ளுமாறு வேண்டுகோள் விடுக்கவிருப்பதாகவும் அவர் கூறினார்.

இரு தசாப்தங்களுக்கும் கூடுதலான காலமாக இயங்கிவரும் கூட்டமைப்பில் இருந்து வெவ்வேறு காலகட்டங்களில் கட்சிகள் வெளியேறியிருந்த போதிலும், பிரதான அங்கத்துவக் கட்சியான தமிழரசு கட்சி தேர்தல் ஒன்றில் தனியாக போட்டியிடுவதற்கு தீர்மானித்திருப்பது இதுவே முதற்தடவையாகும்.

(18ஆம் பக்கம் பார்க்க)

# கொள்கை வழியாக இணைய முடியாதவர்கள் தமிழ்த் தேசியத்தை எவ்வாறு காப்பாற்றுவர்?

**பனங்காட்டான்**

ஒவ்வொரு புத்தாண்டும் பிறக்கும்போது பழையன கழிதலும் புதியன புகுதலும் என கூறுவது வழமையென இவ்வருட ஆரம்பத்தில் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். ஆனால், இலங்கை அரசியலைப் பொறுத்தளவில் - இரு தரப்பிலும் பழையனவே நீட்சி பெற்று அறுவடை செய்ய ஆரம்பித்திருப்பது போல தெரிகிறது.

ரணில் விக்கிரமசிங்க அரசு அறிவித்திருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு சகல கட்சிகளையும் உலுப்பி எடுக்க ஆரம்பித் துள்ளது. வெவ்வேறு கட்சிகள் ஒன்று சேர்ந்து புதுப்புது கூட்டுகளும் கூட்ட ணிகளும் தேர்தலுக்காக உருவாகி வரு கின்றன.

முக்கியமாக, தமிழ்த் தேசிய அரசியல் பரப்பு நாளொரு வண்ணம் புதுப்புது கூறுகளாக அலங்கோலமாகி அசிங்கப் படுகிறது.

தெற்கைப் பொறுத்தளவில் அரசியலுக்கு அப்பால் - ஓரளவுக்கு அதனோடிணைந்த சில நடவடிக்கைகள் பெருந் தலைகளை உருள வைக்கிறது. ஈஸ்டர் குண்டுத் தாக்குதல் என்ற உயிர்த்த ஞாயிறு நாள் சம்பவம் தொடர்பான வழக்கில் உயர்நீதிமன்ற நீதியரசர்கள் எழுவர் அதிரடி தீர்ப்பு வழங்கியுள்ளனர். முன்னாள் ஜனாதிபதியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன பத்துக்கோடி ரூபாவை நக்ஷ்டஈடு வழங்க வேண்டுமென நீதியரசர்கள் உத்தரவிட்டுள்ளனர்.

குண்டுத் தாக்குதல் காலத்தில் பாதுகாப்புச் செயலாளர், பொலிஸ்மா அதிபர், அரச மற்றும் தேசிய புலனாய்வுப் பிரிவின் பிரதம அதிகாரிகளாக விருந்த இருவர் என நால்வரும் தனித்தனியாக மொத்தம் 21 கோடி ரூபாவை நக்ஷ்டஈடாக வழங்க வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி பதவி வகிக்கும்போது கிடைக்கும் அவர்களுக்கான சட்ட விதிவிலக்கு, அவர்கள் ஜனாதிபதி பதவியை இழந்த பின்னர் இல்லாமல் செய்யப்பட்டதால் கிடைக்கும் 'பரிசு' இதுதான் என்பதை மைத்திரிபால சிறிசேன மட்டுமன்றி சகல முன்னாள்களும் அறிந்திருப்பர். ரணில் விக்கிரமசிங்கவும் ஷமுன்னாள் ஜனாதிபதியாகும் வேளையில் இவ்வகை சட்ட நடவடிக்கைகளைச் சந்திக்கும் பேறு பெறுவார்.

மைத்திரிக்குக் கிடைத்த எதிர்பாராத நெருக்கடி போன்று மற்றொரு முன்னாள் ஜனாதிபதி கோதபாய ராஜபக்சவும் இப்போது சட்ட நடவடிக்கைகளை எதிர்கொண்டுள்ளார். கடந்த வருடம் யூலை மாதம் 22ம் திகதி பொதுமக்கள் எழுச்சிப் போராட்டத்தின்போது இவரது இல்லத்திலிருந்து 17.5 மில்லியன் ரூபா மீட்கப்பட்டது. இது தொடர்பாக இவரிடம் வாக்குமூலம் பெறுமாறு விசேட பொலிஸ் விசாரணைப் பிரிவுக்கு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

நாட்டைவிட்டுத் தப்பியோடி, பரதேசியாக அலைந்து எந்த நாடும் அடைக்கலம் கொடுக்காததால் மீண்டும் இலங்கை திரும்பிய கோதபாயவுக்கு அமெரிக்கா எந்தவகையிலும் தற்காலிக வசிப்பிட உரிமைகூட இதுவரை வழங்க முன்வரவில்லை. இந்த நெருக்கடி போதாதென்று நிதி மோசடி விசாரணையையும் அவர் சந்திக்க நேர்ந்துள்ளது.

சமகாலத்தில் கனடிய அரசு இவருக்கும் இவரது அண்ணரான முன்னாள் ஜனாதிபதி மகிந்தவுக்கும் பயணத்தடை விதித்துள்ளதுடன், கனடிய சட்ட வரம்புக்குள் இவர்களுக்கிருக்கும் சொத்துகளை சுவீகரிக்கும் அறிவிப்பை விடுத்துள்ளது.

இவர்களுக்கு 'என்ன காலமோ, என்ன நேரமோ' என்ற பாடலுக்கு விளக்கம் தேடின் எல்லாமே முள்ளிவாய்க்காலின் 'செய் - வினை' என்பதுதான் பதில் என்று சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.



**கலைஞர் பாணியில் கதிரையைக் கைவிடாது பிடித்திருக்கும் தலைவர்! கூடாரத்துக்குள் தனது வேலையை ஆரம்பித்திருக்கும் ஒட்டகம்! அன்னத்துக்கு மக்கள் திண்டாட சின்னத்துக்காக நடக்கும் போராட்டம்!**

இலங்கையின் ஜனாதிபதிகளாக விருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன, ஆர்.பிரேமதாச, டி.பி.விஜேதுங்க, சந்திரிகா குமாரதுங்க, மகிந்த ராஜபக்ச, மைத்திரிபால சிறிசேன, கோதபாய ராஜபக்ச ஆகிய ஏழு பேரில் முதல் மூவரும் இன்று உயிருடன் இல்லை. மிகுதி நால்வரில் மூவர் வெவ்வேறு விடயங்களில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். ஒரேயொரு பெண் ஜனாதிபதியான சந்திரிகா மட்டும் இதுவரை எதிலும் அகப்படாதவராக உள்ளார். ரணில்...? காலம் நின்று பதில் சொல்லும்!

இன்னமும் நிச்சயமற்ற நிலையிலிருக்கும் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் அறிவிப்பு, தமிழர் தாயகத்தின் தலைமை அரசியல் அமைப்பான கூட்டமைப்புக்குள் நீறு பூத்த நெருப்பாக புகைந்து கொண்டிருந்த நீயா நானா மோதலை, வெட்ட வெளிக்குள் இழுத்து வந்து நேரடி மோதலாக மாற்றி, 'களத்தில் சந்திப்போமா' என்ற சவாலுக்கு கொண்டு வந்துள்ளது.

ஒருபுறத்தில் தமிழர் தரப்புடன் பேச்சுவார்த்தை என்ற பச்சைக்கொடியை காட்டியவாறு, தமிழர் தரப்பை பிளந்து மோதவிடும் நிலைமையை உள்ளூராட்சித் தேர்தல் என்ற பெயரில் உருவாக்கியவர் ரணிலே என்பதை இங்கு தவறாது பதிய வேண்டும்.

தள்ளாத வயதிலும், தனித்து எழுந்து நடமாட முடியாத நிலையிலும், அடுத்த மாதம் 90 வயதைத் தாண்டும் வேளையிலும் தலைமையைக் கைவிட விரும்பாத சம்பந்தனும், "நீ மரம் - நான் காற்று" என்ற பாணியில் சம்பந்தனை ஆட்டிக் கொண்டிருக்கும் சுமந்திரனின் தனி ஆவர்த்தனமுமே கூட்டமைப்புக்குள் இருந்த கீறலை ஆழமாக்கி இன்றைய நிலைமையை உருவாக்கியிருக்கிறது என்பது வெளிப்படை.

இவ்விடத்தில் மூன்று முக்கிய விடயங்களை முன்வைக்க வேண்டியுள்ளது:

1. தமிழ்த் தேசிய கூட்டமைப்பை விடுதலைப் புலிகள் உருவாக்கிய நாளிலிருந்து இன்றுவரை அதற்கு அதிகாரபூர்வமாக தலைவர் என்று எவரும் நியமிக்கப்படவில்லை. பங்காளிக்கட்சிகள் இணைந்து எவரையும் அப்படியொரு பதவிக்கு தெரிவு செய்யவும் இல்லை. கூட்டமைப்பு என்பது நாடாளுமன்றத்தில் ஓரணியாக இயங்க வேண்டுமென்பதால் அதன் நாடாளுமன்ற குழுத் தலைவராக ஒருவர் இருக்க வேண்டும். அந்தப் பதவிக்கு மட்டுமே மூப்பு அடிப்படையில் சம்பந்தன் நியமிக்கப்பட்டார்.

2. கலைஞர் கருணாநிதி பாணியில் 'ஐயா' இருக்க விரும்புகிறார் என்று கூட்டமைப்பின் முன்னாள் எம்.பி. ஒருவர் இந்தப் பத்தியாளரிடம் தெரிவித்தது ஞாபகம் இருக்கிறது. அதாவது அரச மரியாதையுடன் 21 மரியாதைக் குண்டுகள் வெடிக்க வைத்து தமது இறுதிச் சடங்கு நடைபெற வேண்டுமென்பதற்காகவே சுயமாக இயங்க முடியாத நிலையிலும் கலைஞர் கருணாநிதி இறுதிவரை தலைமைப் பதவியை தம்முடன் வைத்திருந்தார் என்பதை இந்தக் கூற்று தெரியப்படுத்தியது.

3. ஒட்டகம் தனது தலையைத்தான் முதலில் கூடாரத்துக்குள் நுழைக்கும். பின்னர் படிப்படியாக முழு உடலையும் உள்ளே தள்ளி கூடாரத்தை தம்வயமாக்கி விடும். வேறு வழியின்றி கூடாரத்திலிருந்தவர்கள் வெளியேற நேரும். தேசியப் பட்டியலில் கொழும்பிலிருந்து 'சுமா' உள்ளிறக்கப்பட்டபோது பொதுவாக ஊடக வட்டாரங்களில் இடம்பெற்ற உரையாடல் இது.

இப்போதுள்ள தமிழ்த் தேசிய அரசியல் களம் இங்கு கூறப்பட்டவைகளை நடைமுறையில் காட்டுகிறது. இத்தளம் நாளாந்தம் மாற்றம் பெற்று வருகிறது. ரெலோவையும் புளொட்டையும் கூட்டமைப்பிலிருந்து வெளியேற்றாது, அவர்களை அவர்களாகவே வெளியேறச் செய்யும் வகையில் உள்வீட்டுக்காரர்கள் சாதுரியமாக வேலைகளைச் செய்தனர்.

வரப்போகும் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுவதென்பது அக்கட்சியின் தலைமைப்பீடத்தால் எடுக்கப்பட்ட முடிவு. ஆனால், இதனைப் பங்காளிக் கட்சிகளிடம் தெரிவிக்காது சில விடயங்களை பேசி முடிவெடுப்பதுபோல் காட்சி கொடுத்து, தங்கள் முடிவை தமிழரசுக்கட்சி தெரிவித்தது. இதற்குக் கிடைத்த பலாபலனே புளொட்டும் ரெலோவும் தத்தம் வழியே சென்று புதிய கூட்டமைப்பொன்றை உருவாக்கும் இறுதி முயற்சிக்கு வழிவகுத்தது.

தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா ஏற்கனவே இதற்கான வாய்க்காலை வெட்டி நீர் பாய்ச்ச வழி வகுத்துக் கொடுத்திருந்தார். அந்த வழியில் புளொட்டும் ரெலோவும் விக்னேஸ்வரனுடைய அணியும் மற்றும் ஈ.பி.ஆர்.எல்.எவ், சிறிகாந்தா - சிவாஜிலிங்கம் அணியும் சேர்ந்து புதிய கூட்டின் சந்திப்பு சுடச்சுட ஆரம்பமாகி அறிவிப்புகள் தொடர்ச்சியாக வந்தன. இதற்கு முன்னோடியாக யாழ். நகர மேயராக விருந்த மணிவண்ணன் விக்னேஸ்வரன் அணியோடு இணைந்துவிட்ட தகவல் ஊடகங்களில் படமாகவும் செய்தியாகவும் வந்து அரசியல் பரபரப்பை ஏற்படுத்தியது.

விக்னேஸ்வரன் தலைமையில் ஐந்து கட்சிகள் இணைந்த புதிய கூட்டணி தனிச்சின்னத்தில் போட்டியிடப் போவதாக வெளியான செய்திகள் வந்த பத்திரிகைகளின் மை காய்வதற்கு முன்னரே, அது பிசுபிசுத்துப் போன செய்தி வந்தது. புதிய கூட்டமைப்பிலிருந்து விக்னேஸ்வரனும் மணிவண்ணனும் வெளியேறும் படங்களை வெளியிட்டு பத்திரிகைகள் சலசலப்பை ஏற்படுத்தின.

புதிய கூட்டமைப்பின் தலைமைப் பதவி அல்லது செயலாளர் பதவி மற்றும் தேர்தல் சின்னத்துக்கான தெரிவு, இக்கூட்டில் இணைந்த ஜனநாயகப் போராளிகள் மீதான சந்தேகம் என்பவையே புதுமுயற்சி கருவிலேயே கருகிப் போகக் காரணமென விக்னேஸ்வரன் அறிக்கை தெரியப்படுத்தியது. இருந்தாலும் ரெலோவும் புளொட்டும் களைத்துப் போகவில்லை. விக்னேஸ்வரன் மணிவண்ணனைத் தவிர்த்து மிகுதி ஐந்து அணிகளையும் இணைத்து புதிய கூட்டமைப்புக்கு வடிவம் கொடுத்துள்ளனர். இதற்கான சின்னமும் அறிவிக்கப்பட்டுள்ளது.

காலக்கிரமத்தில் புதிய கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதியப்படுமென்ற அறிவிப்பும் வெளியாகியுள்ளது. உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமோ இல்லையோ, 'ஒறிஜினல்' கூட்டமைப்பிலிருந்து இன்னொரு கூட்டமைப்பு பிறந்துள்ளது. இது ஆரோக்கியமானதா இல்லையா என்பதை உடனடியாகக் கூறமுடியாது.

ஆனால், இவ்வாறான போட்டிக் கூட்டமைப்பு தனித்துப் போட்டியிடும் தமிழரசுக் கட்சியை பாதிக்கலாமென்ற அச்சத்தில் புத்திசாலித்தனமான பரப்புரையை தமிழரசார் ஆரம்பித்துள் ளனர். தேர்தலின்போது அதிக ஆசனங்களைப் பெற்று ஸ்திரமான பிரதேச சபைகளை அமைப்பதற்காகவே தனித்தனியாக போட்டியிடுவதாகவும், தேர்தலின் பின்னர் கூட்டமைப்பின் பங்காளிகள் அனைவரும் இணைந்தே இயங்குவர் எனவும் அறிவித்தவாறு கட்டுப்பணங்களை செலுத்தி வருகிறது தமிழரசு. ஒற்றுமை என்ற வார்த்தையை பயன்படுத்தி வாக்குகளை அபகரிக்கும் ஒருவகை ஏமாற்றுத் தந்திரம் என்றே இதனைக் குறிப்பிட வேண்டும்.

இதனை எழுதும் வேளையிலுள்ள நிலைமையின்படி - உள்ளூராட்சித் தேர்தல் நடைபெறுமானால், ஒன்றுசேர முடியாத ஒரே கொள்கையை வாய்ப்பேச்சில் வைத்திருக்கும் தமிழரசு, மற்றும் புளொட், ரெலோ, இவர்களுடன் இணைந்த அணிகள் விக்னேஸ்வரன் - மணிவண்ணன் தரப்பு கஜேந்திரகுமாரின் தமிழ்க் காங்கிரஸ் அணி ஒருபுறமாகவும் சிங்கள தேசக் கட்சிகளின் வேட்பாளர்களும், அரச ஆதரவு கட்சிகளின் வேட்பாளர்களும் கொள்கையில்லாத சுயேட்சைக் குழுக்களும் ஒன்றுடனொன்று மோதி குளத்தைக் கலக்குவார்களானால், எந்தக் கொக்குக்கு எந்த இடத்து மீன்கள் கிடைக்குமோ?

ரணிலின் தமிழர் பிரச்சனைக்கான தீர்வு பேச்சுவார்த்தை ஒருபுறத்தே ஒதுக்கப்பட்டு விட்டது. அது தொடர்வதற்கு முன்னராக ரணில் விரும்பும் தமிழ்த் தேசிய பிளவு ஏற்படுத்தப்பட்டு விட்டது. கூட்டமைப்பின் ஆயுட்கால தலைவர், கூடாரத்துக்குள் புகுந்த ஒட்டகம், அங்கிருந்து வெளியேறிய (வெளியேற்றப்பட்ட) தலைகள், அன்னத்துக்காகப் போராடும் மக்களை மறந்து சின்னத்துக்காகப் போராடுவது...

கொள்கை வழியாக ஒன்றுபட முடியாதவர்கள் எவ்வாறு தமிழ்த் தேசியத்தை எதிர்காலத்தில் காப்பாற்றப் போகிறார்கள்?

●

# தமிழர் திருநாளான பொங்கல் இந்துக்களின் மதப் பண்டிகையா?

இரா சிவா

உலகம் முழுவதும் பரந்து வாழும் 8 கோடிக்கும் மேற்பட்ட தமிழர்களின் பண்பாட்டு அடையாளமாக உள்ளது பொங்கல் திருநாள். மார்கழி மாதத்தின் இறுதிநாளில் போகிப் பண்டிகையுடன் தொடங்கும் பொங்கல் திருவிழா அடுத்தடுத்த நாட்களில் பெரும் பொங்கல், மாட்டுப் பொங்கல், காணும் பொங்கல் என தமிழர் இல்லங்களில் களைகட்டும்.



தமிழ்நாடு, இந்தியா, இலங்கை மட்டுமின்றி புலம்பெயர் தேசங்களில் வாழும் தமிழர்களும் தங்களது பண்பாட்டு விழுமியங்களை மீண்டும் ஒருமுறை இறுகப்பற்றிக்கொள்வதற்கான வாய்ப்பாக அமைகிறது பொங்கல் திருவிழா. ஜாதி, மதம் கடந்து கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகை எவ்வளவு தொன்மையானது?

**பொங்கல் பண்டிகையின் தொன்மை**

சங்க காலங்களில் அறுவடைத் திருநாளாக அறியப்பட்டது, சமகாலத்தில் பொங்கல் திருநாளாக அறியப்படுகிறது.

தை மாதம் என்பது சங்ககாலந் தொட்டே தமிழர்களின் வரலாற்றில் கொண்டாட்டத்திற்கு உரிய மாதமாக இருந்து வந்துள்ளது.

'தைஇத் திங்கள் தண்கயம் படியும்' என்று நற்றினையிலும், 'நறுவீ ஐம்பால் மகளிர் ஆடும் தைஇத் தண்கயம் போலப் பலர்படிந்து' என்று ஐங்குறுநூறிலும், 'வையெயிற்றவர் நாப்பண் வகையணிப் பொலிந்து நீ தையினீ ராடிய தவந்தலைப் படுவயோ'என்று கலித்தொகையிலும், 'தைஇத் திங்கள் தண்ணிய தரினும்' என்று குறுந்தொகையிலும், 'தைஇத் திங்கள் தண்கயம் போல்' என்று புறநானூற்றிலும் தை



மாதத்தை கொண்டாட்டத்திற்குரிய மாதமாக சித்தரிக்கும் வகையில் பல குறிப்புகள் உள்ளன.

சங்க இலக்கியங்களில் பொங்கல் பண்டிகை குறித்து நேரடிக் குறிப்பு இல்லை என்றாலும் இன்று நாம் கொண்டாடும் பொங்கல் பண்டிகையோடு அதைத் தொடர்புபடுத்துவதற்கான கூறுகள் இருப்பதாகக் கூறுகிறார் டில்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் அறவேந்தன்.

"சங்க இலக்கியங்களில் அறுவடைத் திருநாள், தைநீராடல், தை மாதத்தை உயர்வாகக் கருதும் பதிவுகளை அதிகம் பார்க்க முடிகிறது. அதேபோலத் திருக்குறளில் மழையைப் போற்றுதல், உழவைப் போற்றுதல் பற்றி தனி அதிகாரங்களே உள்ளன. உழவைப் போற்றுதல் என்பதுதான் இன்று நாம் கொண்டாடும் பொங்கல் பண்டிகைக்கான அடிப்படை. இதிலிருந்தே பொங்கல் பண்டிகை என்பது தொல்தமிழரின் பண்டிகை என்பதை நாம் புரிந்துகொள்ளலாம்" என்கிறார் பேராசிரியர் அறவேந்தன்.

**நன்றி தெரிவிக்கும் நாள்**


வேளாண்பெருங்குடி மக்கள் பயிர் செய்ததை அறுவடை செய்யும் காலகட்டமான தை மாதத்தின் முதல்நாளில் தங்கள் வேளாண்மைக்கு உதவிய சூரியனுக்கும் மாட்டிற்கும் நன்றி செலுத்துவதே பொங்கல் பண்டிகையின் நோக்கமாகும்.

"இன்றைக்கு தேங்க்ஸ் கிவ்விங் டே என்று மேற்கத்திய நாடுகளில் நடத்துகிறார்களே அது போன்ற ஒரு நிகழ்வுதான் பொங்கலும். அன்றைக்கு இருந்த பிரதான தொழில் உழவுதான். ஆடிப்பட்டம் தேடி விதை என்பார்கள். ஆடி மாதம் விதைப்புக்கு என்றால் தை மாதம் அறுவடைக்குரியது. அறுவடை வெற்றிக்கு யார் யாரெல்லாம் காரணமோ அவர்களுக்கு நன்றி சொல்லும் நிகழ்வுதான் பொங்கல். அறுவடை வெற்றிக்கு பிரதான காரணம் சூரியனும் மாடும். அதற்காக இவை இரண்டுக்கும் நன்றி சொல்லும் வகையில் இந்த நாளைக் கொண்டாடுகிறோம்" என்கிறார் புலவர் செந்தலை ந. கவுதமன்.

வீட்டில் தேவையற்றதாக கருதும் பொருட்கள் மார்கழி இறுதிநாளான போகி தினத்தன்று தீயிலோ அல்லது நீரிலோ தூக்கியெறிப்படும். தேவையற்றதாக கருதும் பொருட்களை நம் வீட்டில் இருந்தும் வாழ்க்கையில் இருந்தும் போக்குவதுதான் போகிப் பண்டிகையின் நோக்கம். பழைய கழிதலும் புதியன புகுதலும் என்பதோடு புத்தொளியுடன் தொடங்கும் பொங்கல் திருநாளில் மேல்த்தோல் நீக்காத பச்சரிசியில் சர்க்கரைப் பொங்கல் வைத்து சூரியனுக்கு படைக்கப்படும்.

மறுநாள் உழவுக்கு உதவிய மாட்டினை சிறப்பிக்கும் வகையில் மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படும். மேற்கண்ட மூன்று தினங்கள் இன்றும் விமரிசையாக கொண்டாடப்பட்டு வந்தாலும், காணும் பொங்கல் கொண்டாட்டங்கள் அரிதாகிவருவதாகக் கூறுகிறார் புலவர் செந்தலை ந.கவுதமன்.

**அரிதாகிவரும் காணும் பொங்கல்**


புலவர் செந்தலை ந.கவுதமன்.

"காணும் பொங்கல் என்பது நம்முடைய வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் உதவியாக இருந்தவர்களை நேரில் சென்று சந்திக்கும் நாள். இது உறவுகளை வலுப்படுத்துவதற்கான நாள். அன்றைய காலங்களில் காணும் பொங்கல் என்பது ஆணும் பெண்ணும் காணும் பொங்கலாகவும் இருந்திருக்கிறது. திருமணம் தொடர்பான பேச்சுக்கள்கூட காணும் பொங்கல் நாளில் நடந்துள்ளன.

அந்தக் காலத்தில் காணும் பொங்கல் தினத்தில் ஆற்றங்கரை, குளத்தங்கரை, ஏரிக்கரை போன்ற பகுதிகளுக்குத் தங்கள் உறவினர்களுடன் சென்று நேரத்தைக் கழிப்பது, கிராமிய விளையாட்டுகளில் ஈடுபடுவது வழக்கம். ஆனால் இன்று காணும் பொங்கல் அரிதாகிவருகிறதுஹஹ என்கிறார் புலவர் செந்தலை ந.கவுதமன்.

இந்தியாவில் அனைத்து பண்பாட்டு அடையாளங்களையும் இந்துத்துவ மயப்படுத்தும் வேலைகள் நடந்துவருவதாக பரவலான குற்றச்சாட்டு எழுந்துள்ள நிலையில், பொங்கல் பண்டிகையும் அதிலிருந்து தப்பவில்லை. பொங்கல் பண்டிகை இந்துக்களின் பண்டிகை என்ற கருத்தை அண்மைக்காலங்களில் அதிகம் கேட்க முடியும் நிலையில், பொங்கல் என்பது மதத்தைக் கடந்து தமிழர்களின் கூட்டுப் பண்பாட்டு நிகழ்வு என்கிறார் செந்தலை ந.கவுதமன்.

"பொங்கல் பண்டிகை என்பது என்றைக்கும் மதவிழாவாக இருந்தது இல்லை. பொங்கல் என்பது கூட்டுப் பண்பாட்டு நிகழ்வு. தீபாவளி உட்பட பல மதப் பண்டிகைகளை நேரம் பார்த்து, நாள் பார்த்து, பஞ்சாங்கம் பார்த்து கொண்டாடுவார்கள். ஆனால், பொங்கல் பண்டிகை அப்படிக் கொண்டாடப்படுவது அல்ல. பொங்கல் எப்போது கொண்டாட வேண்டும் என்று யாரும் யாருக்கும் சொல்லத் தேவையில்லை. தை முதல் நாள் என்றால் பொங்கல் என்று அனைவருக்கும் தெரியும். அதற்கு காரணம் பொங்கல் என்பது "நாளும் கோளும் நலிந்தோர்க்கு இல்லை" என்ற தமிழ் மரபினரின் பண்டிகைஹஹ என்கிறார் அவர்.

இன்றைய காலத்தில் பொங்கல் பிரதான தொழிலாக உழவு இருந்தது மாறி, உலகமயமாகிவிட்ட இன்றைய காலத்தில் தொழில்ரீதியாக அனைவரும் வேறுவேறு துறைக்கு நகர்ந்துவிட்டோம். இப்படியான சூழலில் பண்பாட்டு ரீதியாக இன்றும் பொங்கல் கொண்டாட வேண்டிய தேவை உள்ளதா என்றால் இன்றைக்குத்தான் தேவை அதிகமாக இருப்பதாகக் கூறுகிறார் செந்தலை ந.கவுதமன்.

"உலகமயமாக்கல் மூலம் ஒற்றைப் பண்பாடு புகுந்துவிட்டது. அதனால் அனைத்து இனங்களும் தங்களது அடையாளங்களை இழக்க ஆரம்பித்துவிட்டன. சமூக மனிதர்களாக இருந்த நாம், இன்றைக்கு உதிரிமனிதர்களாக மாறிவருகிறோம். இப்படியான சூழலில் நம்முடைய அடையாளங்களைக் காக்க வேண்டுமென்றால் பொங்கல் போன்ற நம் பண்டிகைகளைக் கொண்டாட வேண்டியது கட்டாயம். அப்போதுதான் நம்முடைய இழந்த அடையாளங்களை மீட்கவும், இருக்கும் அடையாளங்களை காக்கவும் முடியும்" என்கிறார் புலவர் செந்தலை ந.கவுதமன். (பிபிசி)



# தமிழ் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?



யதீந்திரா

அரசியல் என்பது இயங்குநிலையாகும். அந்த இயங்குநிலை வெற்றியையும் தரலாம். தோல்வியையும் தரலாம். தோல்விகள் ஏற்படுகின்ற போது, அது அனுபவமாகின்றது. இலங்கை தமிழரசு கட்சி உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து, பல பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றிருக்கின்றன. ஆனால் எதுவுமே வெற்றியில் முடியவில்லை. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசு கட்சியின் காலம் தோல்வி. அமிர்தலிங்கம் தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணியின் காலம் தோல்வி, ஐந்து இயக்கங்களின் காலம் தோல்வி. விடுதலைப் புலிகளின் காலம் தோல்வி. இது சம்பந்தன் தலைமையிலான தமிழ் தேசியக் கூட்டமைப்பின் காலம். இதுவரையில் சம்பந்தனால் முன்னெடுக்கப்பட்ட அனைத்து முயற்சிகளும் தோல்விலேயே முடிந்திருக்கின்றன. இவ்வாறானதொரு பின்னணியில் தான், மீண்டுமொரு பேச்சுவார்த்தை தொடர்பில் பேசப்படுகின்றது.

கடந்தகால பேச்சுவார்த்தைகளை ஆழமாக எடுத்து நோக்கினால், ஒரு விடயம் வெள்ளிடைமலை. அதாவது, சிங்களவர்களோடு உள்நாட்டுக்குள் இடம்பெற்ற முயற்சிகள் அனைத்துமே தோல்வியில்தான் முடிந்திருக்கின்றது. வெளிநாட்டு தரப்புக்களின் தலையீட்டோடு இடம்பெற்ற பேச்சுவார்த்தைகள் கணிசமான தூரம் சென்றிருக்கின்றது. இதில் இந்திய-இலங்கை ஒப்பந்தம் மட்டுமே ஒரு தீர்வில் முடிவுற்றது. அது தொடர்பில் தமிழ் அரசியல் கட்சிகள் மத்தியில் மாறுபட்ட அப்பிராயங்கள் இருந்த போதிலும் கூட, கடந்த 73 வருடங்களாக முன்னெடுக்கப்பட்ட பல்வேறு நகர்வுகளுக்கு மத்தியில், நீடித்து நிலைக்கும் விடயமென்றால், அது இந்திய-இலங்கை ஒப்பத்தின் கீழ் கிடைக்கப்பெற்ற மாகாண சபை முறைமை ஒன்றைத்தான் கூறமுடியும்.

ஒஸ்லோ பேச்சுவார்த்தை ஒரு கணிசமான தூரம் சென்றிருந்த போதும், பேச்சுவார்த்தையில் நிர்பந்தத்தை பிரயோகிக்கக் கூடியநிலையில், நோர்வே இருந்திருக்கவில்லை. நோர்வே ஒரு வெறும் மத்தியஸ்தர் மட்டுமே! இந்த இரண்டு சந்தர்ப்பங்களை தவிர, அனைத்து முயற்சிகளும் ஏமாற்றங்களுடன்தான் முடிவுற்றிருந்தது. இதன் மூலம் கிடைக்கும் படிப்பினை என்ன? சிங்கள தரப்புக்களோடு பேச்சுவார்த்தைக்கு செல்கின்ற போது, நிர்பந்தத்தை ஏற்படுத்தக் கூடிய பலம் தமிழர் பக்கத்திலிருக்க வேண்டும். ஒன்றில் சொந்த பலமிருக்க வேண்டும் அல்லது வெளியாரின் ஆதரவிருக்க வேண்டும். செல்நாயகம் தலைமையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, ஒப்பீட்டடிப்படையில் மக்களை அணிதிரட்டிப் போராடக் கூடிய ஆற்றலுடன்தான் தமிழரசு கட்சியிருந்தது. ஆனால் அவ்வாறான போராட்டங்களை தென்னிலங்கை கருத்தில்கொள்ளவில்லை ஏனெனில் தென்னிலங்கைக்கு நெருக்கடி கொடுக்கக் கூடியதாக அவைகள் இருந்திருக்கவில்லை. இவ்வாறான தாரு பின்புலத்தில்தான் செல்வநாயகம் பிராந்திய அரசியல் சூழலால் ஏதும் விமோசனங்கள் ஏற்படாலாமென்று நம்பி, தனிநாட்டு கோரிக்கை தொடர்பில் சிந்தித்தார். தனிநாட்டு கோரிக்கையென்பது சொந்த பலத்திலிருந்து எழுந்த கோரிக்கையல்ல. பிரபாகரன் தான் அதனை சொந்த பலத்தோடு தொடர்புபடுத்தினார். ஆனால் செல்வநாயகம் எதிர்பார்த்த பிராந்திய அரசியல் சூழல் பிற்காலத்தில்தான் கனிந்தது. இந்தியத் தலையீட்டின் போது, இந்தியா முற்றிலும் மாறுபட்ட அணுகுமுறைகளை பிரயோகித்திருந்தது. இந்தியாவின் தலையீடு அடிப்படையிலேயே, கொழும்மை கட்டுப்படுத்துவதாக இருந்தது. இராணுவரீதியான தலையீட்டுக்கு முன்னர், தமிழ் ஆயுத இயக்கங்களின் படைவலுவை அதிகரித்தது. ஒரே நேரத்தில் இரண்டு வகையான இராணுவ தலையீடுகளை மேற்கொண்டது.

தமிழ் ஆயுத இயங்களை பயிற்சியளித்து ஊக்குவித்தது, பின்னர், அதனையடிப்படையாகக் கொண்டு, அமைதிக்கான இராணுவத் தலையீட்டை மேற்கொண்டது. இந்த இரண்டு அணுமுறைகளின் விளைவாக வந்ததே, இந்திய-இலங்கை ஒப்பந்தமும், 13வது திருத்தச்சட்டத்தினடிப்படையிலான மாகாண சபை முறைமையுமாகும். இந்திய - இலங்கை ஒப்பந்தமும் மாகாண சபை முறைமையும் பின்னிப்பிணைந்திருக்கின்றது. இதில் மாற்றங்களை ஏற்படுத்த வேண்டுமாயின், இந்தியாவின் அனுமதி தேவை. ஏனெனில் இது இரண்டு நாடுளுக்கிடையிலான ஒப்பந்தம். இரண்டு சிறிய நாடுகளுக்கிடையிலான அல்லது ஒரு பெரிய நாட்டுக்கும் சிறிய நாடுகளுக்குமிடையிலான உடன்பாட்டை பெரிய நாடு மீறுகின்ற போது, சிறியநாடுகள், சர்வதேச நீதிமன்றத்தை நாடும். ஆனால் இந்தியா போன்றதொரு நாடு எவ்வாறு விடயங்களை கையாளுமென்பதை, கொழும்பு நன்கறியும். இதன் காரணமாகவே ஏதோவொரு வகையில், மாகாண சபை முறைமையை விரும்பியோ, விரும்பாமலோ கொழும்பின் ஆளும்தரப்புக்கள் பாதுகாத்தே வந்திருக்கின்றன. ஆனால் தமிழ் அரசியல் கட்சிகள், அதனை பயன்படுத்துவதில் அக்கறையற்றிருந்தமையால் அல்லது அதற்கப்பால் செல்வது தொடர்பிலும், சமஸ்டிபற்றியும் பேசிவந்ததாலும், 13லுள்ள விடயங்களை பலவீனப்படுத்தும், நகர்வுகளையே கொழும்பு இதுவரையில் முன்னெடுத்துவந்திருக்கின்றது. தமிழ் அரசியல் தலைமைகள் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தாத நிலையில், இந்தியாவும், தமிழர்களின் பேரால்



ஒன்றில் இருப்பதிலிருந்து செல்ல வேண்டும் அல்லது அடையும் வரையில் போராட வேண்டும். அவ்வாறானதொரு போராட்டமென்பது இரத்தம் தோய்ந்தது. இன்றைய உலக ஒழுங்கில் இரத்தோய்ந்த போராட்டங்களின் பெயர் யுத்தமாகும். தமிழ் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?

தலையீடு செய்கின்ற நிலையிலிருந்து விலகியிருந்தது.

ராஜதந்திர அணுகுமுறையில், இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் மீதான உரித்தை நினைவுபடுத்தும் வகையில் அவ்வப்போது 13வது திருத்தச்சட்டத்தை உச்சரித்துக் கொண்டது. ஏனெனில் தேவையுள்ள தமிழர்கள் அதனை கையாளுவதற்கு அல்லது அதிலிருந்து முன்நோக்கி செல்வதற்கு முயற்சிகளை செய்யாத நிலையில், இந்தியா அதில் தலையீடு செய்வதற்கான எந்தவொரு சந்தர்ப்பமுமில்லை. இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி.ஜெயசங்கர், கூட்டமைப்பினுடனான சந்திப்பின் போது, ஒரு விடயத்தை தெளிவாக கூறியிருந்தார். 13வது திருத்தச்சட்டத்தினடிப்படையில் இந்தியா அப்பிராயங்களை கூறும், தலையீடுகளை செய்யும் ஆனால் சமஸ்டிப்படையிலான அரசியல் விடயமென்றால் அதனை நீங்கள்தான் பார்த்துக் கொள்ள வேண்டும். சமஸ்டியப்படையிலான அரசியல் ஏற்பாடொன்றிற்கு அரசாங்கம் இணங்கினால் அதில் எவருக்கும் பிரச்சினையில்லை ஆனால், அதனை நீங்கள் அரசாங்கத்துடன் மட்டும்தான் பேச வேண்டுமென்பதுதான் அதன் பொருள். இங்குள்ள பிரச்சினை அரசாங்கத்துடன் பேசி, அவ்வாறானதொரு அரசியல் தீர்வை அடைய முடியாது. இவ்வாறானதொரு நிலையில்தான் சமஸ்டியை இலக்காக வைத்திருந்தாலும் கூட, தற்போதிருப்பதை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டிய நிர்பந்தம் தமிழர்களுக்கு ஏற்படுகின்றது.

இல்லை - இதனை நாங்கள் பயன்படுத்தப் போவதில்லை. தாண்டிச் செல்லப் போகின்றோமென்றால், அவ்வாறு கூறுவதில் தவறில்லை ஆனால் அதனை கூறிக்கொண்டுமட்டும் இருப்பதால் எதுவும் அசையாது. தாங்கள் விரும்புகின்றவாறு அரசியல் அசைய வேண்டுமென்று எண்ணுபவர்கள், முதலில் தாங்கள் அசைய வேண்டும். ஆதன் பின்னரே மக்களை அசைக்க முயற்சிக்க வேண்டும். ஆனால் அதற்கான அரசியல் ஆளுமைகள் எவருமே தமிழ்ச் சூழலில் இல்லை. ஆகக் குறைந்தது, அமிர்தலிங்கம் போன்ற ஒரு மிதவாத தலைவர் கூட இன்றில்லை. மேலும் தமிழ் மக்களும் இவ்வாறான அரசியல் பரிசோதணை முயற்சிகளுக்கு ஒத்துழைக்கப் போவதில்லை.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் ஒரு நண்பர் கூறினார். ஒரு கப்பலை அனுப்பி, விரும்பியவர்கள் அனைவரும் ஏறுங்கள், பாதுகாப்பாக ஐரோப்பில் கொண்டுசேர்க்கின்றோமென்றால், இங்கு எவருமே இருக்கப் போவதில்லை. பிரச்சினை ஒரு கப்பல் போதாதென்பது மட்டும்தான். மக்களை பொறுத்தவரையில் சமஸ்டி பற்றியோ, ஏன் 13வது திருத்தம் தொடர்பிலோ சிந்திக்கும் நிலையிலில்லை. நாங்கள் பொதுவாக மக்களென்று கூறிக் கொண்டாலும் கூட, தமிழ் தேசிய அரசியலால் பஞ்சப்பராரிகளாக்கப்பட்ட தமிழ் மக்கள் பற்றித்தான் இந்தக் கட்டுரையாளர் குறிப்பிடுகின்றார். மக்களை நாங்கள் தொடர்ந்தும் அரிசிக்கும் பருப்புக்கும் கையேந்தும் நிலையில் வைத்துக் கொண்டு, இலட்சியவாதங்கள் தொடர்பில் பேசுவதில் பயனில்லை. இறுதியில் சீனாவும் தமிழ் மக்களுக்கு அரிசி வழங்குகின்றது. அசிரி வழங்குவதன் மூலம், வடக்கு கிழக்கில் காலூன்றலாமென்று சீனா கருதுகின்றளவிற்கு, நிலைமைகள் மாறியிருக்கின்றன. தமிழ் மக்களின் நிலைமை கையேந்தி நிலைக்கு தாழ்ந்திருக்கின்றது. இதில் என்ன பெருமையுண்டு?

இந்த நிலைமையை போக்கும் வகையில், தமிழ் தேசிய தரப்புக்கள் செயலாற்றவில்லையாயின், தமிழ் தேசியமென்பது, வெறுமனே சிலர் உச்சரிக்கும் விடயமாகிவிடும். இந்தக் கட்டுரையாளர் சில வருடங்களுக்கு முன்னர் எழுதிய கட்டுரையொன்றில் குறிப்பிட்டது போன்று, இறுதியில் தமிழ் தேசியமென்பது, அமெரிக்காவில் கம்யூனிசம் பேசுவது போன்றாவிடும். அமெரிக்காவில் கம்யூனிசம் பேசினால், அதனை அமெரிக்க ஆளும் வர்க்கம் பெரிதாக பொருட்படுத்தாது. தாராளமா பேசலாம் ஏனெனில் அவ்வாறு பேசும் எவருமே, செயலுக்குச் செல்லும் வல்லமையில்லையில்லாதவர்கள். அமெரிக்க மக்கள் அவ்வாறான கம்யூனிச கதையை நகைச்சுவை யாக கடந்துவிடுவர். செயலுக்கு செல்லாத கருத்தியல் கள், நிலைப்பாடுகள் தொடர்பில் ஆளும் வர்க்கம் அலட்டிக் கொள்வதில்லை. விடுதலைப் புலிகள் இருந்த காலத்தில் கூட, கொழும்பிலிருந்து தமிழ் தேசியம் பேசியவர்கள் இருந்தனர். ஊடகங்களில் அவ்வாறான வர்கள் இருந்தனர். ஆனால் அவர்களால் கொழும்பில் பாதுகாப்பாகவும் மகிழ்சியாகவும் இருக்க முடிந்தது. ஏனெனில் அவர்கள் பேசும் தேசியத்தால் ஆளும் வர்க்கத்தை அசைக்க முடியாது. எப்போது ஆளும் வர்க்கத்தின் இருப்பிற்கு ஒரு கருத்து அல்லது நிலைப்பாடு அச்சுறுத்தலாக மாறுகின்றதோ, அப்போதுதான் அதன் மீது அவர்களது பார்வை திரும்பும். இப்போது. வடக்கு கிழக்கிலிருந்து தமிழ் தேசியத்தை உச்சரிப்போரை கொழும்பு பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை.

இந்த பின்புலத்தில் நோக்கினால் தமிழ் தேசிய அரசியல் கட்சிகள் என்ன செய்ய முடியுமென்னும் கேள்வியுடன்தான், தமிழ் தேசிய அரசியல் தரித்துநிற்கின்றது. இரண்டு தெரிவுகள்தான் உண்டு. ஒன்று கிடைக்கும் சந்தர்பங்கள் ஒவ்வொன்றையும் உச்சபட்சமாக பயன்படுத்திக் கொண்டு, தமிழ் மக்களின் இருப்பை உறுதிப்படுத்தும் வகையில் செயற்படுவது. இரண்டு, அதற்கு தயாரில்லையென்றால், போராடுவது. அந்தப் போராட்டம் இதுவரையில் இடம்பெற்ற அனைத்து போராட்டங்களையும் கடந்துநிற்பதாகவும், கொழும்மை மட்டுமல்ல, பிராந்திய சக்தியான இந்தியாவையும் திரும்பிப் பார்க்கும் வகையில் அமைந்திருக்க வேண்டும். அப்படியொரு போராட்டத்தை தமிழர்களால் முன்னெடுக்க முடியுமா? மக்களை தங்கள் பின்னால் திரண்டுவரச் செய்யக் கூடிய தமிழ் ஆளுமைகள் இருக்கின்றனரா? எழுக தமிழ், பொத்துவில் - பொலிகண்டி இந்த அணுகுமுறைகள், அதே போன்று, அண்மையில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவென்னும் பெயரில் முன்னெடுக்கப்படும் அரசுசாரா நிறுவனங்களின் சமஸ்டிக் கதைகள், அனைத்துமே தோல்வியுற்ற அணுகுமுறைகளாகும். இவ்வாறான அணுகுமுறைகளுக்கு கொழும்பு இறங்கி வருமென்றால் நிலைமைகள் எப்போதே மாறியிருக்க வேண்டுமல்லவா! நாங்கள் தொடர்ந்தும் மக்களை ஏமாற்றும் வகையில், அரசியல் ஆதாயங்களுக்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதால், ஒரு போதுமே முன்னோக்கி பயணிக்க முடியாது. ஒன்றில் இருப்பதிலிருந்து செல்ல வேண்டும் அல்லது அடையும் வரையில் போராட வேண்டும். அவ்வாறானதொரு போராட்டமென்பது இரத்தம் தோய்ந்தது. இன்றைய உலக ஒழுங்கில் இரத்தோய்ந்த போராட்டங்களின் பெயர் யுத்தமாகும். தமிழ் தேசியவாதம் மீண்டுமொரு யுத்தத்திற்கு தயாரா?



# அஜித்தின் நாயகி

அஜித்தின் அடுத்த படத்தை விக்னேஷ் சிவன் இயக்க, நாயகி வேட்டை தீவிரமாக நடக்கிறது. ஏற்கெனவே த்ரிஷாவை முடிவுசெய்து வைத்திருந்தார்கள். ஆனால், த்ரிஷா, விஜயின் அடுத்த படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.

இதனால், நயன்தாராவை நாயகியாக்க பேச்சு நடந்தது. ஆனால், அதற்கு அஜித் மறுத்துவிட்டார் என்று கூறப்படுகின்றது. இந்நிலையில், ஹீமா குரோஷியை நடிக்க வைக்க பேச்சு நடக்கிறதாம்.

# காதலா நட்பா...?



ஐஸ்வர்ய லட்சுமி - விஷால் நடிப்பில் வெளியான அதிரடி படத்தின் மூலம் தமிழில் அறிமுகமானார். ஆனால், பொன்னியின் செல்வனும், கட்டா குஸ்தி படமும்தான் அவருக்கு புகழைப் பெற்றுத் தந்தது.

இந்த நிலையில் ஐஸ்வர்ய லட்சுமி, தமிழில் கைதி, மாஸ்டர், விக்ரம் போன்ற படங்களில் நடித்த அர்ஜுன் தாஸ் உடன் நெருக்கமாக எடுத்த படத்தை வெளியிட்டு அதனுடன் இதய சின்னத்தையும் போட்டிருந்தார். அவர்கள் காதலிப்பதாக பரபரப்பாக பேசப்பட்டது. இந்நிலையில், தாம் நண்பர்களே என்று பதிவிட்டுள்ளார் ஐஸ்வர்ய லட்சுமி.

# மீண்டும் பிந்தும் வாத்தி

தெலுங்கு இயக்குநர் வெங்கி அட்லூரி இயக்கத்தில் தனுஷ், சம்யுக்தா மேனன் நடித்துள்ள படம் 'வாத்தி". தமிழ், தெலுங்கில் தயாராகி உள்ள இந்த படத்திற்கு ஜீ. வி பிரகாஷ் இசையமைத்துள்ளார். தனுஷ் வாத்தியாராக நடித்துள்ளார். இதன் படப்பிடிப்பு முடிந்து இறுதிக்கட்ட பணிகள் விறுவிறுப்பாக நடக்கின்றன.

ஏற்கனவே டிசெம்பரில் இந்த படம் வெளியீடு என்று சொன்னார்கள். பின் பெப்., 17ல் வெளியாகும் என அறிவித்தனர். ஆனால், இப்போது அந்த திகதியிலும் படம் வெளியாகாது என்கிறார்கள். ஏப்ரல் அல்லது மேயில் தான் படம் வெளியாகும் என்கிறார்கள்.






# ஸ்ருஷ்டியின் நம்பிக்கை

'கத்துக்குட்டி' படத்தில் தஞ்சாவூர் பெண்ணாக கவனம் ஈர்த்த ஸ்ருஷ்டி டாங்கேவுக்கு, அடுத்தடுத்த வாய்ப்புகள் பெரிதாக அமையவில்லை. ஆனாலும், 'தமிழில் பெயரெடுத்தே தீருவேன்' என்கிற உறுதியில் மும்பை பக்கமே போகாமல் தமிழ்நாட்டில் தவமாக இருக்கிறார்.

கணேஷ் பாபு இயக்கி நடிக்கும் 'கட்டில்' படத்தில் ஸ்ருஷ்டிக்குப் பிரமாதமான பாத்திரமாம். "பாரம்பரியத்தின் மகிமையைச் சொல்லும் இந்தப் படம் நிச்சயம் என்னைப் பெரிதாகக் கொண்டுபோய்ச் சேர்க்கும்" என நெகிழ்கிறார் ஸ்ருஷ்டி.






**திரைப்படம் - வாரிசு**
**இயக்கம் - வம்சி பைடிபள்ளி**
**இசை - தமன்**
**நடிப்பு - விஜய், ராஷ்மிகா மந்தனா**

பெரும் எதிர்பார்ப்புக்கு மத்தியில் - குடும்ப பாசக் கதையை நம்பி வெளியாகியுள்ளது வாரிசு. இயக்குநரான வம்சி பைடிபள்ளி தெலுங்கில் இதற்கு முன்பு வெளிவந்த சில பல படங்களின் சாயலில் ரசிக்கக்கூடிய படத்தை கொடுத்துள்ளார்.

மிகப் பெரும் வர்த்தகர் சரத்குமார். அவருக்கு மூன்று மகன்கள். சிறீகாந்த், ஷாம், விஜய். தனது வாழ்க்கையை தன் விருப்புக்கு வாழ நினைப்பவர் விஜய். அதனால் அப்பாவுடன் சண்டை வர வீட்டை விட்டு வெளியேறி தனக்கு பிடித்த மாதிரி வாழ்கிறார். அப்பா, அம்மாவின் 60ஆம் கல்யாணத்துக்காக அம்மா வற்புறுத்தலால் வீட்டுக்கு வருகிறார். அப்பா சரத்குமார் புற்றுநோயால் பாதிக்கப்பட்டதை விஜயிடம் மட்டும் சொல்ல, அப்பாவுக்காக அவரின் நிறுவனப் பொறுப்பை ஏற்கிறார் விஜய். அது பிடிக்காத அவரின் அண்ணன்கள் சிறீகாந்த், ஷாம் வீட்டைவிட்டு வெளியே போகிறார்கள். ஒரு பக்கம் குடும்பம் கலைய, மறுபக்கம் வர்த்தக எதிரியான பிரகாஷ்ராஜ், சரத்குமாரின் நிறுவனத்தை அழிக்க நினைக்கிறார். அவற்றை விஜய் எப்படி சமாளிக்கிறார் என்பது தான் படத்தின் மீதிக் கதை.

குடும்பம் என்றால் குறைகள் இருக்கும். ஆனால், நமக்கு இருப்பது ஒரேயொரு குடும்பமே என்று அந்தக் குடும்பத்தை எப்படி ஒற்றுமையாக வைத்திருக்க வேண்டும் என்று போராடுகிறார் விஜய். அண்ணன்களுக்கும், ஏன் அப்பாவுக்கும்கூட குடும்பம் என்றால் என்ன என்று புரிய வைக்கிறார். குடும்ப உறவுகளைப் பற்றிய ஓர் அழுத்தமான கதையை எடுத்துக் கொண்ட இயக்குநர் மனதில் பதியும்படி கொஞ்சம் ஆழமாக, இன்னும் உணர்வுபூர்வமாகக் கொடுத்திருக்கலாம். பல சந்தர்ப்பங்கள் இருந்தும் அதை தவறவிட்டுவிட்டார்.

சண்டை, பாசப் பிணைப்பு, காதல், நகைச்சுவை என்று அனைத்திலும் சிறப்பாக நடித்திருக்கிறார் விஜய். அவருக்கென்றே வசனங்கள் - பாடல்கள் - நடனம் -சண்டை என அனைத்தும் உருவாகியிருக்கிறது.

நாயகத்தன்மை அதிகமான இந்தப் படத்தில் ராஸ்மிகாவுக்கும் முக்கியத்துவமில்லை. சும்மா வந்துபோகிறார். விஜயின் இரண்டு அண்ணன்களும் அப்பா நிழலில் வாழ்ந்து கொண்டு அப்பாவுக்கே குழி பறிக்கிறார்கள். விஜயின் அப்பாவாக சரத்குமார், அம்மாவாக ஜெயசுதா. விஜய்க்குப் பிறகு படத்தில் இவர்களுக்குத்தான் முக்கியத்துவம் அதிகம். வில்லனாக பிரகாஷ்ராஜ், பல படங்களில் பார்த்த அதே நடிப்பு. படத்தின் முதல் பாதியில் அவ்வப்போது சிரிக்க வைக்கிறார் யோகிபாபு.

தமனின் இசையில் "ரஞ்சிதமே" பாடல் மட்டுமே ஈர்க்கிறது படம். விஜயின் அதிதீவிர ரசிகர்களை மட்டுமே திருப்தி செய்யும் - மூன்று மணி நேர படம் என்பதும் சலிப்பை தருகிறது.

**திரைப்படம் - துணிவு**
**இயக்கம் - வினோத்**
**இசை - ஜிப்ரான்**
**நடிப்பு - அஜித்குமார், மஞ்சுவாரியர், சமுத்திரக்கனி**

அஜித் ரசிகர்களுக்கு என்ன பிடிக்கும் என்பது இயக்குநர் விநோத்துக்கு இந்த படத்தில்தான் நன்றாக புரிந்திருக்கிறது. காட்சிக்குக் காட்சி அஜித்தை ஆட விட்டும் - அதிரடி செய்யவிட்டும் - சிரிக்க விட்டும் - நடக்க விட்டும் - நடிக்க விட்டும் இந்த பொங்கல் போட்டியில் "ஆட்ட நாயகன்" விருதை வாங்கிக் கொடுத்துவிட்டார்.

சென்னையில் உள்ள வங்கியிலிருந்து 500 கோடி ரூபாயை கொள்ளையடிக்க காவல்துறை உதவி ஆணையாளர் உள்ளிட்ட குழு. கொள்ளையடிக்கச் சென்ற அதே வங்கியில் சர்வதேச கொள்ளையனான அஜித் சென்று அந்தக் கொள்ளையர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருகிறார். அவரைப் பிடிக்க காவல்துறை ஆணையர் சமுத்திரக்கனி தலைமையில் ஒரு குழு அமைக்கப்பட்டு அஜித்துடன் பேச்சு நடத்துகிறார்கள். ஆனால், உண்மையிலேயே அந்த வங்கியை கொள்ளையடிப்பது யார் என்ற உண்மையை இந்த நாட்டு மக்களுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார் அஜித். அது என்ன என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

வங்கிகள் மக்களை எப்படி ஏமாற்றுகின்றன. கடனட்டை, குறைந்த நிதி இருப்பு என்பவற்றில் மக்கள் எப்படி ஏமாறுகிறார்கள் என்பதையும் வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.




படம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே அவரின் அறிமுகம் அதிரடியாக ஆரம்பமாகிறது. இந்த அதிரடி அப்படியே கடைசி வரை இருப்பது தான் படத்துக்கு கூடுதல் பலம். இப்படி ஒரு ஸ்ரைலான நடிப்பை அஜித்திடம் முன்னர் பார்த்ததில்லை எனலாம். படம் முழுவதும் அவரின் தனிமனித ஆட்டம். அஜித்தின் பங்காளராக மஞ்சு வாரியர். நடிப்பில் மிரள வைத்துள்ளார்.

நேர்மையான காவல்துறை அதிகாரியாக சமுத்திரக்கனி. கான்ஸ்டபிளாக மகாநதி சங்கர், வங்கி மேலாளராக ஜிஎம் சுந்தர், பிரதான வில்லனாக வங்கி தலைவர் ஜோன் கொகேன், டிவி நிருபராக மோகனசுந்தரம், இன்ஸ்பெக்டராக பகவதி பெருமாள். கிடைத்த இடைவெளியில் சிறப்பாக செயல்பட்டுள்ளனர்.

சண்டைக்காட்சிகள் சிறப்பு. ஜிப்ரானின் பின்னணி இசை படத்தின் வேகத்துக்கு இன்னும் பரபரப்பைக் கூட்டுகிறது. அதேநேரத்தில் சினிமாதனத்துக்கும் குறைவில்லை. தேவையற்ற காட்சிகள் என்று எதுவுமில்லை. 'துணிவு 2' அடுத்து வர வாய்ப்புண்டு.

# மெஸ்ஸிக்கு சவால்



'பிபா' சிறந்த வீரருக்கான பரிந்துரைப் பட்டியலில் ஆர்ஜென்ரீனாவின் மெஸ்ஸி, பிரான்ஸின் எம்பாப்வே உள்ளிட்ட வீரர்கள் இடம்பிடித்துள்ளனர். போர்த்துக்கல்லின் ரொனால்டோவுக்கு இடம் கிடைக்க வில்லை.

சர்வதேச உதைபந்தாட்ட கூட்டமைப்பு ('பிபா') சார்பில், ஆண்டுதோறும் சிறந்த வீரர், வீராங்கனைகளுக்கான விருது வழங்கப்படும். கடந்த ஆண்டில் சிறப்பாக செயல்பட்ட வீரர்கள் பரிந்துரைப்பட்டியலில் இடம்பெறுவர். இதன்படி, 2022ஆம் ஆண்டுக்கான 14 வீரர்கள் அடங்கிய பரிந்துரைப் பட்டியலை 'பிபா' வெளியிட்டுள்ளது.

இதில் ஆர்ஜென்ரீனா அணியின் தலைவர் மெஸ்ஸி இடம்பெற்றுள்ளார். கடந்த ஆண்டு கட்டாரில் நடந்த உலகக் கிண்ணத்தில் இவரது தலைமையிலான ஆர்ஜென்ரீனா அணி இறுதிப் போட்டியில் பிரான்ஸை வீழ்த்தியது. இதன் மூலம், 36 ஆண்டுக்குப்பின் ஆர்ஜென்ரீனாவுக்கு சம்பியன் பட்டம் வென்று தந்தார். இத்தொடரில் மொத்தம் 7 கோல் அடித்த மெஸ்ஸி, 'தங்கப்பந்து' விருதை கைப்பற்றினார்.

இப்பட்டியலில், பிரான்ஸ் இளம் வீரர் எம்பாப்வேயும் இடம்பெற்றுள்ளார். 24 வயதான இவர், கடந்த உலகக் கிண்ணத்தில் 8 கோல் அடித்து ஆர்ப்பரித்தார். இறுதியாட்டத்தில் 'ஹட்ரிக்' கோல் சாதனை படைத்த எம்பாப்வே அதிக கோல் அடித்ததற்கான 'தங்கக் காலணி' விருதை வசப்படுத்தினார்.

இவர் இம்முறை வெற்றி பெற்றால், முதல் முறையாக 'பிபா' சிறந்த வீரர் விருதை தட்டிச்செல்லலாம். இது தவிர பிரேசில் நட்சத்திர வீரர் நெய்மரும் இடம்பெற்றுள்ளார். இவரின் பிரேசில் அணி உலகக் கிண்ணத் தில் காலிறுதியில் குரோஷியாவிடம் வீழ்ந்தது.

பிரான்ஸின் பென்சிமா, மொராக்கோவின் ஹக்கிமி, போலந்தின் லெவண்டோவ்ஸ்கி உள்ளிட்டோரும் இடம்பிடித்துள்ளனர்.

போர்த்துகல் உதைபந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு இம்முறை இடம் கிடைக்க வில்லை. இரண்டு முறை இந்த விருதை வென்றுள்ள ரொனால்டோவுக்கு கடந்த உலகக் கிணணத் தொடர் ஏமாற்றமாக அமைந்தது.

வெற்றி பெறும் நட்சத்திரங்களுக்கான பெயர்களை வரும் பெப்ரவரி 27ல் 'பிபா' அறிவிக்கும்.

# நான்கு முனை போட்டி சாதிக்குமா இலங்கை?

இங்கிலாந்தின் லண்டன் ஓவல் விளையாட்டரங்கில் இந்த வருடம் நடைபெறவுள்ள உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்தில் விளையாடுவதற்கான தகுதியைப் பெற நான்குமுனை போட்டி நிலவுகிறது.

அவுஸ்திரேலியா, இந்தியா, இலங்கை, தென்னாபிரிக்கா ஆகிய அணிகளிடையேயே இறுதி ஆட்ட வாய்ப்புக்கான போட்டி நிலவுகிறது. இந்த நான்கு அணிகள் சம்பந்தப்பட்ட கடைசி டெஸ்ட் தொடர்கள் அடுத்து வரும் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ளன.

புள்ளிகள் அடிப்படையில் தற்போது முதல் 4 இடங்களில் இருக்கும் அவுஸ்திரேலியா (75.56 புள்ளிகள்), இந்தியா (58.93 புள்ளிகள்), இலங்கை (53.33 புள்ளிகள்), தென்னாபிரிக்கா (48.72 புள்ளிகள்) ஆகிய 4 அணிகள் இறுதிப் போட்டிக்கான 2 வாய்ப்புகளுக்கு குறிவைத்து தத்தமது கடைசி டெஸ்ட் தொடர்களை எதிர்கொள்ளவுள்ளன.

தற்போது முதல் இரண்டு இடங்களிலுள்ள அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஆனால், இந்த இரண்டு அணிகளுக்கும் இலங்கையும் தென்னாபிரிக்காவும் கடும் போட்டியை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

எவ்வாறாயினும் இந்த நான்கு நாடுகள் சம்பந்தப்பட்ட டெஸ்ட் தொடர்களில் அவுஸ்திரேலியா - இந்தியா இடையிலான 4 போட்டிகள் கொண்ட தொடர் முதலில் நடைபெறவுள்ளது. இந்தத் தொடரின் முடிவு ஐ. சி. சி. உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடவுள்ள அணிகளைப் பெரும்பாலும் தீர்மானித்துவிடும் என்று நம்பலாம்.

தற்போதைய புள்ளிகளின் அடிப்படையில் ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடுவதற்கான வாய்ப்பை அவுஸ்திரேலியா அதிகரித்துள்ளது. அண்மையில், நடந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவதும் கடைசியுமான டெஸ்ட் போட்டியை அவுஸ்திரேலியா சமநிலையில் முடித்ததால் அதன் இறுதி ஆட்ட வாய்ப்பு உறுதிசெய்யப்படுவது இந்தியாவுடனான தொடர் முடிவுவரை தாமதப்படுத்தப்பட்டுள்ளது.

2021 - 2023 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் கிண்ணத்துக்கான பருவகாலம் எதிர்வரும் மார்ச் 31ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளது.

இந் நிலையில், அவுஸ்திரேலியா - இந்தியா மோதும் கடைசி டெஸ்ட் தொடர் பெப்ரவரி, மார்ச் மாதங்களில் நடைபெறவுள்ளது.




**அவுஸ்திரேலியாவின் வாய்ப்பு**

போர்டர் - காவஸ்கர் கிண்ணத்துக்காக நடைபெறும் 4 போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரில் அவுஸ்திரேலியா 0 - 4 என தோல்வி அடைந்தால் அதன் புள்ளி 59.65ஆக குறையும். இந் நிலையில் நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் இலங்கை 2 போட்டிகளிலும் வெற்றிபெற்றால் மாத்திரமே அவுஸ்திரேலியாவின் இறுதி ஆட்ட வாய்ப்பு அற்றுப் போகும். ஆனால், நியூசிலாந்து மண்ணில் இலங்கையால் சாதிக்க முடியும் என்பது மிகமிகக் கடினமே.

**இந்தியாவின் வாய்ப்பு**

தனது சொந்த மண்ணில் அவுஸ்திரேலியாவை 3 - 1 அல்லது அதனைவிட சிறந்த தொடர் வெற்றியை ஈட்டினால் இந்தியா இலகுவாக இறுதி ஆட்டத்தில் விளையாடத் தகுதிபெறும். மற்றைய தொடர் முடிவுகள் எப்படி அமைந்தாலும் அது இந்தியாவுக்கு பாதிப்பை ஏற்படுத்தாது.

ஒருவேளை தொடர் 2 - 2 என சமநிலையில் முடிவடைந்தால் இந்தியாவின் புள்ளி 56.94 ஆக குறையும். அப்படி குறைந்தால் இந்தியாவுக்கு முதலிரு இடங்களுக்குள் இடம்பெற முடியாமல் போகும். மேலும் மேற்கிந்தியத் தீவுகளை தென்னாபிரிக்கா 2 - 0 என வெற்றிகொண்டால் இந்தியா 4ஆம் இடத்திற்கு பின்தள்ளப்படும். ஆனால், இவை அனைத்தும் சாத்தியப்படக் கூடியவை அல்லவென்பதால் இந்தியா இரண்டாவது தொடர்ச்சியான தடவையாகவும் உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதிபெறும் என கருதப்படுகிறது.

**இலங்கையின் வாய்ப்பு**

தற்போது 53.33 புள்ளிகளுடன் 3ஆம் இடத்தில் இருக்கும் இலங்கை, மார்ச் மாதம் நடைபெறவுள்ள நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் 2 - 0 என்ற ஆட்டக் கணக்கில் முழுமையாக வெற்றி பெற்றால் அதன் புள்ளி 61.11ஆக உயரும். அதேவேளை அத்தொடர் 1 - 1 என சம நிலையில் முடிவடைந்தால் இலங்கையின் புள்ளி 52.78ஆக இருக்கும். இந் நிலையில் டெஸ்ட் தொடரில் இந்தியா 1 - 3 அல்லது 0 - 1 என அவுஸ்திரேலியாவிடம் தோல்வி அடைந்தால் இலங்கை இறுதிப் போட்டியில் விளையாட தகுதிபெறும்.

**தென்னாபிரிக்காவின் வாய்ப்பு**

அவுஸ்திரேலியாவில் 3 போட்டி கள் கொண்ட தொடரில் 0 - 2 என தோல்வி அடைந்ததால் தென்னாபிரிக்காவின் இறுதி ஆட்ட வாய்ப்பு கேள்விக்குறியாகியுள்ளது. 48.72 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில் இருக்கும் தென்னாபிரிக்கா, தனது கடைசி டெஸ்ட் தொடரில் மேற்கிந்தியத் தீவுகளை 2 - 0 என முழுமையாக வெற்றி கொண்டால் அதன் புள்ளி 55.56 ஆக உயரும்.

நியூஸிலாந்துடனான தொடரில் இலங்கை 1 - 0 என வெற்றிபெற்று இந்தியாவால் 21 புள்ளிகளுக்குமேல் பெற முடியாமல் போனால் அவுஸ்திரேலியாவுடன் தென்னாபிரிக்கா இறுதிப் போட்டிக்கு முன்னேறும்.

**ஏனைய அணிகள்**

புள்ளிகள் அடிப்படையில் இங்கிலாந்து (46.97 புள்ளிகள்), மேற்கிந்தியத் தீவுகள் (40.91 புள்ளிகள்), பாகிஸ்தான் (38.10 புள்ளிகள்), நடப்பு சம்பியன் நியூசிலாந்து (27.27), பங்களாதேஷ் (11.11 புள்ளிகள்) ஆகிய அணிகள் அடுத்த 5 இடங்களில் இருக்கின்றன. இவற்றில் மேற்கிந்தியத் தீவுகளுக்கும் நியூசிலாந்துக்கும் தலா 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர்கள் மிஞ்சியிருக்கின்றபோதிலும் அந்த அணிகளால் பெறப்படும் அதிகபட்ச புள்ளிகள் இறுதி ஆட்டத்திற்கு தகுதிபெற போதுமானதாக அமையப்போவதில்லை.

எனவே, ஐசிசி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் இறுதி ஆட்டத்துக்குத் தகுதிபெற நான்கு முனை போட்டியே நீடிக்கப் போகின்றது.

## நூல் அறிமுகம்:

# குழந்தைகளுக்கான எளிய நடையில் பஞ்சகல்யாணியின் அழகிய உலகம்

முருகபூபதி

இலக்கியப்படைப்புகளில், குழந்தைகளுக்கான பிரதிகளை எழுதுவதுதான் மிகவும் சிரமமானது எனச்சொல்வார்கள். அதற்கு குழந்தைகளின் உளவியல் தெரிந்திருக்கவேண்டும்.

பெரும்பாலும் குழந்தை இலக்கியம் படைப்பவர்கள் பெரியவர்களாகத்தான் இருக்கிறார்கள். பாரதி முதல் அழ. வள்ளியப்பா வரையில் மாத்திரமின்றி, அதன் பிறகும் குழந்தை இலக்கியங்களை , குழந்தைகளுக்காக எழுதுபவர்கள் பெரியவர்கள்தான்.

இவர்கள் தமது வயதையொத்தவர்களுக்கு ஏதேனும் எழுதினாலும், குழந்தைகளுக்காக எழுத முன் வரும்போது, குழந்தைகளாகவே மாறிவிடவேண்டும்.

அவ்வாறுதான் ஒரு குழந்தை இலக்கியம்படைத்திருக்கும் பஞ்சகல்யாணி என்ற மருத்துவரை அவதானிக்கின்றேன். இவர் எழுதி, யாழ்ப்பாணம் - அல்வாய் ஜீவநதி வெளியீடாக வந்துள்ள அழகிய உலகம் என்ற சிறிய நூலை ( 56 பக்கங்கள்தான் ) அவுஸ்திரேலியா - மெல்பனில் வதியும் பேராதனை பல்கலைக்கழகத்தின் முன்னாள் விரிவுரையாளர் கலாநிதி காசிநாதர் அவர்கள் எனக்கு படிக்கத்தந்தார்.

நாமெல்லோரும் ஒரு காலத்தில் குழந்தைப் பருவத்திலிருந்து வந்தவர்கள்தான். அந்தப்பருவத்தில் அனைவருக்கும் விருப்பத்திற்குரிய செல்லப்பிராணிகள்




கோழி, சேவல், குருவி, காகம், புறா, கிளி, நாய், பூனை, முயல், ஆடு, மாடு என்பவைதான்.

இவைதவிர வானத்தில் தவழும் வட்ட நிலாவும் விருப்பத்திற்குரியதா கவே இருக்கும்.

பெற்றோர்கள் குழந்தைகளுக்கு மேற்சொன்ன பிராணிகளையும் வானத்தில் ஒளிரும் நிலாவையும் காண்பித்தே உணவூட்டுவார்கள். உணவருந்த மறுக்கும் குழந்தைக ளுக்கு இவ்வாறு காண்பித்து வேடிக் கையான கதைகளைச் சொல்லி உண வூட்டினால், அவர்கள் சாப்பிட்டுவிடு வார்கள் என்ற நம்பிக்கையில், அவ்வாறு செய்வார்கள்.

அத்தகைய குழந்தைகளின் உலகம் அழகானது.

பஞ்சகல்யாணி, அத்தகைய உலகத்தையே இந்த நூலின் மூலம் காண்பித்திருக்கிறார். தற்போது இலங்கை வடமராட்சியில் மருத்துவராக பணியாற்றும் பஞ்சகல்யாணி, தனது சிறுவயதுப் பராயத்திலிருந்தே வாசிக்கும் ஆர்வத்தை வளர்த்துக் கொண்டவர் என அறிகின்றோம்.



புலோலியில் பிறந்திருக்கும் பஞ்கல்யாணி, தமது குழந்தைப்பருவத்திலேயே மலர்கள், மரங்கள், பறவைகள், வீட்டு மிருகங்கள் மீது நேசம் கொண்டிருந்த வர். இயற்கையை ரசித்தவர். அதனால், அவரால் இத்தகைய குழந்தை இலக்கியம் படைக்க முடிந்திருக்கிறது.

பெற்றோர்களிடமிருந்து புத்தகங்களை பெற்று வாசித்து, தனது வாசிப்பு அனுபவத்தையும் வளர்த் துக்கொண்டிருக்கும் பஞ்சகல்யாணி, தனது பாடசாலைக் காலத்தில் கட்டு ரைகள், கவிதைகள் எழுதி பரிசில்களும் பெற்றவர். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் பயிலும்போது அங்கு வெளியான நாடி என்னும் இதழில் கதைகள், கவிதைகள் படைத்திருப்பவர்.

இந்நூலில் மற்றும் ஒரு சிறப்பு என்னவென்றால், இதற்கு முகப்பு ஓவியம் வரைந்திருப்பவர் பஞ்கல்யாணியின் ஆறுவயதான குழந்தை - செல்வ மகள் புராதனி.

தனது என்னுரையில் பஞ்சகல்யாணி இவ்வாறு குறிப்பிடுகிறார்.

“ எனது குழந்தைப்பருவத்தில் அதாவது 1980 காலப்பகுதியில் நான் எதை ரசித்தேனோ, அதையே கூடுதலாக எழுதியுள்ளேன். அதைவிட எனது மகளிற்கு என்னென்னத்தையெல்லாம் காட்டி ரசிக்கவைத்தேனோ அதையும் எழுதியுள்ளேன்.

இந்நூலுக்கு அணிந்துரை எழுதியிருக்கும் மூத்த எழுத்தாளர் குப்பிழான் ஐ. சண்முகன், “ பஞ்சகல்யாணியின் பாடல்களின் உலகம் விசாலமானது. நாம் அன்றாடம் காணும் உயிரினங்களில் இலயித்து வியக்கிறார். காணும் காட்சிகளில் மனதைப் பறிகொடுக்கிறார். நமது பண்பாட்டுக்கோலங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருக்கிறார் “ என எழுதியுள்ளார்.

அம்மா, பசு, ஆட்டுக்குட்டி, பூனைக்குட்டி, நாய்க்குட்டி, முயல், உட்பட நிலா, கடலும் கரையும், குளம் என இயற்கை குறித்தும், சைக்கிள் வண்டி, ஆகாய விமானம் முதலான வாகனங்கள் பற்றியும் மொத்தம் 27 பாடல்களை இந்நூல் கொண்டிருக்கிறது.

இந்தப்பாடல்களை பஞ்சகல்யாணி, ஓசைநயத்துடனும் எழுதியிருப்பதுதான் சிறப்பு. ராகமீட்டி பாடமுடியும்.

**பிரதிகளுக்கு :**
**எஸ். பஞ்சகல்யாணி -**
**‘அரன்’, பிலாவடித்தெரு, புலோலி தெற்கு, புலோலி.**

---




# வியுக்தியார் பதில்கள்

**தியாகராஜா வினோத், சண்டிலிப்பாய், மானிப்பாய்**

**கேள்வி:** வடக்கு கிழக்கு எங்கும் தமிழ் தேசியக் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து சமஷ்டிக் கோரிக்கையையே எமது தீர்வாக வலியுறுத்த வேண்டும் என்று கோரிக்கை வைத்து போராட்டங்கள் நடந்து கொண்டிருக்க, ஏற்கனவே மூன்று கட்சிகளுடனிருந்த கூட்டமைப்பின் பிரதான கட்சியான தமிழரசு கட்சி தனித்து போட்டியிடுவதென்று முடிவெடுத்திருப்பது குறித்து என்ன நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இதில் நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. தமிழர் பிரச்சினைக்கு தீர்வுகாண்பதற்கான சந்தர்ப்பங்கள் எப்போதெல்லாம் கூடிவருகின்றதோ அப்போதெல்லாம் தமிழர் தரப்புக்களே அவற்றைக் குழப்பி விடுவதே பல தசாப்தங்களாக நடந்துகொண்டிருக்கின்றன. தமிழ் தேசியக் கூட்டமைப்பை இல்லாமல் செய்யவேண்டும் என்று தெற்கில் சிங்கள கட்சிகள் மட்டும் விரும்புகின்றன என்று நினைக்காதீர்கள். கூட்டமைப்பை பலவீனப்படுத்த வேண்டும் என்று அதிகம் ஏன் கூட்டமைப்பிற்குள்ளேயே சிலர் இருக்கிறார்களோ என்றே எண்ணத் தோன்றுகின்றது. எது எப்படியோ, தமிழரசின் முடிவு அவர்களுக்கு மாத்திரமே பாரிய அடியை கொடுக்கும் என்பதை அவர்களின் கட்சித் தலைவரே முன்னெச்சரிக்கையாக கூறியிருக்கிறாராமே.

---

**எஸ். நிதர்சன்,**
**கலைமகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** ஜனாதிபதி தனது நிறைவேற்று அதிகாரத்துக்கு உட்பட்டு நிறைவேற்றக்கூடிய விடயங்களை இந்த மாதத்துக்குள் - ஜனவரி 31இற்குள் நிறைவேற்றி நல்லெண் ணத்தை வெளிப்படுத்தவேண்டும். இதைத் தொடர்ந்து, அடுத்த கட்டப் பேச்சு களை முன்னெடுபபது என்று தமிழ்த் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளன என்று செய்திகளைப் பார்த்தேன். இப்போதுதான் நமது தலைவர்கள் இப்படி நல்ல முடிவுகளை எடுக்கின்றார்கள் போல தெரிகின்றது.

**வியுக்தியார்:** ஏற்கனவே கடந்த டிசம்பர் பத்தாம் திகதி நடைபெற்ற அனைத்துக்கட்சி கூட்டத்திலேயே, இதுகுறித்து நமது தலைவர்கள் பேசினார்கள். பின்னர் 21ம் திகதி நடந்த உத்தியோகப்பற்றற்ற கூட்டத்தில் அரசியலமைப்பில் இருப்பவற்றில் எதனை நிறைவேற்ற வேண்டும் என்பதை பட்டியலிட்டு தன்னிடம் தருமாறு ஜனாதிபதி கோரியிருந்தார். ஆனால் அப்படியொரு பட்டியலோ அல்லது இதுவரை எவை எவை நிறைவேற்றவில்லை என்பது கூட நமது தலைவர்களுக்கு தெரிந்திருக்கவில்லை என்பதுதான் உண்மை. வேறு ஒன்றும் இல்லை, தங்கள் அம்மணங்களை மறைக்க மற்றவர்களின் பின்னால் மறையப்பார்க்கிறார்கள்.

---

**செல்லத்துரை அனுசியா,**
**கோவில் வீதி, நல்லூர்**

**கேள்வி:** யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் மேயர் வி. மணிவண்ணன் தமிழ் மக்கள் கூட்டணியில், விக்கினேஸ்வரன் எம்.பியின் கட்சியில் இணைந்திருக்கிறார். இது விக்கினேஸ்வரனுக்கு நல்லதா மணிவண்ணனுக்கு நல்லதா? எங்கள் கருத்தை அறிய விரும்புகின்றோம்.

**வியுக்தியார்:** முன்னாள் மேயர் மணிவண்ணன் முன்னர் தானே உண்மையான தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்காரரர் என்று சொல்லிக்கொண்டிருந்தவர். இப்போது அதனை மறந்துவிட்டதாகவே தெரிகின்றது. நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் நடந்துகொண்ட விதம் தமிழ்மக்களுக்கு அவர்கள் மீது வெறுப்பை ஏற்படுத்தியிருந்தது. அதனால் அவர்கள் கூட்டமைப்புக்கு வாக்களிக்க விரும்பாததால், மற்றைய தமிழ் தேசியம் பேசிய கட்சிகளுக்கு வாக்களித்தார்கள். அதனால் எம்.பி.யானவர்தான் விக்கினேஸ்வரன். இப்போது கூட்டமைப்பு மீது அப்போதிருந்ததுபோன்ற ஒரு அதிருப்தி இல்லை. நான் சொல்வது தமிழரசு இல்லாத கூட்டமைப்பை பற்றி... எனவே அடுத்து ஒரு தேர்தல் நடந்தால் விக்கினேஸ்வரனின் கட்சிக்கு என்ன நடக்கும் என்பது தெரியவரும். மணிவண்ணன் மீது இருந்த கொஞ்ச நம்பிக்கையையும் அவர் தோல்தலில் போட்டியிடுவதற்காக அவசரமாக எடுத்த முடிவால் தகர்ந்து விட்டது. இருவருக்கும் எந்த நன்மையும் கிடைக்கப்போவதில்லை என்றே நினைக்கின்றேன்.

---

**வி. தனுசன், குருமண்காடு, வவுனியா.**

**கேள்வி:** கூட்டமைப்பிலிருந்து தமிழரசு கட்சி வெளியேறி தனித்து இயங்குவது என்று முடிவெடுத்துவிட்டது. ஆனால் தமிழரசு கட்சியின் பெருந்தலைவர் சம்பந்தனோ, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலை முகங்கொடுப்பது தொடர்பில் தமிழ்த்

தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளின் நிலைப்பாடுகள் மற்றும் தனது கருத்துக்கள் ஆகியவற்றை விரைவில் உத்தியோகபூர்வமாக அறிவிப்பேன் என்கிறார். அப்போ தனித்து போட்டியிடுவது என்பது உத்தியோகபூர்வ முடிவு இல்லையா? என்ன ஒரே குழப்பமாக இருக்கின்றதே.

**வியுக்தியார்:** அவர் இப்போது கூட்டமைப்பு என்ற அமைப்பின் தலைவரே இல்லை என்பது கூட அவருக்கு தெரியுமோ தெரியவில்லை. அவர் இப்போது இலங்கை தமிழரசு கட்சியின் பாராளுமன்ற குழுத் தலைவர் மாத்திரமே. அவர் கட்சியில் தனது கட்டுப்பாட்டை இழந்து பல மாதங்கள் ஆகிவிட்டன. உள்ளூராட்சி தேர்தல் தொடர்பாக விரைவில் அறிவிப்பேன் என்று அவர் சொல்லி பல நாட்கள் ஆகின்றன. சில வேளை தேர்தல் முடிந்த பின்னர்தான் அவரது உத்தியோகபூர்வ அறிவிப்பு வருமோ தெரியவில்லை. பொறுத்திருந்து பார்ப்போம்.

சிறிரஞ்சனி

# நிழல் ஒன்று

ஜன்னல் கண்ணாடிக்கூடாக வெளியே வெறிச்சுப் பார்த்துக்கொண்டிருந்தான் சுந்தர். மேப்பிள் மரத்தில் ஒரு சில அரும்புகள் துளிர்விட்டுக்கொண்டிருந்தன. அங்கும் இங்குமா சில பறவைகள் பாடிக்கொண்டிருந்தன. ஆனால் தெரு மட்டும் வெறிச்சோடிப் போயிருந்தது. தேடிப்பிடித்தால் காணக்கூடியளவில் மிகச் சிலர் ஆளுக்கு ஆள் வெகு தொலைவில் முகமூடிகளுடன் வேகமாக நடந்துகொண்டிருந்தனர். பக்கத்திலிருந்த பூங்காவில் அணில்கள் மட்டும் ஓடிவிளையாடிக் கொண்டிருந்தன. குளிரோ, வெய்யிலோ எதுவானாலும் ரிம் ஹோட்டன்ஸ் கோப்பி வாங்குவதற்காகக் காத்திருக்கும் கார்களையும் மனிதர்களையும் அவன் பார்த்து நீண்ட நாட்களாகியிருந்தது.

மேசைமேல் ஏற்றப்பட்டிருந்த கதிரைகளும், கலகலத்திருக்கும் அந்த விடத்தில் இருந்த மயான அமைதியும் அவனுக்குப் பூதாகரமாகத் தெரிந்தன. இந்த அமைதி, இந்த வேலை, கனடாவுக்கு மனைவி சாந்தியின் வரவு - என அவன் வாழ்வுடன் தொடர்பான அனைத்துமே பதிலற்ற கேள்விகளாக மெதுமெதுவாக விசுவரூபமெடுத்துக் கொண்டிருந்தன.

'கெதியிலை புரோமோசனுக்கு அப்பிளை பண்ணோணும். அப்பத்தான் சாந்தி வரேக்கே சிலவுக்குக் கட்டுபடியாகுமெண்டு நினைச்சுக்கொண்டிருக்க, ம்ம், சத்தமில்லாமல் நான் யுத்தம்செய்வன் எண்டு கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிற இந்தக் கொரோனா வந்து நிலைமையை அடியோடு மாத்திப்போட்டுது, சீ...'

அவன் மனசுக்குள் பொங்கிய விரக்தியை, தொற்று வராமல் இருக்கிறதே பெரியவிஷயமென்ற அறிவு சமாதானப்படுத்த முயன்றபோது, மாற்றக்கூடியவற்றை மாற்றக்கூடிய வல்லமையையும் மாற்றமுடியாதவற்றை ஏற்றுக்கொள்ளக்கூடிய மனவலிமையையும் வளர்த்துக்கொள் என எங்கோ வாசித்த ஒரு வாசகம் அவன் நினைவுக்கு வந்து அவன் இதயத்தை ஆதரவுடன் தடவிக்கொடுத்தது.

“சனியன் பிடிச்ச கொரோனா எண்டு திட்டுறதாலை எனக்கு நானே மனவுளைச்சலை உண்டாக்கிறதைத்தவிர வேறு என்னத்தைச் சாதிக்கப்போறன்,” என்ற அவனின் சிந்தனையை வேலையைப் பொறுப்பேற்க வந்திருந்த டொமினிக்கின் குரல் குலைத்தது.

“சரி, நாளைக்குச் சந்திப்பம்.” என பேப்பருக்குள் மூழ்கிப்போயிருந்த மனேஜருக்கு ஆங்கிலத்தில் சொல்லிப்போட்டு வெளியே வந்த சுந்தர் கதவைத் திறக்கவும் பானு உள்ளே நுழையவும் சரியாக இருந்தது.

“ஓ, பானு! உங்களைச் சந்திப்பன் எண்டு நான் எதிர்பார்க்கவேயில்லை. என்ன இண்டைக்கு நீங்க வெள்ளனத் தொடங்கிறியளா?”

வேலைநேரங்கள் மாற்றப்பட்டிருந்ததால் மூன்று கிழமையாக அவனுக்கு அவளைச் சந்திக்கக்கிடைக்கவில்லை. அவனின் முகம் அவனையறியாமலே மலர்ந்தது.

ரிம் ஹோட்டன்ஸில் அவனுக்கு அவள்தான் வேலைபழக்கினாள். அப்படி ஆரம்பித்த அறிமுகம் நல்லதொரு நட்பாக அவர்களிடையே மலர்ந்திருந்தது.

பானு அவனைப் பார்த்துப் புன்னகைத்தாள். அந்தப் புன்னகையை மேவியதொரு கலக்கம் அவளின் கண்களில் அவனுக்குத் தெரிந்தது.

“இல்லை, சுந்தர். மனேஜர் வந்து சந்திக்கச் சொன்னார். கையும் ஓடேல்லை, காலும் ஓடேல்லை. அதாலை வெள்ளனவே வந்திட்டன்,” சொல்லிக் கொண்டே ஜக்கற்றைக் கழற்றினாள், அவள்.

'ஓ!'

அவனின் அந்த 'ஓ' அவனுக்கே குழப்பத்துடன் ஒலித்தது. நாளைக்குச் சந்திப்பம் என அவன் மனேஜருக்குச் சொல்வதே அடுத்த நாள் வேலை இருக்கிறதென அவனுக்கு அவனே உறுதிப்படுத்திக்கொள்ளத்தான். பானு ஒரு மேற்பார்வையாளர் என்பதால் - அதிகம்பேர் வேலைசெய்யத் தேவையில்லாத நேரத்தில் மேற்பார்வையாளர் ஏனென வேலையை விட்டு அவளை நிற்பாட்டப் போறாரோ - அவனின் மனம் பானுவுக்காகக் கலங்கியது.

ஓடிக்கொண்டிருந்த மெசின் ஒன்றுக்குள்



சிக்கிக்கொண்டதால், ஆறு மாதத் துக்கு முன்பாக வலது கையின் இரண்டு விரல்களை அவளின் கணவன் இழந்திருந் தான். காலம் அவனின் உடல் காயத்தை ஒருவாறாகத் தேற்றிவிட்டிருந்தாலும் கூட, அவனின் மனக் காயம் நாள் ஆக ஆக கூடிக் கொண்டிருந்ததை சுந்தர் அறிவான். அது பானுவை மிக அதிகமாகப் பாதிப்பதும் சுந்தருக்குத் தெரிந்ததே.

கடைசியாக அவன் அவளைச் சந்தித்தபோது, பிளாஸ்ரர் போடப்பட்டிருந்த அவளின் நெற்றியின் வலது பகுதியில், தழும்பு ஒன்று முன்தள்ளிக் கொண்டு நிற்பது அவளின் முகத்தில் அசைந்தாடிக்கொண்டிருந்த அந்தச் சுருட்டை முடிக்கிடையிலும் தெளிவாகத் தெரிந்தது.

அன்று அந்தக் காயம் பற்றி விசாரித்த அனைவருக்கும் குளியலறையில் விழுந்து போனேன் என்றே அவள் சொல்லிக் கொண்டிருந்தாள். தேநீர் இடைவேளையின்போது, அவள் அருகில் சென்று, “பானு, ஆ யூ ஒகே, என்ன நடந்தது?” என மெல்லிய குரலில் அவன் கேட்டபோது அவள் கண்களைக் கண்ணீர் நிறைத்தது. தலையை இடமும் வலமுமாக ஆட்டியவள், பிறகு சொல்கிறேன் என்பது போல வாயை அசைத்தாள். பின்னர் வேலை முடிந்துபோகும்போது அவள் அவனைப் போனில் அழைத்தாள்.

“பானு,” என அவன் சொல்லும் முன்பாக ஓங்கி ஒலித்த அவளின் கேவல் அவன் மனதைக் குடைந்தது. “சனிக்கிழமை களைப்பாயிருக்கு எண்டு இவர் சோபாவிலை படுத்திருந்தவர். இந்தச் சின்னன் ரண்டும் ஒண்டை ஒண்டு கலைச்சுக் கொண்டு ஓடித் திரிஞ்சுதுகள். அந்தச் சத்தத்திலை அவற்றை நித்திரை போட்டுது. கோவத்திலை அவர் பெரிசாக் கத்தினார், பத்தாததுக்கு சுமிக்கு அடிச்சும்போட்டார்.... தேத்தண்ணியோடை போன நான் ஏனப்பா அடிச்சனியள், அதுகள் சின்னப் பிள்ளையள் விளையாடமல் என்ன செய்யுங்கள், நீங்க உள்ளுக்குப்போய்ப் படுக்கிறதுதானே எண்டு சொன்னன். அவ்வளவுதான்... என்னடி நீ எனக்குப் படிப்பிக்கிறியோ எண்டு தேத்தண்ணிக் கோப்பையைப் பறிச்சு எனக்கு வீசினார். வலியிலை நான் கத்த பிள்ளையள் அதை மிஞ்சி அலறிச்சுதுகள்...” கண்ணீரினூடு வந்த அவள் குரலில் இயலாமை ஒலித்தது.

“ஓ, ஐ ஆம் வெரி சொறி பானு, வெரி சொறி எனக்கென்ன சொல்லுறது எண்டே தெரியேல்லை” என்று மட்டும் தான் அவனால் சொல்லமுடிந்தது.

அன்றிரவு சாப்பிடவோ, நித்திரை கொள்ளவோ அவனால் முடியவில்லை. படுக்கையில் புரண்டு புரண்டு உருண்டபடியிருந்தான். அவனின் சிறுபிள்ளைப் பராய நினைவுகள் மாறிமாறி அவனின் நினைவுக்கு வந்து அவனைக் கஷ்டப்படுத்திக்கொண்டிருந்தது.

இந்தத் தனிப்படுத்தல் காலத்தில், பிள்ளைகளின் மேலான, பெண்களின் மேலான வன்முறை அதிகரித்திருக்கிறது என்பதை ஊடகங்கள் சொல்லிக்கொள்ளும் பொழுதுகளிலெல்லாம் பானுவின் முகமே அவன் கண் முன் நிழலாடும். மனதில் அச்சமேற்படும். கூடவே, வலியிலேயே வாழ்க்கையை முடித்துக் கொண்ட அவன் அம்மாவின் அழுகைச் சத்தம் அவனுக்குள் பரிதாபமாய் ஒலிக்கும். “என்ன யோசனை சுந்தர், எல்லாம் ஒகேயா?” அவர்களுக்குள் இருந்த அந்த மௌனத்தைப் பானு உடைத்தாள்.

“வாழ்க்கையின் விநோதங்களை நினைச்சுப்பாத்தன் பானு... எங்கடை நாட்டிலை இருந்தது ஆக ரண்டே ரண்டு மொழியள்தான், இருந்தும் மற்ற மொழியிலை இரண்டு சொல்லுக்கூட எங்களுக்குத் தெரியாது. இப்ப இங்கை இன்னொரு மொழியை அரைகுறையாய்ப் பேசி வாழுறம். அங்கேயே ஒருத்தரின்ரை மொழியை ஒருத்தர் படிச்சு, ஒருத்தரை ஒருத்தர் விளங்கிக் கொண்டிருந்தால் இனப்பிரச்சினை இப்பிடி உச்சத்துக்குப் போய் இவ்வளவு அழிவு நிகழாமல் தடுத்திருக்கலாமோ, எங்கடை வேலையளைப் பாத்துக் கொண்டு நாங்களும் அங்கேயே நிம்மதியாக இருந்திருக்கலாமோ எண்டெல்லாம் இப்ப என்ரை மனம் தத்துவ விசாரணை செய்யுது, பானு,” என்றான் சுந்தர்.

“ம்ம், சரி, அதை விடுங்கோ, குடும்பத்துக்குள்ளை ஒருத்தரை ஒருத்தர் விளங்கி, ஆளுக்கு ஆள் மதிப்புக் கொடுத்து நடக்கிறதே சிலருக்குப் பெரும் பிரச்சினையாயிருக்கு! இப்ப பஸ்சிலை வரேக்கை மனுஷ்யபுத்திரனின்ரை ஒரு கவிதை படிச்சன், கேளுங்கோ...”

ஒருமை - பன்மை
'எந்தக் கணத்தில்
என்னை அழைப்பதில்
பன்மையிலிருந்து
ஒருமைக்கு மாறினாய்?
பன்மையிலிருந்து
ஒருமைக்கு மாறும்போது
ஆட்டத்தின் ஒரு விதி
மாற்றப்படுகிறது
சீட்டுக்கட்டில் ஒரு சீட்டு
ரகசியமாக இடம் மாறுகிறது
ஓசையில்லாமல் ஒரு பூனை
அறைக்குள் நுழைகிறது
கிணற்றுத் தண்ணீரின் சுவை
திடீரென மாற்றமடைகிறது
ஒரு அனுமதிச் சீட்டின்
ஓரத்தில் கிழிக்கப்படுகிறது'

“உண்மைதான் பானு, உறவு ஒண்டு நெருக்கமா வரேக்கே எவ்வளவு சந்தோஷப்படுறம். மரியாதையை, உரிமையை விட்டுக் கொடுக்கிறதிலை கூட ஒரு மகிழ்ச்சியை அனுபவிக்கிறம்... ஆனால் பிறகு மற்ற ஆள் அதைத் துஷ்பிரயோகம் செய்யேக்கைதானே...,” அவனால் தொடரமுடியவில்லை.

வீட்டுக்குள் 24 மணி நேரமும் பானு அடைந்து கிடக்க வேண்டியிருந்தால்... அவன் கண்கள் கலங்கின, இதயம் வலித்தது. அவனது உள்மனம் அம்மா என ஓலமிட்டது. அவள் மனேஜரிடம் போய்வரும் வரை அங்கேயே காத்திருந்தவனுக்கு அவள் சொன்ன செய்தி ஆச்சரியம் தருவதாக இருக்கவில்லை.

“பானு, நான் சொல்லிமுடிக்கும் வரைக்கும் குறுக்கிடாமல் கேட்பீங்களா?” கேட்டவன் பானுவின் கண்களைப் பார்த்தபடி அவன் தீர்மானத்தை உறுதியுடன் கூறினான்.

“கொரோனாப் பிரச்சினை இருக்கும் வரைக்கும், இந்த வேலையிலை எனக்குக் கிடைக்கிற காசை அரசாங்கம் தாற காசு ஈடுசெய்யும். இந்தப் பிரச்சினை ஓய்ஞ்சாப் பிறகு திரும்ப இங்கை நான் வரலாம், அல்லது வேறையொரு வேலையைத் தேடலாம். ஆனா... இந்த வேலை உங்களுக்கு எவ்வளவு முக்கியமெண்டது, உங்களுக்கும் தெரியும், எனக்கும் தெரியும். ஒரு சுப்பவைசராக இருந்திட்டு சும்மா பணியாளராக இருக்கிறது, உங்களுக்குப் பரவாயில்லையா, பானு? நீங்கள் சரியெண்டு சொன்னால் மனேஜரோடை நான் கதைக்கிறன் ...”

அவனுக்கு என்ன பதில் சொல்வது எனப் புரியாத பானு கண்ணீர் மல்க அவனைக் கையெடுத்துக் கும்பிட்டாள்.

“ரண்டு மீற்றர் இடைவெளியைப் பேணவேணுமெண்டதாலை உங்கடை இந்தக் கும்பீட்டை மன்னிச்சுவிடுறன்,” எனச் சிரித்தபடி மனேஜரிடம் சென்றான் சுந்தர்.

●

# அமெரிக்க ஆதிக்கம் தொடரும் கரீபியன் தீவு: போர்ட்டோ ரிக்கோ சுதந்திர வாக்கெடுப்பு !

ஐங்கரன் விக்கினேஸ்வரா

போர்ட்டோ ரிக்கோ சுதந்திர வாக்கெடுப்பு பற்றிய தீர்மானம் அமெரிக்க நாடாளுமன்றத்தில் நவம்பர் 2020 நிறைவேறியது. இரண்டு ஆண்டுகள் கழிந்தும் இத்தீர்மானம் அமெரிக்க செனட்டில் இன்னமும் கிடப்பிலேயே போடப்பட்டுள்ளது.

அதிக சுய - அதிகாரத்திற்கான போர்ட்டோ ரிக்கோவின் இயக்கம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் ஊக்கம் பெற்றுள்ளது.

மூன்று சாத்தியமான எதிர்காலங்கள் குறித்த வாக்கெடுப்புக்கான மசோதாவை நிறைவேற்றியுள்ளது. இருப்பினும் இந்த நடவடிக்கை செனட்டால் எடுக்கப்படுவதற்கான வாய்ப்புகள் குறைவு போல தெரிகிறது.

அமெரிக்க நிர்வாக ஆதிக்கம் தொடரும் கரீபியன் தீவான போர்ட்டோ ரிக்கோ சுதந்திர வாக்கெடுப்பு பல காலங்களாக நடாத்தப்பட்டது. ஆயினும் இதுவரையில் "லத்தீன்களின்" உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை விட முக்கியமான புவிசார் அரசியல் நிலைகளின் மீதான கட்டுப்பாடு வாஷிங்டனுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கு இசைவாகவே அமெரிக்கா தனது புவிசார் இராணுவ மூலோபயங்களை வகுத்துக் கொண்டுள்ளது என்பதே உண்மையாகும்.

### அமெரிக்க நில ஆதிக்கம்

அமெரிக்க உச்ச நீதிமன்றம் போர்ட்டோ ரிக்கோ 1869 ஆம் ஆண்டில் அரசியலமைப்பு மாநிலங்கள் ஒருதலைப்பட்சமாக பிரிந்து செல்ல அனுமதிக்கவில்லை என்று தீர்ப்பளித்ததும் நினைவில் கொள்ள வேண்டும்.

அடிமை முறையை ஆதரித்த ஆறு தென் மாநிலங்களின் அமெரிக்க யூனியனிலிருந்து வெளியேறியதன் மூலம் தொடங்கிய உள்நாட்டுப் போருக்குப் பிறகு இந்த முடிவு எடுக்கப்பட்டது.

அரசியலமைப்புச் சட்டம் தடை செய்யாதவற்றின் அடிப்படையில் மாநிலங்கள் விட்டுச் சென்றன. அலாஸ்கா மற்றும் ஹவாய் கடைசியாக 1959 இல் 49வது மற்றும் 50வது மாநிலங்களாக அமெரிக்காவில் இணைந்தன என்பதும் குறிப்பிடத்தக்கது.

### ஸ்பானிஷ் காலனித்துவ வரலாறு

இந்த போர்ட்டோ ரிக்கோவில் 400 ஆண்டுகளாக ஸ்பானிஷ் காலனி இருந்தது. கிறிஸ்டோபர் கொலம்பஸ்




நவம்பர் 19, 1493 இல் தீவில் இறங்கினார். இங்குள்ள பழங்குடி மக்கள் டைனோ இந்தியர்கள், அவர்கள் ஷ பானிஷ்- அமெரிக்க ஆக்கிரமிப்பினால் எல்லா இடங்களிலும் பரவலாக அழிக்கப்பட்டனர்.

படிப்படியாக, போர்ட்டோ ரிக்கோ ஸ்பானிஷ் காலனித்துவ வளர்ச்சியின் அனைத்து நிலைகளிலும் அடிமைப்பட்டு சென்றது. மிகப்பெரிய வர்த்தக துறைமுகம் இருந்தும் வளர்ச்சி வாய்ப்புகள் இல்லாமல் கைவிடப்பட்ட தீவாக மாறியது.

பின்னர் 19 ஆம் நூற்றாண்டின் இறுதியில், போர்ட்டோ ரிக்கோ அமெரிக்காவின் கட்டுப்பாட்டின் கீழ் வந்தது. ஆனால் இது மக்களின் வாழ்க்கையில் பெரிய மாற்றங்களைக் கொண்டுவரவில்லை. மீளவும் அடிமைப்பட்டே வாழ்ந்தனர்.

### இரண்டாந் தர பிரஜைகளாக

மார்ஷல் தீவுகள் மற்றும் மைக்ரோனேஷியாவைப் போலவே, முழு சுதந்திரம் பெற்று அல்லது மாநிலம் முறையான அமெரிக்காவுடன் இணைந்து இறையாண்மை பெற கட்டுப்பாடான வாக்கெடுப்புக் கான விதிமுறைகளை போர்ட்டோ ரிக்கோ விரும்பியது.

கரீபியன் தீவான இங்குள்ள குடியிருப்பாளர்கள் அமெரிக்க குடிமக்கள் ஆவர். ஆனால் அவர்கள் இரண்டாந் தர பிரஜைகளாக காங்கிரஸில் வாக்களிக்கும் பிரதிநிதித்துவம் இல்லை மற்றும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியாது.

சுமார் 3.3 மில்லியன் மக்கள், அதிகமானோர் வறுமை வாழ்வை கொண்ட போர்ட்டோ ரிக்கோ, 1898




இல் அமெரிக்க பிரதேசமாக மாறியது. பல தசாப்தங்களாக மாநில அந்தஸ்து உட்பட அதிக சுயநிர்ணயத்திற்காக அங்குள்ள மக்கள் போராட்டம் செய்தனர்.

1960 களில் இருந்து தலைப்பில் ஆறு வாக்கெடுப்புகள் நடந்தும், அமெரிக்க காங்கிரசால் மட்டுமே மாநில அந்தஸ்து வழங்க முடியும் என அறிவிக்கப்பட்டது.

### ஆறாவது 2020 வாக்கெடுப்பு

நவம்பர் 3, 2020 அன்று பொதுத் தேர்தலுடன் இணைந்து போர்ட்டோ ரிக்கோவின் நிலை குறித்த வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது.

இது போர்ட்டோ ரிக்கோவின் நிலை குறித்து நடத்தப்பட்ட ஆறாவது வாக்கெடுப்பாகும். இதற்கு முன்பு 2017 ஆம் ஆண்டு நடந்த வாக்கெடுப்பு நடந்தது.

ஆயினும் இதுவே ஒருஅமெரிக்க மாநிலமாக மாறுவதற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ வாக்களிக்கும் விருப்பத்தை வெளிக்காட்டினர்.

அதேவேளை வாஸ்குவேஸ் உறுப்பினராக உள்ள புதிய முற்போக்குக் கட்சி மாநில அந்தஸ்தை ஆதரிக்கிறது. அதே நேரத்தில் எதிர்க்கட்சியான மக்கள் ஜன நாயகக் கட்சி மற்றும் போர்ட்டோ ரிக்கன் சுதந்திரக் கட்சி அதை எதிர்க்கின்றன.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு, போர்ட்டோ ரிக்கோ வாக்கெடுப்பை நடத்தியது. 1967, 1993 மற்றும் 1998 இல் இந்த பிரச்சினையில் வாக்கெடுப்பு மூன்று முறை தோல்வியடைந்தாலும், 65 சதவீதம் பேர் அமெரிக்கா வில் சேர ஒப்புக்கொண்டனர். டிரம்ப் நிர்வாகத்தில் வாக்கெடுப்பு அங்கீகரிக்கப்படவில்லை

மாநில அந்தஸ்து வழங்கும் அதிகாரம் அமெரிக்க காங்கிரஸிடம் இருப்பதால், வாக்கெடுப்பு கட்டுப்பாடானது. ஆயினும் டிரம்ப் நிர்வாகத்தின் கீழ் அமெரிக்க நீதித்துறையால் வாக்கெடுப்பு அங்கீகரிக்கப்பட வில்லை.

குடியரசுக் கட்சி மற்றும் ஜனநாயகக் கட்சி ஆகிய இரு கட்சிகளின் கட்சித் தளங்கள் பல தசாப்தங்களாக போர்ட்டோ ரிக்கோவின் சுயநிர்ணய உரிமை மற்றும் ஒரு மாநிலமாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கான உரிமையை உறுதிப்படுத்தியுள்ளன.

### போர்ட்டோ ரிக்கோ சுயாட்சி இயக்கம்

1898 இல் போர்ட்டோ ரிக்கோ ஸ்பெயினால் அமெரிக்காவிடம் ஒப்படைக்கப்பட்டதிலிருந்து சுயாட்சிக்கான அழைப்புகள் எழுந்தன. 1917 ஆம் ஆண்டில், சட்டப்பூர்வ அமெரிக்க குடியுரிமை பெரும்பாலான போர்ட்டோ ரிக்கன்களுக்கு நீட்டிக்கப்பட்டது, இருப்பினும் அந்த சட்டம் எதிர்கால அமெரிக்க காங்கிரஸால் ரத்து செய்யப்படலாம் எனம் அச்சமும் இருந்தது.

பிறப்புரிமையின் மூலம் குடியுரிமை பெறுவதை 1940 ஆம் ஆண்டின் தேசியச் சட்டத்தால் நிறுவப்பட்டது. 1952 ஆம் ஆண்டில், போர்ட்டோ ரிக்கோ ஒரு புதிய அரசியலமைப்பை ஏற்றுக்கொண்டது.அது "காமன்வெல்த் ஆஃப் புவேர்ட்டோ ரிக்கோ" என்று




பெயரிடப்பட்டது.

### அமெரிக்கா தேர்தலில் வாக்களிக்க முடியாது

இன்று, போர்ட்டோ ரிக்கன்கள் அமெரிக்க கூட்டாட்சி சட்டங்களுக்கு உட்பட்டவர்களாக இருக்கும் போது, இணைக்கப்படாத பிரதேசத்தில் உள்ளவர்கள் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க முடியாது. மேலும் இணைக்கப்படாத பிரதேசத்தில் காங்கிரஸில் பிரதிநிதி வாக்கு உரிமையும் இல்லை.

இங்கே இயற்கை பேரழிவுகள் மற்றும் பிரதேசத்தின் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தை அதிகப்படுத்துவதாக கருதப்படுகிறது. ஆயினும் பொருளாதர ரீதியில் வளர்ச்சி குன்றியதாகவே இன்னமும் உள்ளது.

### விடுதலைக்காக ஆயுதப் போராட்டம்

ஜூலை 1898 இல், அமெரிக்க ஆயுதப்படைகள் அந்த நேரத்தில் ஸ்பெயினுக்கு சொந்தமான போர்ட்டோ ரிக்கோ தீவுகளைக் கைப்பற்றின. அதே ஆண்டு டிசம்பரில், வாஷிங்டனின் பிரதிநிதிகள், பாரிஸில் நடந்த பேச்சுவார்த்தைகளில் ஸ்பெயினியர்களை கட்டுப்படுத்தினர்.

மேலும் 1900 இல் தீவுகளில் ஒரு காங்கிரஸை உருவாக்கியதுடன், 1917 இல், போர்ட்டோ ரிக்கோவில் வசிப்பவர்களுக்கு குறைந்த அரசியல் உரிமைகள் உள்ள அமெரிக்க குடியுரிமை வழங்கப்பட்டது. 1920 மற்றும் 1930 களில் தீவுக்கூட்டத்தில் எழுந்த சுதந்திர இயக்கம் அமெரிக்க அதிகாரிகளால் கொடூரமாக ஒடுக்கப்பட்டது. அதன் தலைவர்கள் பலரும் சிறைக்கு அனுப்பப்பட்டனர்.




இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, வாஷிங்டன் அரசு போர்ட்டோ ரிக்கன்களின் அரசியல் உரிமைகளை சிறிது விரிவுபடுத்தியது.அவர்கள் தங்கள் சொந்த ஆளுநரைத் தேர்ந்தெடுக்க அனுமதித்தது. ஆனால் இது அடிப்படையில் எதையும் மாற்றவில்லை. தீவுகளின் வாழ்க்கைத் தரம் பெருநகர வளர்ச்சியில் இருப்பதை விட மிகவும் குறைவாக இருந்தது.

எனவே போர்ட்டோ ரிக்கோவின் மக்கள் பிரதான நிலப்பகுதிக்கு பெருமளவில் செல்லத் தொடங்கினர். 1945 முதல் 1965 வரை அமெரிக்கப் பிராந்தியத்தில் உள்ள தீவுவாசிகளின் எண்ணிக்கை கிட்டத்தட்ட பத்து மடங்கு அதிகரித்துள்ளது.

போர்ட்டோ ரிக்கோவில் பொருளாதார சிக்கல்களின் பின்னணியில், சுதந்திரத்திற்கான போராளிகள் மீண்டும் தலையை உயர்த்தினர்.

அங்கு வாழும் மக்களுக்கு எப்படியாவது உறுதியளிக்கும் வகையில், 1952 இல் வாஷிங்டன் அரசு இத்தீவுக்கூட்டத்திற்கு "தொடர்புடைய பிரதேசம்" என்ற அந்தஸ்தை வழங்கியது. ஆனால் இது அதன் மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவில்லை.

1960 களில் இருந்து, இடதுசாரிப் படைகள் தங்கள் நாட்டின் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கின.ஆனால் அமெரிக்க பாதுகாப்புப் படைகளின் பாரிய எதிர்ப்பால் அதன் தலைமையை அழித்தனர்.

ஆனால் உலகில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களின் மிகப்பெரிய தளம் ஒன்று இங்கே உள்ளது.

போர்ட்டோ ரிக்கோவில் ஒரு இராணுவ ரேடார் நிலையம் நிறுவப்பட்டுள்ளது. மற்றும் கடற்படை பயிற்சிகள் நடத்தப்படுவது மட்டுமல்லாமல், அமெரிக்க அணு ஆயுதங்களும் சேமித்து வைக்கப்பட்டுள்ளன.

போர்ட்டோ ரிக்கோவில் "லத்தீன்களின்" உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை விட முக்கியமான புவிசார் அரசியல் நிலைகளின் மீதான கட்டுப்பாடு வாஷிங்டனுக்கு மிகவும் முக்கியமானதாகும். அதற்கு இசைவாகவே அமெரிக்கா தனது புவிசார் இராணுவ மூலோபயங்களை வகுத்துக் கொள்ளும் என்பது உண்மை.

# இலங்கை தென்னங்கள்ளு 35 நாடுகளுக்கு ஏற்றுமதி!

கொழும்பு, ஜன. 15

இலங்கையில் உற்பத்தி செய்யப்படும் மதுபான வகைகளை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்ததன் மூலம் கடந்த வருடத்தில் நாட்டிற்கு 21 மில்லியன் டொலர் வருமானமாக கிடைத்துள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

எமது நாட்டு உற்பத்தியான மதுபானம் உலகின் 35 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக தெரிவித்துள்ள அவர், அதன் மூலம் அரசாங்கத்திற்கு வருடாந்தம் பெரும் வருமானம் கிடைப்பதாகவும் கூறினார்.

அதற்கிணங்க கடந்த 2021 ஆம் ஆண்டு மதுபான ஏற்றுமதி மூலம் 20 மில்லியன் டொலர்களையும் கடந்த வருடத்தில் 21 மில்லியன் டொலர்களையும் நாடு வருமானமாக பெற்றுக் கொண்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையிலிருந்து மேற்படி நாடுகளுக்கு சாராயம், தென்னஞ்சாராயம், பனங்கள்ளு போன்ற மதுபான வகைகள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருவதாக குறிப்பிட்டுள்ள இராஜாங்க அமைச்சர், தென்னங்கள்ளு மற்றும் கித்துள் கள்ளு ஆகியவற்றுக்கு உலகின் பல்வேறு நாடுகளிலும் சிறந்த கேள்வி நிலவுவதாகவும் அவர் கூறினார். (அ)

# பொதுநலவாய பாராளுமன்ற சங்கத்தின் செயலாளர் நாயகம் ரணிலுடன் சந்திப்பு

கொழும்பு, ஜன. 15

உத்தியோகப்பூர்வ விஜயம் மேற்கொண்டு இலங்கைக்கு வருகை தந்துள்ள பொதுநலவாய பாராளுமன்றச் சங்கத்தின் செயலாளர் நாயகம் ஸ்டீபன் டுவிக் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்துப் பேசியுள்ளார்.

இந்த சந்திப்பு நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவும் கலந்து கொண்டார். (அ)

# பருத்தித்துறை நகர சபையின் வரவு-செலவுத் திட்டம் வெற்றி

வடமராட்சி,ஜன. 14

பருத்தித்துறை நகரசபையின் 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் நேற்று முன் தினம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த வருடம் முதல் தடவையாக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது அது ஒரு மேலதிக வாக்கினால் தோற்கடிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த மாத இறுதியில் இரண்டாவது தடவை வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படவிருந்த நிலையில் அதன் தவிசாளர் பதவியிலிருந்து திடீரென விலகினார்.

அதனை அடுத்து கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதுடன் மீண்டும், அண்மையில் தவிசாளர் தெரிவு இடம்பெற்று புதிய தவிசாளராக வே. நவரட்ணாராஜா தெரிவு, செய்யப்பட்டார்.

நேற்றுக் கூடிய சபையில் வரவு-செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபோது சபை ஏகமனதாக நிறைவேற்றியது.

15 பேர் கொண்ட பருத்தித்துறை நகரசபையில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் உறுப்பினர் ஒருவரும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவரும், சமூகமளிக்காத நிலையில் 13 பேரில் அமர்வில் கலந்து கொண்ட 11 பேரும் ஏக மனதாக வரவு-செலவுத் திட்டத்தை நிறைவேற்றினர். (அ-02)

# சுற்றுலாப் பயணிகளுக்கும் தடுப்பூசி அட்டை கட்டாயம்

கொழும்பு, ஜன. 15

இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு புதிய கொரோனா நடைமுறைகள் தொடர்பில் சுற்றுலா அமைச்சு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதன்படி இலங்கைக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் கட்டாயம் கொரோனா தடுப்பூசி அட்டையை வைத்திருக்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் கொரோனா தடுப்பூசி போடாத சுற்றுலாப் பயணிகள் வருகைக்கு 72 மணி நேரத்திற்கு முன்னர் பெறப்பட்ட பி.சி.ஆர் அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் சுற்றுலாத் துறை அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (அ)

# இன்று மின்வெட்டு இல்லை

கொழும்பு, ஜன. 15

இன்று மின்வெட்டு அமுல்படுத்தப்படாது என பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தைப்பொங்கல் தினத்தை முன்னிட்டு இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் தெரிவித்தார். (அ)

கல்வி tv CHANNEL-1

**15.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | தமிழ் |
| 06.45 | தரம்-08 | கணிதம் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English வினாத்தாள் |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் வினாத்தாள் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு வணிகப்பிரிவு |
| 08.00 | தரம்- 05 | புலமைப்பரிசில் வினாத்தாள் மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | அரசியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | பொருளியல் |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | இரசாயனவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் வினாத்தாள் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | தமிழ் வினாத்தாள் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | கணிதம் வினாத்தாள் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு வினாத்தாள் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் வினாத்தாள் |
| 04.30 | தரம்-10 | English |

கல்வி tv CHANNEL - 2

**15.01.2023**
**ஞாயிற்றுக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள் | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | கதை |
| 07.30 | முன்பள்ளி | பாட்டு |
| 08.15 | தரம்-01 | English |
| 09.00 | தரம்-02 | அழகியல் |
| 09.45 | தரம்-03 | English |
| 10.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 01.15 | தரம்-05 | English |
| 02.00 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | கதை |
| 04.15 | முன்பள்ளி | பாட்டு |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | அழகியல் |
| 06.00 | தரம்-03 | English |
| 06.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 09.00 | தரம்-05 | English |
| 09.45 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | English |
| 12.30 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | சுற்றாடற்கல்வி |
| 02.45 | தரம்-05 | English |
| 03.30 | தரம்-05 | சுற்றாடற்கல்வி |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# தைப்பொங்கல் திருநாளின் வரவில் மாற்றம் தரும் மகிழ்வாழ்வு மலரட்டும்

## அமைச்சர் டக்ளஸ் வாழ்த்து

யாழ்ப்பாணம்,ஜன.15

பிறந்திருக்கும் தைப்பொங்கல் திருநாளின் வரவில் சகல மக்களின் வாழ்விலும் மாற்றம் தரும் நீடித்த மகிழ் வாழ்வு மலரட்டும் என ஈழ மக்கள் ஜனநாயாக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

அவர் தனது வாழ்த்து செய்தியில்-

தைப்பொங்கல் திருநாள் நாம் நேசிக்கும் தொன்று தொட்ட தமிழர் பண்பாட்டு பெருநாள்.

உழுதுண்டு வாழும் உழவர் மக்கள் காலந்தோறும் சூரியனுக்கு நன்றி செலுத்தும் நன்னாள்.

தமது வாழ்வுயர வழிவகுத்த சூரியனுக்கு நன்றி செலுத்துவது போல், தமது வாழ்வெங்கும் மலர்ந்தும் மறையாத மாசற்ற ஒளிச்சுடராக நின்று இருள் சூழ்ந்த இடர் பூமியில் இருந்து நடைமுறை சாத்தியமான பாதையில் தம்மை விடிவை நோக்கி அழைத்து செல்பவர்களுக்கும் தமிழ் மக்கள் முழுமையான நன்றியை செலுத்த முன்வரவேண்டும்.

அரசியல் அதிகாரங்களை மக்கள் நலன் சார்ந்து சரிவரப் பயன்படுத்துவதற்கும் முன்னோக்கி செல்வதற்கும் வல்லமை உள்ளவர்களுக்கு வலிமை சேர்ப்பதே நாமார்க்கும் அடிமையல்லோம் யமனை அஞ்சோம், நரகத்தில் இடர்படோம் என நிமிர்ந்தெழும் காலத்திற்கு வழி சமைக்கும்.

தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும், தர்மம் மறுபடியும் வெல் லும் என்ற எமது மக்களின் நம்பிக்கைகள் நிறைவேறி வருகின்றன.

நீண்ட காலமாக நாம் வலியுறுத்தி வருவதையே வரலாறு இன்று மீண்டும் ஏற்றுக்கொண்டு வருகின்றது.

வறுமையற்ற வாழ்வு மலர வேண்டும்.உழைக்கும் மக்களின் வாழ்வுயரவேண்டும்.

வீடற்ற மக்களுக்கு வீடுகளும், நிலமற்ற மக்களுக்கு காணி நிலங்களும் வேண்டும்- என்று கூறியுள்ளார்.

(அ)

# இருபாலையில் வாள் காட்டி மோட்டார் சைக்கிள் பறிப்பு!

யாழ்ப்பாணம், ஜன. 15

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இருபாலை பகுதியில் நேற்று முன் தினம் இரவு 9 மணியளவில் வீதியில் பயணித்த நபர் ஒருவரை வழிமறித்து வாளை கழுத்தில் வைத்து மிரட்டி மோட்டார் சைக்கிளை பறித்துச் சென்ற சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இருபாலை டச்சு வீதியில் இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்தவர்கள் வீதியில் மோட்டார் சைக்கிள் வந்தவரை வழிமறித்து வாளைக் கழுத்தில் வைத்து மிரட்டிமோட்டார் சைக்கிளைப் பறித்து சென்றுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

(அ)

# இலங்கைக்கு ஐ.எம்.எவ்...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோரி அந்நாட்டு அரசாங்கத்தை அமெரிக்காவில் நீதிமன்றத்திற்கு அழைத்துச் சென்றன.

ஜனவரி 8 அன்று சர்வதேச பொருளாதார வல்லுனர்களின் ஒரு பெரிய குழு இலங்கையின் பத்திரங்களை "ரத்துசெய்ய" அழைப்பு விடுத்த. மேலும், "தற்போதைய சூழலில் இருந்து வெளியே வர, இலங்கைக்கு கடன் கொடுத்தவர்கள் போதுமான கடன் ரத்து செய்யப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்" என்றும் தெரிவித்திருந்தனர்.

இலங்கையின் பத்திரங்களை பெற்றுள்ள தனியார் குறித்து கேள்விக்கு பதிலளித்த வீரசிங்க, "நாங்கள் தனியார் கடன் வழங்குநர்களுடன் நல்ல நம்பிக்கை பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுகிறோம். அவர்கள் நம்பிக்கையுடன் இருப்பதையும் எங்களுடன் ஈடுபாட்டுடன் இருக்க தயாராக இருப்பதையும் நாங்கள் பார்க்கிறோம்" என்றார்.

இருதரப்பு கடன் வழங்குநர்களின் உடன்படிக்கைக்கு உடன்பாடு ஏற்பட்டவுடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியை "நான்கு முதல் ஆறு வாரங்களுக்குள்" இலங்கைக்கு விநியோகிக்க முடியும் என்று தான் எதிர்பார்ப்பதாக ஆளுநர் கூறினார். •

# சாதனையாளர் கௌரவிப்பு





யாழ்ப்பாணம், ஜன. 15

அகில இலங்கை ரீதியில் நடத்தப்பட்ட அழகியல் கதைப் போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வு நேற்று முன்தினம் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் இடம் பெற்றது.

தெல்லிப்பழைக் கோட்டப் பிரிவு பாடசாலைகளில் முதலிடங்களை தமதாக்கிய மாணவர்களும் ஆசிரியர்கள், அதிபர் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர்.

இதனை ஏ.வி.ஆர் தொண்டு நிதியம் ஏற்பாடு செய்திருந்தது

இந்நிகழ்வில் வலிவடக்குப் பிரதேச செயலளர் எஸ்.சிவசிறி, தெல்லிப்ளைப்பிரிவு பொலிஸ் பொறுப்பதிகாரி, வலிகாமம் வலயத்தின் அழகியல் பாட உதவிக்கல்விப்பணிப்பாளர் மற்றும் ஆசிரிய ஆலோசர்கள், அயற்பாடசாலை அதிபர்கள் கலந்து சிறப்பித்ததோடு வெற்றியீட்டிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்தினர்.

காவடி நடனம் (குழு)- யூனியன்கல்லூரி

நாட்டிய நாடகம்(குழு)-யா. யூனியன்கல்லூரி

குழு இசை - அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்

குழுப்பாடல் - காங்கேசன் துறை நடேஸ்வராக் கல்லூரி

தனி நடனம்(கிராமியம்)- மகாஜனாக் கல்லூரி. (அ)

# இலங்கை அரசியலில்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பின் அங்கத்து வக் கட்சிகள் தேர்தலில் தனித்தனியாக போட்டியிட்டுவிட்டு பிறகு உள்ளூராட்சி சபைகளின் நிருவாகத்தை சேர்ந்து அமைக்கலாம் என்பதே தனிவழி போவதற்கு எடுத்த முடிவுக்கு தமிழரசு கட்சி கற்பிக்கின்ற நியாயமாகும். ஆனால், ரெலோவும் சித்தார்த்தனின் புளொட்டும் தற்போது முன்னெடுக் கின்ற நடவடிக்கைளை பார்க்கும் போது மீண்டும் ஒன்றிணைந்து அவர்கள் செயற்படுவதற்கான வாய்ப்புக் கள் தோன்றும் என்று நம்புவதற்கில்லை.

உள்ளூராட்சி தேர்தல்களுக்கு நியமனப்பத்திரங் களை ஏற்றுக்கொள்ளும் நடவடிக்கைகளை தேர்தல் ஆணைக்குழு முன்னெடுத்துவருகின்ற போதிலும், தேர்தல்கள் ஒத்திவைக்கப் படக்கூடிய சாத்தியங்கள் குறித்த சந்தேகங்கள் தொடரவே செய்கின்றன. தேர்தல் நடைபெற்றால் மாத்திரமே அரசியல் கட்சிகளுக்கு மக்கள் மத்தியில் இன்று இருக்கக் கூடிய செல்வாக்கின் இலட்சணம் வெளிச்சத்துக்கு வரும்.

அதேவேளை, தமிழர் அரசியல் பரப்பில் தற்போது இடம்பெறுகின்ற புதிய அணிசேருகைகள் எதிர்காலத் தேர்தல்களில் தமிழ் மக்களின் பிரதிநிதித்துவத்தை மேலும் சிதறடிக்கக்கூடிய ஆபத்து குறித்த அச்சம் தமிழர் நலன்களில் அக்கறைகொண்ட அவதானிகளினால் வெளிப் படுத்தப்படுகிறது.

இறுதியாக தென்னிலங்கை அரசியலில் இடம் பெறுகின்ற புதிய அணிசேருகைகளில் ஒரு விசித்திரமான அம்சத்தை அவதானிக்க முடிகிறது.

அதாவது, கடந்த பொதுத் தேர்தலில் மக்களால் முற்றாக நிராகரிக்கப்பட்ட கட்சியின் தலைவர் மக்கள் கிளர்ச்சியினால் அதிகாரத்தில் இருந்து விரட்டப்பட்ட கட்சியின் ஆதரவுடன் ஜனாதிபதியாக ஆட்சிசெய்கிறார். இரு கட்சிகளும் சேர்ந்து இப்போது தேர்தலில் போட்டியிடவிருக் கின்றன. மக்களின் வெறுப்புக் குள்ளான இவ் விரு தரப்பினரும் "ஒன்றாக எழுவார்களா" அல்லது ஒன்றாக மூழ்குவார்களா?


# மரண அறிவித்தல்

## திருமதி சறோஜினிதேவி இராஜகோபால்



யாழ். அளவெட்டி, பள்ளியவத்தையைப் பிறப்பிடமாகவும், பிரித்தானியா லண்டன் Eastham ஐ வதிவிடமாகவும் கொண்ட சறோஜினிதேவி இராஜகோபால் கடந்த 08-01-2023 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம் ( ஆசிரியர் ) - கைலாயம் ( ஆசிரியை ) தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் (நொத்தாரிஸ்) - தெய்வானைப்பிள்ளை, கனகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், வை.இராஜகோபால் (ஓய்வு பெற்ற சுகாதார அரசினர் திணைக்கள அதிகாரி, கணக்காளர் ZUBAIR FURNISHING LLC Company, Muscat,Oman) அவர்களின் பாசமிகு மனைவியும், காலஞ்சென்ற தெ.நடராஜா ( ஓய்வுபெற்ற தலைமை ஆசிரியர், சதானந்தா வித்தியாலயம் அளவெட்டி ) அவர்களின் பெறாமகளும், காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, வனஜலோயினி, சுபத்திராதேவி ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இராஜினி, இராஜிபன் (உரிமையாளர் Group Blue Van Paris), சுபாஜினி, நிலாஜினி ஆகியோரின் அன்புத் தாயாரும்,சுரேந்திரன், சுலோஜினி, காலஞ்சென்ற நாகேஸ்வரன் (Megaa Super Store Founder), நித்தியகுமார் ஆகியோரின் பாசமிகு மாமியாரும்,கீர்த்தனா, ஆர்த்திகா, எமிலி சோபிதா, எரிக்ருக்ஷன், டிலக்ஷா, டிலக்ஷன், நித்திலன், லஷானா ஆகியோரின் அன்புப் பேத்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதி கிரியைகள் எதிர்வரும் 19.01.2023 காலை 07.00 - 10.00 மணியளவில் victoria house, 10 woolwich way, beckton, London E 65PA United kingdom என்ற முகவரியில் நடைபெற்று பின்னர் நண்பகல் 11.00 மணியளவில் Manor park cemetery & Crematorium, Sebert Road, London E7 0NP ,United kingdom என்ற முகவரியில் தகனம் செய்யப்படும்

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு :
**நிலா - மகள் : +447949646914**
**இராஜினி - மகள் : +447405011521**
**இராஜிபன் - மகன் : +33609713576**
**சுபாஜினி - மகள் : +447918195888**

தகவல் :
**குடும்பத்தினர்**

## சர்வதேசத்தின்...

மத்திய கல்லூரிக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் நேற்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இளைஞர்கள் அரசியல்வாதிகளின் காலடியில் செல்லும் கலாசாரமும் அடிமைத்தனமும் ஒழிக்கப்பட வேண்டும். இளைஞர்கள் அரசியல்வாதிகளின் அடிமைகளாக மாறக் கூடாது.

நாட்டில் இளைஞர்கள் முன்னேறுவதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்குவதும் வாய்ப்புகள் நிறைந்த தேசத்தை உருவாக்குவதுமே அரசியல்வாதிகள் செய்ய வேண்டிய பணியாக அமைய வேண்டும்.

74 வருடங்களாக நாட்டுக்கு வேலை செய்வதற்கு அரசு ஒன்றே தேவை என்ற கருத்தோட்ட பழக்கம் இருந்தது. கடந்த காலங்களில் இருந்த எதிர்க்கட்சிகள் மக்களுக்குச் சேவை செய்யாமல் ஆட்சி அதிகாரத்தைப் பெற்றுக்கொள்ள முயல்வதையே செய்து வந்தன. இந்தப் போக்கை மாற்றி புதிய பிரவேசத்தை நான் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியினர் நிலைப்படுத்தியுள்ளனர்.

இதுவரை,70 பஸ்கள் பாடசாலைக் களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதற்கு 339.2 மில்லியன் ரூபா செலவாகியுள்ளது. மூச்சுத் திட்டத்தின் மூலம் 56 மருத்துவமனைகளுக்கு 1,719 இலட்சம் ரூபா மதிப்பிலான உபகரணங்கள் வழங்கப்பட்டன.

அதிகாரம் இல்லாத போதும் கூட மக்களுக்காக இவ்வளவு பெரிய தொகையை தற்போதைய எதிர்க்கட்சியே செலவிட்டது.

ஜனாதிபதி பதவியோ,பிரதமர் பதவியோ அல்லது அமைச்சுப் பதவியோ கிடைக்காமலே இவை அனைத்தும் மேற்கொள்ளப்பட்டன.

இத்தனை பணிகளையும் செய்யும் போதும் பல்வேறு நபர்கள் பலவிதமாக விமர்சித்தாலும் அந்த விமர்சனங்களால் நாடு அபிவிருத்தியடையாது.

தற்போதைய சூழ்நிலையில் இருந்து நாட்டை மீட்பதற்கு பணத்தை அச்சடித்தல் மட்டும் போதாது. சர்வதேச சமூகத்தின் நம்பிக்கையை பெறக்கூடிய தலைமைத்துவம் தேவை. எதிர்மறை மற்றும் பிற்போக்குத்தன எண்ணப் போக்குகளிலிருந்து விடுபட்டு நேர்த்தியான சிந்தனை மூலம் நாட்டை மீட்டெடுக்க புதிய வேலைத்திட்டம் தேவை-என்றார். (அ)

## வாக்கு கேட்டு...

பியுள்ளனர்.

32 வருடங்களுக்கு மேலாக இராணுவத்தினர் உள்ளிட்ட படைப் பிரிவினர் உயர் பாதுகாப்பு வலயம் என்ற போர்வையில் அடாத்தாக பிடித்து வைத்துள்ள தமது காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டுமென வலியுறுத்தி பலாலி மருதடி அம்மன் ஆலயத்தில் (பலாலி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை முன்பு ) வலி. வடக்கு மக்கள் நேற்று திடீரென போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள், தமிழ் அரசியல்வாதிகளை கடுமையாக விமர்சித்தனர்.

அத்தோடு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொங்கல் பரிசாக தமது காணிகளை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என்றும் உருக்கமாக கோரிக்கை விடுத்தனர்.

சொந்தக் காணி கண் முன்னே இருந்தும் அகதிகளாக ஆட்டுக்கொட்டிலில் வாழ்ந்து வருவதாகவும், அடிமைகளாக வாழ வேண்டிய அவசியம் தமக்கு இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டனர். (அ)

## தீர்வுக்காக...

பொங்கல் விழா ஒரு நன்றியின் விழா. நம்மை என்றும் நன்றி கூறிக்கொண்டே இருக்க அழைப்பு விடுக்கும் ஒரு விழா. தமிழ் மக்கள் கொண்டாடும் இந்த நன்றியின் பெருவிழாவை உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் மக்கள் 2023ஆம் ஆண்டில் கொண்டாடும் வேளை இறையாசீர் மிக்க வாழ்த்துக்களை தெரிவிப்பதில் மகிழ்வடைகிறோம்..

இலங்கை நாடு 1948ஆம் ஆண்டு சுதந்திரம் பெற்று இவ்வாண்டு 75 ஆண்டுகள் நிறைவாகின்றன. பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்ற நாடுகளில் முழு வளர்ச்சி அடையாத நாடாக இலங்கை நாடு இருக்கிறது எனக்கணிப்பிடப்பட்டுள்ளது.

மூன்று தசாப்த காலப்போர் நிகழ்ந்து ஏறக்குறைய 13 ஆண்டுகளாயும் இன்னும் நீதியோடு கூடிய நிரந்தர தீர்வு ஏற்படவில்லை என்பது வேதனையானது. அண்மைக் காலத்தில் திரும்பவும் இனப் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கும் சம்பந்தப்பட்ட தமிழ்த் தலைமைகளுக்கும் இடையில் ஆரம்பித்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. இப்போது ஆரம்பிக்கப்பட்ட இந்த பேச்சுவார்த்தையில் தமிழ்த்தரப்புக்கள் மிக கவனமாகவும் அவதானமாகவும் இருக்கும் வகையிலும் சிங்களத் தலைமைகள் ஓரளவு நேர்மையாக இருக்கும் எனப் பரவலாக எண்ணப்படுகின்ற வகையிலும் நல்லது நடக்கும் என நம்புவோம்.

இந்த பேச்சுக்கள் வழி இலங்கை நாட்டில் நிரந்தர தீர்வையும் ஏற்படுத்த தமிழ் கட்சிகள் அனைத்தும் தமது கட்சி முரண்பாடுகளையும் வேற்றுமைகளையும் மறந்து செயற்பட வேண்டுமெனத் தமிழ் மக்கள் பெயரால் அன்புடன் வேண்டுகிறோம்-என்றுள்ளது. (அ)

## கொழும்பு...

பிரேமதாஸ தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே இம்முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய பாராளுமன்ற உறுப்பினர் பதவியை முஜிபூர் ரஹ்மான் இராஜினாமா செய்யவுள்ளார்.

இலங்கையில் உள்ள 341 உள்ளாட்சி சபைகளில் கொழும்பு மாநகரசபையென்பது முக்கியத்துவமிக்க சபையாக விளங்குகின்றது. மேயர் பதவியை வகிப்பவர் - அமைச்சரவை அந்தஸ்த்துள்ள அமைச்சர் போலவே சலுகைகள் - சிறப்புரிமைகளுக்கு உரித்துடையவர்.

அதேபோல கொழும்பு மாநகரசையானது ஐக்கிய தேசியக் கட்சியின் “மினி” அரசியல் கோட்டையாகும்.

2018 இல் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் தெற்கில் வரலாற்று வெற்றியை பதிவு செய்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவால் (மொட்டு கட்சி) கொழும்பு மாநகரசபையைக் கைப்பற்ற முடியாமல்போனது.

கொழும்பு மாநகரசபைக்கான தேர்தலில் 131,353 வாக்குகளைப் பெற்று 60 ஆசனங்களை ஐக்கிய தேசியக்கட்சி கைப்பற்றியது. மேயராக ஐ.தே.க. உறுப்பினர் ரோஸி சேனாநாயக்க தெரிவு செய்யப்பட்டார்.

இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் இணைந்து யானை சின்னத்தில் கொழும்பு மாநகர சபைக்கு ஐக்கிய தேசியக்கட்சி போட்டியிடவுள்ளது. (அ)

## அரச...

மாக நோயாளிகளின் மரணம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும், பல வகையான புற்றுநோய் மருந்துகள் மற்றும் அத்தியாவசிய மருந்துகள் வைத்தியசாலைகளில் கிடைப்பதில்லை எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும், அநுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மருந்துகளை பெற்றுக் கொள்வதற்காக வந்த நோயாளர்கள் மருந்துகள் கிடைக்காததால் கடும் சிரமத்திற்கு உள்ளாகியுள்ளதுடன், மருந்துப் பற்றாக்குறை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து அநுராதபுரம் போதனா வைத்தியசாலை வைத்தியர்கள் வைத்தியசாலைக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (அ)

# யாழ். மாநகரசபை தேர்தலில் களமிறங்கும் வர்த்தகர் தலைமையிலான சுயேச்சை குழு!

யாழ்ப்பாணம், ஜன. 15

யாழ் மாநகரசபையில் போட்டியிட சுயேச்சைக்குழுவொன்றும் நேற்று கட்டுப்பணம் செலுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் உள்ள ரி.சி.ரி வர்த்தக நிலைய உரிமையாளர் தியாகேந்திரன் வாமதேவன் தலைமையில் இந்த சுயேச்சைக்குழு போட்டியிடவுள்ளது. (அ)

# சீன உயர்மட்டக் குழு வந்தது

கொழும்பு, ஜன. 15

சீன கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச திணைக்களத்தின் பிரதி அமைச்சர் சென்-சூ உள்ளிட்ட உயர்மட்ட பிரதிநிதிகள் குழுவொன்று நேற்று காலை நாட்டை வந்தடைந்தது.

குறித்த தூதுக்குழு, தாய்லாந்தின் பாங்கொக்கில் இருந்து இலங்கை விமான நிறுவனத்துக்கு சொந்தமான யு.எல் 403 என்ற விமானத்தின் ஊடாக நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது.

6 பேர் கொண்ட குறித்த தூதுக்குழு, எதிர்வரும் 18ஆம் திகதி வரை இலங்கையில் தங்கியிருந்து, சீன - இலங்கை இருதரப்பு உறவுகளை மேம்படுத்துவது தொடர்பாக அரசாங்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை சந்தித்து கலந்துரையாடவுள்ளனது. (அ)

# முட்டை உற்பத்தியாளர்களை விட இடை தரகர்களுக்கு அதிக இலாபம்!



கொழும்பு, ஜன. 15

முட்டை உற்பத்தியாளர்களை விடவும், இடைத் தரகர்கள் தற்போது அதிக இலாபம் ஈட்டுவதாக அகில இலங்கை விலங்கு அபிவிருத்தி ஆலோசகர்கள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டீ.ஒ. நிஷாந்த குமார தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

முட்டையின் விலை பற்றி சகல சந்தர்ப்பங்களிலும் பேசப்படுகின்றதே தவிர, உற்பத்தியாளரின் செலவு குறித்து பேசப்படுவதில்லை. உற்பத்தியாளரிடமிருந்து, நுகர்வோருக்கு முட்டை கிடைக்கும் நிலை வரையான இடைவெளி குறித்த கவனம் செலுத்த வேண்டும்.

எனவே, இடைத்தரகர்களினால் ஏற்படும் இடைவெளியைக் குறைப்பதன் மூலம், முட்டை உற்பத்தி தொழிற்துறைக்கு சாதகத் தன்மையை ஏற்படுத்த முடியும்-என்றார். (அ)

## 30 ஆண்டு...

பாணம் வரும் கௌரவ ஜனாதிபதி அவர்கள் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக சைவ மக்களின் வழிபாட்டுத் தலங்கள் வழிபட முடியாமல் பாது காப்பு வலயம் என்ற பேரில் மக்கள் வழிபாடு செய்யும் உரிமை மறுக்கப்பட்டமையை கருத்தில் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் உண்மையான தர்மத்தைப் பேண வேண்டுமானால் எமது தொன்மை வாய்ந்த ஆலயங்களில் பூசை வழிபாடுகள் நடைபெறவேண்டும். கீரிமலை ஆதிச் சிவன் ஆலயம், கீரிமலை கிருஷ்ணன் கோவில், கீரிமலை சடையம்மா மடம், காங்கேசன்துறை சிவபூமி சுக்கிரவார திருவோணச் சத்திரம், வயாவிளான் மாம்பிராய் பிள்ளையார் கோவில், பலாலி இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோவில் போன்ற முக்கிய தலங்களும் வேறு சில ஆலயங்களும் விளக்கின்றி உள்ளன.

வடக்கில் பொங்கல் வழிபாட்டிற்கு வரும் தாங்கள் இவ்வாலயங்களை மக்களிடம் கையளித்து உதவ வேண்டும். காங்கேசன்துறையில் தல்செவன ஹோட்டலை நடத்தும் படையினர் பாரம்பரியமான சத்திரத்தை இடித்துவிட்டு தமது ஹோட்டல் வளவோடு சேர்த்து வைத்துள்ளனர். இவை சைவ மக்களின் மனதில் மிகுந்த வேதனையைத் தருகிறது. எனவே இவற்றை உடனடியாக உரியவர்களிடம் கையளிப்பதற்கு தாங்கள் நடவடிக்கை எடுப்பீர்கள் என சைவமக்கள் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். இவ்விடயம் தொடர்பாக கடந்த முப்பது ஆண்டுகளாக நாம் பதவியில் இருந்த பலரிடமும் முறையிட்டு எவ்வித பயனும் இல்லை. இந்த தருணத்திலாவது இப்பிரச்சினையைத் தீர்த்துவைக்குமாறு சைவமக்கள் சார்பில் நன்றியுடன் வேண்டுகிறோம்-என்றார். (அ)

## ஜனாதிபதி...

கிழமை நல்லூர் சிவன் ஆலயப் பகுதியில் நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமை தாங்குகிறார். இதில் பங்கேற்பதற்காகவே ஜனாதிபதி நேற்று யாழ்ப்பாணம் வருகை தந்தார்.

இந்தப் பொங்கல் விழாவில் பங்கேற்க, வடக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கியஸ்தர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் வரும் ஜனாதிபதி, வலி. வடக்கில் இராணுவத்தின் உயர்பாதுகாப்பு வலயப் பகுதியிலுள்ள காணிகளையும் சென்று பார்வையிடுவார். அவற்றில் ஒரு பகுதியை விடுவிக்கவும் நடவடிக்கை எடுப்பார். அத்துடன், பல்வேறு விடயங்களிலும் அவர் பங்கேற்பார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (த)

## தமிழ்த் தேசியக்...

5 தமிழ்க் கட்சிகளும் ‘ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி’ எனும் பெயரில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பாகத் தங்களைப் பிரகடனப்படுத்தியுள்ளன.

யாழ்ப்பாணத்திலுள்ள தனியார் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலுக்குப் பின்னர் 5 தமிழ்க் கட்சிகளும் பிற்பகல் 12.20 மணியளவில் புதிய கூட்டணிக்கான புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

ரெலோ சார்பாக அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதனும், புளொட் சார்பில் அதன் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தனும், ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் அதன் தலைவர் சுரேஷ் பிரேமசந்திரனும், தமிழ்த் தேசியக் கட்சி சார்பில் அதன் தலைவர் ந.சிறிகாந்தாவும், ஜனநாயகப் போராளிகள் கட்சி சார்பில் அதன் தலைவர் சிவநாதன் நவீந்திராவும் (வேந்தன்) இந்த உடன்படிக்கையில் கையெழுத்திட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகத் தம்மைப் பிரகடனப்படுத்தியுள்ள இந்தப் புதிய கூட்டணி எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ‘ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி’ எனும் பெயரில் ‘குத்துவிளக்கு’ சின்னத்தில் போட்டியிடவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையின் கடனை மறுசீரமைக்க சீனாவுடன் ஐ.எம்.எவ். பேச்சுவார்த்தை

கொழும்பு, ஜன. 15

சர்வதேச நாணய நிதியம், இலங்கையின் கடனை மறுசீரமைக்க சீனாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு வட்டமேசை ஊடக உரையாடலின் போது, சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜியேவா இதனைத் தெரிவித்தார்.

கடன் நிலைத்தன்மை மற்றும் அவர்களின் பங்களிப்புக்கான மார்க்கம் என்ன ஆகிய இரண்டையும், சீனாவுக்கு புரிய வைப்பதில் தாம் ஈடுபட்டுள்ளதாக அவர் இதன்போது குறிப்பிட்டார்.

சாட், சாம்பியா மற்றும் இலங்கை மற்றும் சூரினாம் ஆகிய நாடுகளின் கடனைத் தீர்ப்பதற்கான பாதையை வரையறுக்க சீனாவுடன் சர்வதேச நாணய நிதியம் ஈடுபட்டுள்ளது என்றும் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் கிறிஸ்டலீனா ஜோர்ஜியேவா தெரிவித்தார்.

தாம் சீனாவில் இருந்தபோது, நிதி அமைச்சகம் மற்றும் சீனாவின் மக்கள் வங்கி ஆகிய இரண்டு முக்கிய நிறுவன அதிகாரிகள் கூட்டத்திற்கு வந்தார்கள், இதன்போது அவர்களுடன் ஆக்கப்பூர்வமாகவும் வெளிப்படையாகவும் விவாதிக்கப்பட்டதாக சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் குறிப்பிட்டார்.

இதேவேளை, ஆசியாவின் இந்த போக்கினால் இந்தியா பாதிக்கப்பட்டுள்ளது என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் அண்டைய நாடுகளான இலங்கை மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகள் கடன் பிரச்னையில் சிக்கியுள்ளன. எனினும், சீனா தமது நடவடிக்கைகளில் மெதுவாகவே செயல்படுகிறது என்றும் ஜோர்ஜீயேவா குறிப்பிட்டார். ஒருங்கிணைந்த உலகப் பொருளாதாரத்தைப் பாதுகாக்க இது மிகவும் முக்கியமான நேரம் என்பதால், ஜி 20 இல் இந்தியாவின் தலைமையை தாம் அதிகம் நம்புவதாக ஜோர்ஜீயேவா கூறியுள்ளார். (அ)

## யாழ். விமான நிலையத்துக்கு அதிகளவு பயணிகள் வருகை



யாழ்ப்பாணம், ஜன.15

சென்னை விமான நிலையத்தில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையத்துக்கு நேற்று 67 பயணிகள் வந்துள்ளனர்.

இது விமான சேவை ஆரம்பித்து அதிக பயணிகள் வருகை தந்த நாளாகும்.

அத்துடன் யாழ்ப்பாணத்தில் இருந்து சென்னைக்கு 51 பயணிகளும் பயணித்துள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்துக்கு பயணிகளின் வருகை மற்றும் சென்னைக்கான புறப்பாடும் அதிகரித்துள்ளது.

இதேவேளை வல்வெட்டித்துறையில் இன்று இடம்பெறவுள்ள இசை நிகழ்ச்சிக்கு சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் விமான நிலையம் ஊடாக மூன்று தென்னிந்திய பாடகர் குழுவினரும் வருகை தந்துள்ளனர்.(அ)

## கடன் அட்டைகளில் தங்கம் கடத்திய பெண் சிக்கினார்!

கொழும்பு, ஜன. 15

11 கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியான தங்கத்தை இந்தியாவில் இருந்து இலங்கைக்கு கொண்டு வந்த பெண் ஒருவர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை சுங்கத் திணைக்களத்தின் பிரிவினருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் குறித்த பெண் நேற்று கைது செய்யப்பட்டார்.

இவர் டுபாயில் இருந்து சென்னை வழியாக நாட்டுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபர் கம்பஹா பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய பெண் ஆவார்.

குறித்த பெண்ணின் பயணப் பையில் ரூ. 111,550,000 பெறுமதியான 4,892 கிராம் 24 கரட் நகைகள் மற்றும் வங்கிப் பண அட்டைகள் போன்று செய்த 27 தங்கத் தகடுகள், 2,222 கிராம் தங்க துகள்கள் கொண்ட 8 கெப்ஸியூல்களும் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வெளிநாட்டு பணம் அனுப்பல் அதிகரிப்பு

கொழும்பு, ஜன. 15

கடந்த வருடம் வெளிநாட்டு பணியாளர்களின் பணவனுப்பல்கள் 46 சதவீதமாக அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இது கடந்த டிசெம்பர் மாதம் 475.6 மில்லியன் அமெரிக்க டொலர் வரை அதிகரித்துள்ளதாக அவர் தமது ருவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த தொகை கடந்த 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 325.2 மில்லியன் டொலராக காணப்பட்டது.

இந்த நிலையில் குறித்த தொகை 150 மில்லியன் அமெரிக்க டொடர்களால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# நாணய நிதியத்தின் ஆதரவை பெறுவதே இப்போது எமக்கு இருக்கும் ஒரே ஒரு வழி!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 15

ஒரு நாடு என்ற ரீதியில் நாம் எதிர்நோக்கும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்கும் அதேவேளை, ஒரு கொள்கைக் கட்டமைப்புக்குள் செயற்பட்டு அப்பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதே இப்போது எமக்கு இருக்கும் ஒரே வழி. இல்லையெனில், நாம் மீள முடியாது. அந்தப் பாதையில் செல்லப் போகிறோமா அல்லது வீழ்வதா என்பதை நாம்தான் தீர்மானிக்கவேண்டும் என்றும் அவர் கூறினார்.

தொழிற்சங்கப் பிரதிநிதிகளுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார மற்றும் நிதி நெருக்கடிக்குத் தீர்வு காண எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக ஜனாதிபதி மற்றும் பிரதமர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அரச, அரை அரச மற்றும் தனியார் தொழிற்சங்கத் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க , ஒரு நாடு என்ற வகையில் நம்பிக்கையை ஏற்படுத்த முடிந்திருப்பதன் ஊடாக சர்வதேச நாணய நிதியத்துடனான பேச்சுவார்த்தையை மேலும் வெற்றியடையச் செய்வதில் அரசாங்கம் வெற்றி பெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

இந்த வருடத்தின் முதல் காலாண்டின் பின்னர் நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றமடையும் என எதிர்பார்க்கப்படுவதாகத் தெரிவித்த ஜனாதிபதி, 2024ஆம் ஆண்டு இந்நிலையில் மேலும் முன்னேற்றம் ஏற்படும் எனவும் நம்பிக்கை வெளியிட்டார்.

நாட்டின் அபிவிருத்தியை முன்னெடுத்துச் செல்லும் அதேவேளை மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டுமாயின், அரச துறை மாத்திரமன்றி தனியார் துறையும் வலுப்பெற வேண்டுமென ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

இன்று மக்கள் படும் இன்னல்களை தாம் மறந்துவிடவில்லை எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க , எவ்வாறேனும் மக்களுக்கு நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவித்தார்.

“பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த நாட்டில் நாம் இருக்கிறோம். பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த ஒரு நாட்டின் மக்கள் எதிர்கொள்ளும் சிரமங்களை புதிதாகச் சொல்லத் தேவையில்லை. இன்று நாட்டு மக்கள் படும் இன்னல்களை நான் நன்கு அறிவேன். தொழில் வாய்ப்புகள் குறைவடைந்து செல்வதை நாம் பார்க்கிறோம். பணவீக்கம் காரணமாக குறிப்பாக வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது.

மக்களின் வாழ்க்கை முறை மாறி வருகிறது. அன்று இருந்த வசதிகள் தற்போது இல்லை. இதனால் கல்வி, சுகாதாரம் என அனைத்து துறைகளிலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. இவையனைத்தும் இந்தப் பொருளாதார வீழ்ச்சியால் ஏற்பட்ட நிலைமைகளாகும். இது எப்படி நடந்தது என்று இப்போது பேசிப் பயனில்லை.இப்போது அது முடிந்துவிட்டது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஆதரவைப் பெறுவதே இப்போது எமக்கு இருக்கும் ஒரே வழி. இல்லையெனில், நாம் மீள முடியாது. அந்தப் பாதையில் செல்லப் போகிறோமா அல்லது வீழ்வதா என்பதை நாம்தான் தீர்மானிக்க வேண்டும். இந்த வீழ்ச்சியடைந்த நாட்டை விரைவில் மீட்கவே முயற்சி எடுக்கின்றேன். ” - என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார். (அ)

## சமுர்த்தி பயன் கிடைக்காதோருக்கு 10 கிலோ அரிசி வழங்கப் பணிப்பு!

கொழும்பு, ஜன. 15

சமுர்த்தி பயன் கிடைக்கப்பெறாத 20 இலட்சம் குடும்பங்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதங்களில் தலா 10 கிலோகிராம் வீதம் அரிசி வழங்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (அ)


## பக்க வடிவமைப்பாளர் தேவை!



**பத்திரிகை பக்க வடிவமைப்புக்கு ஆட்கள் தேவை**

**Adobe InDesign, Adobe Photoshop**

**தெரிந்தவர்கள் - பத்திரிகை துறையில் அனுபவம் உள்ளவர்கள் (ஆண், பெண் இருபாலாரும்) விண்ணப்பிக்க முடியும்.**

விண்ணப்பங்களை

**eelanaduweekly@gmail.com**

என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அல்லது

**ஈழநாடு, இல. 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்**

என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.


# இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் புதிய தலைவராக ஜே.ஸ்ரீரங்கா தெரிவு

கொழும்பு, ஜன.15

இலங்கைக் உதைபந்தாட்டச் சம்மேளனத்தின் நிர்வாகக் குழுவுக்கான தேர்தல் நேற்று நடைபெற்றது.

தலைவர் பதவிக்கான தேர்தலில் ஜே.ஸ்ரீரங்கா 27 வாக்குகளையும் ஜகத் ரோஹண 24 வாக்குகளையும் பெற்றனர்.

இதன்படி ஜே.ரங்கா அதிக வாக்குகளைப் பெற்று தலைவராக தெரிவாகியுள்ளார்.

இதேவேளை, முன்னாள் தலைவர் யூ.எல். ஜஸ்வர் புதிய தலைவர் பதவிக்குப் போட்டியிடத் தகுதி பெறவில்லை. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 15.01.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**

6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.00 மணி : வில்லிசை-தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி



11.00 மணி : பொங்கலோ பொங்கல்- தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி



பகல்

12.00 மணி : தைப்பொங்கல் சிறப்பு நேரலை
1.00 மணி : BEAT BOX-நேரலை
1.30 மணி : வீக் என்ட் மூவி
4.30 மணி : நாட்டார் பாடல்



5.00 மணி : தைபிறந்தால் வழி பிறக்கும்- தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி




6.00 மணி : துள்ளுவதோ இளமை- தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி



7.00 மணி : SPOTLIGHT-ஊஏமு சிவஞானம்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : டான் பட்டிமன்றம்- தைப்பொங்கல் சிறப்பு நிகழ்ச்சி
10.00 மணி: -நேர்கொண்ட பார்வை

## DAN COMEDY HD

**காலை**

6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**

1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**

8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**

6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**

12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**

8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**

5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**

12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**

7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**

05.00 மணி : சிவாய மந்திரம்
06.00 மணி : சுப்ரபாதம்
06.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : திருமுறையும் பொருளும்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழககோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**

12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
06.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**

07.00 மணி : செய்திகள்
07.30 மணி : அருளுரை
08.00 மணி : திருவிழா-01

## CHANNEL HOLY MARY

**காலை**

7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : இயேசுவின் போதனைகள் (மறுஒளிபரப்பு)
8.00 மணி : ஜெபமாலை
09.30 மணி : மன்றாடு
10.00 மணி: விவிலியம் அறிவோம் (திருகோணமலை)
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)

**பகல்**

12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
03.00 மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
04.00 மணி: மறைக்கல்வி(மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி :நாளொரு நற்சிந்தனை (மறு ஒலிபரப்பு)
7.00 மணி : ஞானவழி
7.30 மணி : படம்

## Pirai Television

**காலை**

6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**

12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**

7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு